கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

243

ஐப்பசி
01.10.2024
100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



ஐங்கரன் விக்கினேஸ்வரா
வி.ஜீவகுமாரன்
வனஜா நடராசா
பேராசிரியர் சபா.ஜெயராசா
மலரன்னை
எம்.எம்.மன்ஸூர்
வ.கந்தசாமி
இரா.சம்பந்தன்
இராஜினிதேவி சிவலிங்கம்
முல்லைக் கோணேஸ்
வெலிகம ரிம்ஸா முஹம்மத்
அ.பௌநந்தி
செல்வகலா
சோ.தேவராஜா
கோகிலா மகேந்திரன்
வ.ந.கிரிதரன்
தமிழ்க்கவி

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024 - ஐப்பசி (01.10.2024)


# பொருளடக்கம்

சிறுகதைகள்
வி.ஜீவகுமாரன்– 05
மலரன்னை – 12
இரா.சம்பந்தன்– 20
முல்லைக்கோணேஸ் – 28



கவிதைகள்
எம்.எம்.மன்ஸூர் – 15
அ.பௌநந்தி – 19, 37, 45
செல்வகலா – 35
சோ.தேவராஜா – 30

நேர்காணல்
இராஜினிதேவி சிவலிங்கம் – 24




குறுங்கதை
வனஜா நடராஜா – 09

நூல் விமர்சனம்
ரிம்ஸா முஹம்மத் – 30

தொடர் நாவல்
வ.ந.கிரிதரன் – 33
தமிழ்க்கவி – 45

கட்டுரைகள்
**லியோ டால்ஸ்டாய்: உலக இலக்கியத்தின் உலராத ஊற்று! ரஷ்ய படைப்புக்களில் என்றும் வீசும் காற்று!**
ஜங்கரன் விக்கினேஸ்வரா – 03



**கலைகளும், நெகிழ் ஓட்டக் கோட்பாடும்**
பேராசிரியர் சபா.ஜெயராசா – 10

**சிந்துவெளி நாகரீகமும் தொல் நாகரீகமும்**
என்.கந்தசாமி – 16



**முடிவைத்தொடுவாய் முயன்று** - 10
கோகிலா மகேந்திரன் – 32

# ஜீவநதி

**2024 ஐப்பசி இதழ் – 243**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து
ஆக்கங்களின் கருத்துக்களுக்கும்
அவற்றை எழுதிய ஆசிரியர்களே
பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி
**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## நூல்களை பரிசளிப்போம்

ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதம் என்பது கொண்டாட்ட தினங்கள் நிறைந்த மாதமாக காணப்படுகின்றது. சிறுவர்தினம், முதியோர் தினம், ஆசிரியர் தினம் என மிகப்பெறுமதி வாய்ந்த தினங்கள் இந்த மாதத்தை அலங்கரிக்கின்றன. பரிசுப்பொருட்கள் குறித்த தினங்களில் பரிமாறப்படுகின்றன. உண்மையில் சிறந்த நூல்களை பரிசளித்தல் என்பது மிகச்சிறந்த செயலாக இருக்கும். பல பாடசாலைகளில் பிறந்த தினத்துக்கு உரிய பிள்ளை பாடசாலை நூலகத்துக்கு ஒரு புத்தகத்தை அன்பளிப்பு செய்கின்ற அருமையான செயற்பாடும் நடைபெற்று வருகின்றது.


இந்த மாதத்தை வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தி பாடசாலைகள், நூலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் கொண்டாடி வருகின்றன. நூலக கண்காட்சிகள், நூல்கள் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வாசிப்பின் முக்கியத்துவம் சார்ந்த சொற்பொழிவுகள் என்பவற்றை நடாத்தி நூல்களைக் கொண்டாடி வருகின்ற நிகழ்களைக் காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக சுன்னாகம் பொதுநூலகம் அண்மைக் காலமாக சிறப்பாக இந்த மாதத்தை கொண்டாடுகின்றது "எங்கட புத்தகத்தின்" கண்காட்சியையும் மேற் கொண்டு பல நூல்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்கின்றது. அத்தோடு இந்த மாதம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறையின் தமிழியல் மாநாட்டை முன்னிட்டு புத்தகக் கண்காட்சியும் இந்த மாதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டது பாராட்டிற்குரியது. ஜீவநதிப் பதிப்பகம், எங்கட புத்தகம், மொழிப் பதிப்பகம் ஆகியவை இந்தக் கண்காட்சியில் பங்கு பற்றியிருந்தன. மாணவர்கள் மிகுந்த ஆவலுடன் புத்தகங்களை பார்வை யிட்டனர். இவ்வாறான வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் வாசிப்பின் ஆர்வத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தலாம். பல மாணவர்கள் புத்தகங் களை வாங்கி நண்பர்களுக்கு பரிசளித்ததையும் காணக் கூடியதாகவிருந்தது. சாதாரணமாக ஒரு பரிசுப்பொருளை வழங்குவதைவிட அறிவுக் களஞ்சிய மான நூல்களை பரிசளித்தல் என்பது மிகச்சிறந்த செயலாக அமையும். கொழும்பு, மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் இந்தக் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதை காண்கின்றோம். உண்மையில் மாணவர்களுக்கு நூல்களை காட்சிப்படுத்துகின்ற வேளையில் மிகுந்த ஆர்வத்துடன் அவற்றை பெற்று வாசிக்கத் தூண்டப்படுகின்றார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், நூலகர்கள் நல்ல நூல்களை அறிமுகம் செய்ய வேண்டும். வாசிப்பு தொடர்ச்சியாக ஒரு பிள்ளையிடம் ஏற்படுமாயின் அப்பிள்ளை பிழையான வழியில் செல்லாது, நேர விரயம் தடுக்கப்படும். நூல்களை பரிசளித்தல் என்பதை விட சிறந்த காரியம் எதுவாக இருக்கும்.

- க.பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்

ஜங்கரன் விக்கினேஸ்வரா



# லியோ டால்ஸ்டாய்: உலக இலக்கியத்தின் உலராத ஊற்று ! ரஷ்ய படைப்புகளில் என்றும் வீசும் காற்று !

*2003 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பிபிசியின் கருத்துக்கணிப்பொன்றில் லியோ டால்ஸ்டாயின் "போரும் அமைதியும்" நூல் 20ம் இடத்தை பெற்றிருந்தது. 2009இல் நியூஸ்வீக் வெளியிட்ட முதல் 100 நூல்களில் இந்நூல் முதலிடத்தைப் பிடித்தது.*

*ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையினை அற்புதமாக விளக்கவும் செய்த லியோ டால்ஸ்டாய் காலம் கடந்தும் அனைவராலும் அவரது எழுத்துக்கள் வாசிக்கப்பட்டு வருகின்றன. இதனாலேயே ரஷ்ய இலக்கியத்தில் தவிர்க்க முடியாத பெயராக லியோ டால்ஸ்டாய் விளங்குகிறார்.*

**உலக இலக்கிய ஊற்று :**

ரஷ்ய இலக்கியமென்பது உலக இலக்கியத்தின் உலராத ஊற்றுகளிலொன்று. ஆயினும் தற்போது நடைபெறும் ரஷ்ய - உக்ரைன் யுத்தம் காரணமாக மேற்கு நாடுகள் ரஷ்யா மேல் பல்வகை தடைகளை விதித்து வருவதன் நிலையோ ரஷ்ய நூல்கள் மீதான இந்தப் புறக்கணிப்பும் என்ற எண்ணம் தோன்றாமலில்லை. ரஷ்ய இலக்கிய வாசத்தினை யாராலும் தடுக்க முடியாது. மறைக்க முடியாது. உலக இலக்கியத்துக்கு அதன் பங்களிப்பென்பது போற்றுதற்குரியது.

இலங்கையில் இந்தியப்படைகள் மேலோங்கியிருந்த சமயத்தில் இந்திய தேசிய விடுதலைக்காகக் குரல் கொடுத்த பாரதியின் எழுத்துகளை நாம் ஒரு போதும் எதிர்க்கவில்லை.

லியோ டால்ஸ்டாய் புதின எழுத்தாளர்களுள் மிகச் சிறந்தவர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். இவரது மிகச் சிறந்த ஆக்கங்களான போரும் அமைதியும், அன்னா கரேனினா ஆகியவை, 19 ஆம் நூற்றாண்டு ரஷ்ய வாழ்க்கையை விபரிப்பதில் உண்மை வாதப் புனைகதைகளின் உயர்நிலையைக் காட்டுகின்றன.

லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoy) 1828-ம் ஆண்டு செப்டம்பர் 9இல் பிறந்தார். காலம் கடந்தும் அனைவராலும் அவரது எழுத்துக்கள் வாசிக்கப்பட்டு வருகின்றன. நாவல்கள் உட்பட சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், சிறுவர்களுக்கான நீதிக்கதைகளும் எழுதியுள்ளார். இவருடைய அன்னா கரீனீனா, போரும் அமைதியும் போன்ற நாவல்கள் புகழ்பெற்றது. டால்ஸ்டாய் இறுதி வரை வன்முறைகளுக்கு எதிராகவே வாழ்ந்து வந்துள்ளார். பாராட்டுவதற்கான கலைச்சிறப்புடைய நூல்களை மட்டும் டால்ஸ்டாய் படைக்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையினை அற்புதமாக விளக்கவும் செய்தார் என டால்ஸ்டாய் மறைவின் போது லெனின் எழுதிய அஞ்சலிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரபுத்துவ வரலாறு**

லியோ டால்ஸ்டாய், மத்திய ரஷ்யாவில் உள்ள யஸ்யானா போல்யானாவில் பிறந்தார். டால்ஸ்டாய்கள் ரஷ்யாவில் பெயர்பெற்ற பழைய பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ரஷ்ய உயர்குடியின் பெரும் குடும்பங்களுடன் தொடர்புகளைக் கொண்டவர்கள். அலெக்சாண்டர் புஷ்கின், லியோ டால்ஸ்டாயின் உறவினராவார். லியோ டால்ஸ்டாய் வகுப்பு உணர்வு கொண்டவராக இருந்தார். உலகப் பிரபல்யமான "போரும் அமைதியும்" ஐந்து ரஷ்ய அரச குடும்பங்களின் பார்வையில், ரஷ்ய மீதான பிரான்சியப் படையெடுப்பை அடுத்த நிகழ்வுகளையும் சார்மன்னர் சமூகத்தில் நெப்போலிய காலத்தின் தாக்கத்தையும் விரிவாக விவரிக்கின்றது.

**போரும் அமைதியும் நாவல் :**

போரும் அமைதியும் (War and Peace, ரஷ்ய மொழி)

ருசிய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் எழுதிய புதினம் ஆகும். இந்த நூல் முழுமையாக 1869ஆம் ஆண்டு முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டது. இதிகாச அளவிலான இந்நூல் உலக இலக்கியத்தில் மிகவும் முதன்மையானதாக இன்றும் கருதப்படுகின்றது. இதுவும் டால்ஸ்டாயின் மற்றொரு படைப்பான அன்னா கரேனினாவும் (1873–1877) அவரது சிறந்த இலக்கியச் சாதனையாக பல காலங் காலமாக கருதப்படுகின்றன.

டால்ஸ்டாய், போரும் அமைதியும் "புதினமல்ல, கவிதையுமல்ல, வரலாற்று பதிவேடுமல்ல" எனக் கூறியுள்ளார். 2003 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பிபிசியின் கருத்துக்கணிப்பொன்றில் இப்புதினம் 20 இடம் பெற்றிருந்தது. இப் படைப்பின் பெரும்பகுதி, குறிப்பாக பிந்தைய அத்தியாயங்களில், கதை விவரிப்பாக இல்லாமல் மெய்யியல் விவாதமாக உள்ளன. ருசியாவின் சிறந்த இலக்கியப் படைப்பு எந்த வொரு சீர்தரத்திலும் சிக்கிக் கொள்ளக்கூடாது என்றார். இப்புதினம் முழுமையாக 1869இல் பதிக்கப்பட்டது. 2009இல் நியூஸ்வீக் வெளியிட்ட முதல் 100 நூல்களில் முதலிடத்தைப் பிடித்தது.

எனவே போரும் அமைதியும் நூலை டால்ஸ்டாய் "புதினம்" என அழைக்கத் தயங்கினார். அவரது கூற்றுப் படி அவரது முதல் புதினம் அன்னா கரேனினா ஆகும். 19 ஆம் நூற்றாண்டு பிரிட்டிஷ் கவிஞர் மற்றும் விமர்சகர் மத்தேயு அர்னால்ட் "டால்ஸ்டாய் எழுதிய ஒரு நாவலானது கலையின் வேலை அல்ல, மாறாக வாழ்க்கையின் ஒரு சிறு பகுதி" என்று கருதுகிறார்.

**தமிழில் மொழிபெயர்ப்பான நாவல்**

டி. எஸ். சொக்கலிங்கம் இப்புதினத்தை தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.

சிறந்த இதழியலாளர் மட்டுமல்ல, சொக்கலிங்கம் சிறந்த படைப்பு இலக்கியவாதியும் ஆவார். லியோ டால்ஸ்டாயின் புகழ்பெற்ற நாவலான போரும் அமைதியும் என்ற நாவலை தமிழாக்கம் செய்தார். இது தவிர, சிறுகதை, நாவல், கவிதை என இலக்கியத்தின் அத்தனை துறைகளிலும் சிறப்பான பங்கினை நல்கியுள்ளார் சொக்கலிங்கம். லியோ டால்ஸ்டாய் ரஷ்ய இலக்கியத்தின் மாபெரும் எழுத்தாளர்களில் ஒருவராவார். அவரது படைப்புகளில் போரும் அமைதியும் மற்றும் அன்னா கரேனினா மற்றும் ஹதாஜி முரத், இவான் இலிச்சின் மரணம் ஆகியவை போற்றுதலுக்குறிய படைப்புகளாகும். விமர்சகர்கள் மற்றும் நாவலாசிரியர்கள் டால்ஸ்டாயின் கலைக்கு தாங்களே அத்தாட்சிகளாய் இருந்திருக்கின்றனர். விர்ஜினியா வூல்ஃப் ஒரு படி மேலே டால்ஸ்டாயை அனைத்து நாவலாசிரியர்களையும் விட மிகச்சிறந்தவர் என்று அறிவித்தார்.

**அன்ரோன் செக்கோவ் நட்பு :**

டால்ஸ்டாயின் சமகாலத்தவர்கள் அவருக்கு உயர்ந்த மரியாதை செலுத்தினார்கள். பியோடார் தாஸ்தொவெஸ்கி அவரை அனைத்து நாவலாசிரியர்களை விடவும் மிகப்பெரியவராக கருதினார். போரும் அமைதியும் மொழிபெயர்ப்பைப் படித்தபோது கஸ்டவ் புளூபெர்ட், டால்ஸ்டாய் ஒரு சிறந்த கலைஞர் மற்றும் சிறந்த உளவியலாளர் என்று விபரித்தார்.

அன்ரோன் செக்கோவ் அவர்கள், டால்ஸ்டாயை சந்திப்பதற்கு அடிக்கடி வருகை தருவதுண்டு, அன்டோன் அவர்கள் டால்ஸ்டாயைப் இவ்வாறு போற்றுகிறார், "இலக்கியம் டால்ஸ்டாய் போன்றோர் வைத்திருக்கும் போது, ஓர் எழுத்தாளராக இருப்பதற்கு எளிதானது, இனிமையானது நீங்கள் எதையாவது சாதித்துவிட்டீர்கள் அல்லது இன்னமும் எதையும் சாதிக்கவில்லை என்று தெரிந்தாலும் கூட, அது வேறு விதமாக இருக்கலாம், ஏனெனில் டால்ஸ்டாய் எல்லோருக்காகவும் சாதிக்கிறார். ஏனெனில் இலக்கியத்தில் முதலீடு செய்யப்படும் அனைத்து நம்பிக்கைகளையும் அபிலாஷைகளையும் அவர் நியாயப்படுத்துகிறார் எனக் கூறியுள்ளார்.

போரும் அமைதியும் எழுதப்பட்ட நாவல்களிலே மிகப் பெரிய நாவல்களில் ஒன்று, அதன் வியத்தகு அகலத்திற்கும் ஒற்றுமைக்கும் குறிப்பிடத்தக்கது. அதன் பரந்த கதைக்களம்580 கதாபாத்திரங்களை உள்ளடக்கியது, பல வரலாற்றுடன் மற்றும் கற்பனை கலந்து உள்ளது. இந்தக் கதையானது குடும்ப வாழ்க்கையிலிருந்து தொடங்கி நெப்போலியனின் தலைமையகத்திற்கும், ரஷ்யாவின் அலெக்ஸாண்டர் நீதிமன்றத்திற்கும், ஆஸ்டெர்லிட்ஸ் மற்றும் போரோடினோ போர்க்களத்திற்குள்ளும் நகர்கிறது.

**வரலாற்றின் தத்துவ புதினம் :**

இந்த நாவல் டால்ஸ்டாயின் வரலாற்றின் தத்துவத்தையும், குறிப்பாக நெப்போலியன் மற்றும் அலெக்ஸாண்டர் போன்ற தனிநபர்களின் முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது. ஆச்சரியப்படத்தக்க வகையில், டால்ஸ்டாய் போரும் அமைதியும் ஒரு நாவலாக அவர் கருதவில்லை. அந்த நேரத்தில் எழுதப்பட்ட பெரும் ரஷ்ய கற்பனைகளில் பலவற்றை நாவல்கள் என்று அவர் கருதினார். அன்னா கரேனினா, போரும் அமைதியும் நாவல்கள் மிகப்பெரிய பாராட்டுக்களைப் பெற்றபோதும் டால்ஸ்டாய் அந்தப் பாராட்டுகளை நிராகரித்தார். அன்னா கரேனினா நிகழ்நிலை புனைவுகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

முதலில் எழுதிய போரும் அமைதியும் ஆக்கத்தை டால்ஸ்டாய் புதினத்திற்கும் மேலானதாகக் கருதியதால் இதனையே தம்முடைய முதல் உண்மையான புதினமாக கருதினார். மேலும் பின்னாளில் அந்த நாவல்கள் வாழ்க்கையின் உண்மையான யதார்த்தத்தைக் காட்டவில்லை என்றும் வாதிட்டார். "போரும் அமைதியும்" படைத்த லியோ டால்ஸ்டாய் உலகின் மகத்தான இலக்கிய சிருஷ்டியே ! லியோ டால்ஸ்டாய் படைத்த புதின இலக்கிங்களினால் வையக வரலாற்றில் ஒரு மகத்தான இலக்கிய சிருஷ்டியாகவே மிளிர்கின்றார். போரும் அமைதியும் புதினமானது உலக இலக்கியத்தின் உலராத ஊற்றாகும். லியோ டால்ஸ்டாய் ரஷ்ய படைப்புகளில் என்றும் ஒளிரும் விடிவெள்ளியே !

வி. ஜீவகுமாரன்

# போற்றி... போற்றி...



டென்மார்க் உங்களை வரவேற்கின்றது!

எந்த விமானத்தில் எந்த நாட்டில் இருந்து வந்தாலும் விமானத்தில் இருந்து வெளியே வரும் போது கொப்பனேகன் விமானநிலையத்தில் இந்த வாக்கியங்கள் அடங்கிய பதாகைகள் கண்களில்படும்.

மனித பெண்ணின் மேல் உடம்புடனும் மீனின் கீழ் உடம்புடனும் கடற்கரையில் உள்ள பெரிய கல் மீது அமர்ந்து... ஆண்டாண்டுகளாக தன் காதலன் திரும்பி தன்னிடம் மீண்டும் வருவான் என்ற ஏக்கத்துடன் கடலை யும் தூரத்தே செல்லும் கப்பல்களையும் பார்த்தபடி அமர்ந்திருக்கும் கடற்கன்னியின் ஓவியம்...

கோடைகாலம் என்றாலும் சரி... குளிர் காலம் என்றாலும் சரி... மக்கள் மகிழ்ச்சியாக திளைத்திருக்கும் உள் - வெளி விளையாட்டுத் திடல்கள்.... கிராமங்கள் - வயல் வெளிகள் - மலைப்பாங்கான இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் இடங்களில் சைக்கிள்களில் குடும்பம் குடும்பமாக குதூகலித்துச் செல்லும் பேரழகு... பசிய புற்தரையில் கூட்டம் கூட்டமாக மேயும் மாடுகள்....

இத்தியாதி இத்தியாதி படங்களின் இணைப்புகள் ஊடாக டென்மார்க் உங்களை வரவேற்கின்றது என்ற வாசகம் வந்திறங்கும் பயணிகளை உற்சாகப்படுத்தும்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தொடங்கிய பயணம் டுபாயில் தரித்து நின்ற இரண்டு மணித்தியா லத்தையும் சேர்ந்து 14 மணித்தியாலங்கள் எவர்க்கும் சற்றுக் களைப்பை ஏற்படுத்தான் செய்யும்.

சபேசன் ஐயாவும் அதற்கு விதிவிலக்கல்ல.

அதுவும் முதல் விமானப்பயணம்.

கத்தி கரண்டி கொண்டு சாப்பிடுவது தொடக்கம்... குந்தி இருந்தலுக்குப் பதிலாக கதிரையில் அமர்ந்திருந்து மெல்லிய ரிசூவால் சுத்தம் செய்வது வரை அத்தனையும் அவருக்குப் புதிதே.

முதலில் பின் சில்லுகள் இரண்டும் பின்பு முன் சில்லும் தரையில் தொட... தன் வேகத்தைக் குறைத்து விமானம் தரிப்பிடம் வந்த பொழுது மெல்லிய அராபிய இசையின் பின்னணியில்...விமான ஓட்டியின் "இன்றைய நாள் உங்களுக்கு நல்ல நாளாக அமையட்டும். மீண்டும் சந்திப்போம்" என்ற வாழ்த்துச் செய்தியைத் தொடர இருக்கைப் பட்டிகளின் வெளிச்சம் அணைய அனைத்துப் பயணிகளும் தங்கள் தங்கள் ஆசனத்தில் இருந்து எழுந்து... தலைக்கு மேலே இருந்த சிறிய பயணப் பொதிகளை எடுத்துக் கொண்டு சாரைப்பாம்பு ஊர்வது போல முன்னோக்கி நகரத் தொடங்கினார்கள்.

கொஞ்சம் பயந்தவர் போல் வெளியே வந்த சபேசன் ஐயரை விமானநிலையப் பொலிஸார் தடுத்து நிறுத்தி அவரின் பாஸ்போட்டை வாங்கிப் பார்த் தார்கள்.

உண்மையான பாஸ்போர்ட், உண்மையான விசா என்றாலும் ஐயாவுக்கு சின்னதாக ஒரு உதறல்.

நீல நிற உடை - தோளிலும் கையின் மேற்கட்டி லும் இருந்த பல பட்டிகள் - இடுப்பில் அகலப்பட்டி - அதில் செருகப்பட்டிருந்த கைத்துப்பாக்கி அனைத்தும் சேர்ந்து அவரின் உதறலுக்கு காரணமாக இருக்கலாம்.

சற்றே தாமதிக்கச் சொல்லி விட்டு பக்கத்தே இருந்த அறைக்குள் சென்று கம்பியூட்டரில் ஐயாவின் பாஸ்போர்ட்டை பரிசோதிப்பது கண்ணாடிச் சுவர் களினூடு தெளிவாகத் தெரிந்தது.

மனதினுள் சின்னதொரு பதட்டம்.

முருகன் கைவிடமாட்டான் என உள் மனது சொல்லிக் கொண்டிருந்தது.

சுமார் 5 நிமிடத்தின் பின்னர் சிறிய புன்னகை யுடன் வெளியே வந்த பொலிஸ்காரர் "வெல்கம் ரூ டென்மார்க்" என்று கூறியபடி ஐயாவிடம் அவரின் பாஸ்போட்டைக் கையளித்தார்.

கூடவே "ஹப்பி பேர்த்தேடே" என வாழ்த்தினான்.

சபேசன் ஐயாவுக்கு வியப்பாக இருந்தது.

அன்றுதான் அவரின் பிறந்ததினம் என்பதனை பொலிஸ் பாஸ்போர்ட்டில் அவதானித்திருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டார்.

"தாங்ஸ்" புன்னகையில் வார்த்தையை உதித்தபடி பாஸ்போர்ட்டை இரண்டு கைகளாலும் பவ்வியமாக வாங்கிக் கொண்டார்.

***

சபேசன் தில்லையம்பலம் என்பது முழுப் பெயராய் இருந்த போதிலும் சென்றவருடம் தனது 60 வயதில் பென்சன் பெறும் வரையிலும் கலட்டி தமிழ் கலவன் பாடசாலையில் அனைத்து வகுப்புக்கும் சைவசமய வகுப்பு போதித்த காரணத்தாலும்... இந்தியா சென்று தமிழில் பூஜை செய்ய கற்று வந்ததாலும் ஊரே அவரை சபேசன் ஐயா என்றே அழைத்தது.

அத்துடன் ஊரில் இருந்த இரண்டு கோயில்களில் வெள்ளிதோறும் என்றாலும் சரி... திருவிழாக்காலங் களில் சுவாமி ஊர்வலத்தின் பின்னாலும் அவரின் வழி நடத்தையிலேயே பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறும்.

குரலில் அப்படி இரு தெய்வீகம்... கம்பீரம்... உச்சஸ்தாயியில் பாடும் போது குரலில் எங்கும் பிசிறு தட்டாது. கீழ்ஸ்தாயியில் பாடும் போது கேட்போரின் கண்கள் பனிக்கும்.

"என்ன கவி பாடினாலும் உந்தன் மனம் இரங்க வில்லை" என்ற பாடல்தான் அவரின் ரேட்மார்க் என ஊரே மெச்சும்.

அவரது 56வது வயதில் ஊருக்குள் புகுந்த கொரோனா அவரை தனிமரமாக்கி விட்டு அவரின் மனைவியைக் கொண்டு போயிற்று.

பிள்ளை பாக்கியம் என்று எதுவும் இல்லை. கடைசிவரை சபேசன் அம்மா பிடிக்காத கந்தசஷ்டி விரதம் எதுவும் இல்லை. 3 மிளகுடனும் 3 மிடறு தண்ணீருடனும் 25 வருடம் போராடிப்பார்த்தார் - தன் மாதவிலக்கு நிற்கும் வரை.

முருகனின் மனம் இரங்கவில்லை.

ஓய்வூதியம் பெற்ற பின்பு வந்த ஒரு சந்தர்ப்பம் தான் டென்மார்க்கில் ஒரு கோயிலுக்கு பூசராகும் வாய்ப்பு.

இலண்டன் கனடா போன்ற அதிக தமிழ் மக்கள் வாழும் சமஸ்கிருதம் தெரிந்த ஐயர்மாருக்கு அதிக மௌசும் பணவரவும் இருந்ததால் டென்மார்க் போன்ற சிறிய நாடுகளுக்கு ஐயர்மாரை இறக்குமதி செய்வதில் பெரும் இடர்பாடு நிலவியது. எனவே தான் தமிழில் பூஜை செய்யும் ஐயர்மாருக்கு வாய்ப்புகள் வரத் தொடங்கியது.

கோயில் நிர்வாகம் கொடுக்கும் சம்பளம் - அர்ச்சனை தட்டில் விழும் காசுகள் - கோயிலில் இலவச வசிப்பிடம் என்பவனவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த் தாலும் இலங்கைக்காசுக்கு மாதாந்தம் இரண்டு இலட்சத் துக்கு குறைவில்லாத வருமானம். மேலும் வீடுகளில் துடக்குகழிப்பு - ஆட்டத்திவசம் - அந்தியேட்டி - வீடு குடிபூரல், இத்தியாதி இத்தியாதி என்பன உதிரியாக கிடைக்கக் கூடிய வருமானங்கள்.

இத்தனையும் சேர்த்தே சபேசன் ஐயாவை டென்மார்க்கிற்கு வர வைத்தது.

இலங்கையில் கிடைக்கும் பென்சன் பணத்தை மாதாந்த நிரந்தர வைப்பில் இட வங்கியில் ஒழுங்கு செய்து விட்டு தனது வீட்டை சைவ வகுப்பும் இசை வகுப்பும் நடாத்த வாடகை ஏதுமின்றி அங்குள்ள 2 ஆசிரியர்களிடம் ஒப்படைந்து விட்டு சிறிலங்கன் எயர் லைனின் ஏறிய பயணம் தான் இன்று காலை எமிரேட்ஸ் விமானம் வழியே டென்மார்க் வந்தடைந்தது.

டுபாயில் இரண்டு மணிநேரம் ஒரு விமானத்தில் இருந்து இறங்கி மறுவிடானத்துக்காக காத்திருந்த போது உடலுக்கும் மனதுக்கும் கால்களுக்கும் நிம்மதி யாக இருந்தது.

அந்த விமானத்தின் சாதாரண பயணிகளுக்காக இருக்கைகள் என்பது தியேட்டரில் கலரியில் இருந்து படம் பார்ப்பது போலத்தான் - ஒழுங்காக காலைக் கையை நீட்டி இருக்க முடியாது. அக்கம் பக்கம் சாயமுடியாது.

சாப்பிடும் போது றொபேட் சாப்பிடுவது போலத் தான் சாப்பிட வேண்டும் - அல்லது உடையில் சாப்பாடு கொட்டி விடும்.

***

இமிக்கிரேஷன் - கஸ்டம்ஸ் என்று எந்த இடத்தி லும் எந்த தடங்களும் இன்றி விமானநிலையத்தை விட்டு வெளியே வந்த பொழுது கோயில் நிர்வாக சபையினர் மூவர் கையில் பூமாலையுடனும் "அவனருலாலே அவன் தாள் வணங்கி" என்று பொறித்த ஒரு மஞ்சள் நிற சால்வையுடனும் நின்றிருந்தார்கள்.

அத்துடன் ஒரு ஐந்து வயது மதிக்கத்தக்க சிறுவன் கையில் சிறியதாய் சதுர வடிவில் இரண்டு சிவப்பு கட்டங்களும் பெரியதாய் இரண்டு நீள்சதுர வடிவில் சிவப்புக்கட்டங்களும் நான்கு கட்டங்களையும் பிரிக்கும் தடித்த வெள்ளைநிற கீலங்களையும் கொண்ட டென்மார்க்கின் தேசியக் கொடியுடன் நின்றிருந்தான்.

ஐயருக்கு சால்வையும் போர்த்து மாலையும் அணிவித்து தம் மகிழ்ச்சியை நிர்வாகத்தினர் தெரிவித்த பொழுது அச்சிறுவன் தன் கையில் வைத்திருந்த சிறிய டென்மார்க் கொடியை ஐயருக்கு நீட்டினான்.

ஐயர் அவனின் கன்னத்தை செல்லமாக தடவிய படி பெற்றுக் கொண்டார்.

எல்லோரும் சென்று காரில் ஏறிக் கொண்டார்கள்.

அது நிர்வாக சபைத்தலைவரின் கார்.

இலங்கையில் மந்திரிகள் பெரிய முதலாளிகள் தான் இப்படி கார் வைத்திருப்பார்கள் என ஐயரின் வெள்ளாந்தி மனம் சொன்னது.

"பாருங்க ஐயா... வெள்ளிக்கிழமை இதைவிட பெரிய கார் எல்லாம் கோயிலுக்கு வரும்" தலைவருக்கு என்றுமே எதிர்கட்சியில் இருக்கும் தனாதிகாரி சொல்லி விட்டு ஒரு நமுட்டுச் சிரிப்பை உதிர்த்துக் கொண்டார்.

தலைவர் கொஞ்சம் கடுப்பானாலும் அதனை வெளிக் காட்டவில்லை.

கார் ஆட்டம் அசைவில்லாமால் விரைவுப் பாதை யின் அகலத் தெருக்களில்மிதந்து கொண்டிருந்தது.

"குடிமனையை விட காடுகளும் வயல்களும் தான் டென்மார்க்கில் அதிகம் போல இருக்கு" ஐயர் அதிசயப் பட்டார்.

"ஐயா இந்த நாடு இலங்கையை விட கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பெரிசு. ஆனால் சனத்தொகையிலை இலங்கை மூன்றரை மடங்கு பெரிது"

"இதெல்லாம் துள்ளியமாய் தெரிந்து வைத்திருக் கிறியள்" ஐயர் ஆச்சரியப்பட்டார்.

"இப்படி பல விடயங்கள் தெரிந்திருந்தால் தான் இங்கு குடியுரிமை தருவார்கள்" தலைவர் சொல்ல காரிய தரிசி தொடர்ந்தார்.

"இன்னும் போகப் போக டென்மார்க்கின்ரை எத்தனையே விடயங்கள் உங்களை ஆச்சரியப்பட வைக்கும். இந்த நாட்டில் இனத்துவேசம் இல்லை... வறுமை இல்லை... ஊழல் இல்லை... இலஞ்சம் இல்லை..."

"புண்ணியபூமி" என்று சொல்லுறியள்.

"யெஸ் - இந்த நாட்டின் சட்ட திட்டங்களை நாங் களும் மதிக்கணும்... எங்களுக்கு இந்த நாட்டில் பல கடமைகள் உண்டு. அதுபோல எங்களுக்கான உரிமை கள் உண்டு. அவ்வாறான ஒரு உரிமையால் தான் எங் களுக்கு இந்தக் கோயிலை நடாத்த எங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். இப்படி எத்தனையோ விடயங்களை போகப்போக பார்க்கத்தானே போவீங்கள்"

எல்லோர் நடுவில் இருந்த அந்தச் சிறுவன், "இங்கே பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் அடிக்கமாட்டார்கள். அப்பிடித்தான் பெரியவர்களும் அடிபடமாட்டார்கள். அடிபாட்டுக்கும் போகமாட்டார்கள்"

ஐயரின் மனது டென்மார்க்கை தராசின் ஒரு தட்டிலும் இலங்கையை மறுதட்டிலும் வைத்துப் பார்த்தது.

தராசின் நடுமுள் டென்மார்க் பக்கமே சாய்ந் திருந்தது.

அவர் புறப்படுவதற்கு முதன் நாள் கூட வெள்ளை வானில் வந்து யாரையோ வெட்டிவிட்டுப் போயிருந் தார்கள். அதுவும் கனடாவில் தொடங்கிய ஒரு பொதுப் பிரச்சனைக்கு யாழ்ப்பாண ஐந்து லாம்படிச் சந்தியில் கணக்கு தீர்க்கப்பட்டது என ஊரே கதைத்துக் கொண்டது.

சுவாரஸ்யமான கதைகளுடன் கார்பயணம் அமைந்ததாலோ என்னவோ கோயிலடியை கார் வந்து அடைந்தது தெரியவில்லை.

கோயில் - வெளிவீதி - வெளிவீதியை ஒட்டிய ஐயருக்கான சிறிய வீடு - சுற்றிவர கோதுமை வயல்கள் - தூரத்தில் பண்ணை வீடுகள்.

ஐயர் கால்களை அலம்பிக் கொண்டு மூலஸ் தானத்தை வணங்கினார்.

"அழகாகத்தான் வடிவமைத்திருக்கிறியள்" ஐயர் வியர்ந்தார்.

"எத்தனையோ இலட்சம் டென்மார்க் குறோன் களையும் எங்களின் உடல் உழைப்பையும் கொட்டியிருக் கிறம் தெரியுமா" தலைவர் பெருமிதப்பட்டார்.

"இவர் எத்தினை போட்டவர்... எத்தனை நாள் வந்து உழைத்தவர் என்று எங்களுக்குத் தானே தெரியும்" என காரியதரிசி கணக்காளரின் காதை மெதுவாகக் கடித்தார்.

கணக்காளர் அடக்கி வாசிக்கும் படி கையை மெது வாக பதிவாக அசைத்துக் காட்ட காரியதரிசி மௌன மானார்.

எந்த ஆளும்கட்சிகளுக்கும் அல்லது எதிர்கட்சி களுக்கும் உள்ளேயுள்ள உட்கட்சிப் பூசல் இங்கே இல்லா விட்டால் தான் அது உலகத்தின் எட்டாவது அதிசய மாகிவிடுமே!

பின்பு ஐயருக்கு அவரின் வீடு - சமையல் கட்டு - பாத்திரங்கள் - குளியளறை எல்லாவற்றையும் காட்டி விட்டு அவருக்காக வாங்கி வைத்திருந்த அரிசி மற்றும் மரக்கறிகளையும் காட்டி விட்டு அன்று பின்னேரப் பூஜையின் பொழுது பிற நிர்வாக உறுப்பினர்களையும் சந்திப்போம் என விடை பெற்றுக் கொண்டார்கள்.

ஐயர் உடனே தன் அறைக்குச் செல்லாமல் கோயிலின் ஒரு தூணுடன் அமர்ந்து தான் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையினை அசைபோட்டுக் கொண்டு இருந்தார்.

பொண்வண்டுகளை பிடித்து சேட்டு பொக்கற்றுக் குள் சேர்த்த சிறுவயது சைக்கிள் பாறுக்கிடையே கால்களை விட்டு ஓடி விழுந்த இளம் பராயம் - எந்தக் குழப்படியோ குறும்போ கலக்காத பாடசாலை வாழ்க்கை பெற்றோர்களாக பார்த்து செய்து வைத்த திரு மணம் - அது வாழ்க்கையில் தந்த மறக்கமுடியாத நினைவுகள் - பின் தனிமரமாய் - இப்போது டென்மார்க்கின் ஒரு ஆலயத்தின் தூணில் சாய்ந்தபடி.... தன் வாழ்க்கையை என்றுமே தான் தீர்மானிக்காத மாதிரி கடலில் மிதக்கும் தேங்காய் மட்டை மாதிரி நினைவுகள் தாலாட்ட பயணக்களையும் சேர்ந்து சற்றுக் கண்ண யர்ந்து தூங்கிவிட்டார்.

***

மாலைப்பூஜை 7 மணிக்குத்தான்.

ஆனாலும் புது ஐயரைப் பார்க்கவும் அவருடன் அளவளாவுவதற்குமாக ஆறு மணிக்கே அடியார்களும் மற்ற நிர்வாக உறுப்பினர்களும் வரத் தொடங்கி விட்டார்கள்.

ஐயரும் புன்னகை மாறாத தன் முகத்துடனும் எளிமையாக பேசும் பாங்குடனும் ஒவ்வொருவர் கேட்கும் கேள்விகளுக்கும் பதிலைச் சொல்லிக் கொண்டு வந்தார்.

அதில் குறிப்பாக ஒரு நிர்வாக உறுப்பினர் ஐயரின்

ஊர் விபரம் கேட்டார் - பின் அவர் அந்த ஊரில் எந்த வட்டாரம் எனக் கேட்டார் - பின் அந்த வட்டாரத்தில் எந்த தெரு எனக் கேட்டார் - கடைசியில் அந்த தெருவில் எந்த ஒழுங்கை எனக் கேட்டார்.

அவ்வளவு தான்! அர்ச்சுனன் எய்த அம்பு பட்சியின் கண்களில் ஆழமாக சென்று தைத்தது.

"கண்ட கண்ட ஆட்களை எல்லாம் மூலஸ் தானத்துக்குள் விட முடியாது" என்று ஆக்கிரோசமாக பெரிய சத்தமாக சொன்னபடி மடப்பள்ளிப் பக்கம் போனார்.

அவருக்கு பின்னால் இன்னம் சில முருகன் அடியார்கள்.

"தமிழிலை பூஜை பண்ண பிராமணரைக் கொண்டு வரச் சொன்னால் கண்ட கண்டவங்களை கொண்டு வந்து வைச்சிருக்கிறான்கள்"

செய்தி அறிந்து தலைவர் - செயலாளர் - கணக்காளர் எல்லாம் மடப்பள்ளிக்கு விரைந்தார்கள்.

மடப்பள்ளி இரண்டானது.

"வள்ளி என்ன சாதியாம்?" எனவும் ஒரு குரல் ஐயருக்கு ஆதரவாக கேட்டது.

***

மாலை ஆறு மணிபோல் தொடங்கிய சமர் இரவு ஒன்பது மணியாகியும் முடிகிற பாடாய் இல்லை.

ஐயர் என்ன செய்வதென்றறியாது திகைத்து நின்றார்.

"ஒன்றில் சமஸ்கிருதத்தில் பூஜை செய்யுற ஐயர் வேண்டும்!

இல்லாட்டி தமிழில் பூஜை செய்யுற ஐயர் வேண்டும்!!

அதுவும் இல்லாவிட்டால் குறைந்த பட்சம் தமிழிலை பூஜை செய்யுற எங்கட ஆட்கள் வேண்டும்"

"எங்கட ஆட்களட! எங்கட ஆட்கள்! எங்கட ஆட்கள்!!!" என்பது பலமாகவே ஒலித்தது.

ஐயர் கூனிக்குறுகி நின்றார்.

தலைவர் விடுவதாய் இல்லை.

எனது நிர்வாக காலம் இருக்கிற வரையில் நான் கொண்டு வந்த இந்த ஐயர்தான் இருப்பார்.

நீங்கள் தலைவராக மாறி நிர்வாகம் உங்களிடம் வரும் பொழுது அதனை மாற்றிக் கொள்ளுங்கள் என்று உரத்த குரலில் ஆணித்தரமாக சொன்ன பொழுது அனைவரின் குரல்களும் மௌனமானது.

ஐயர் நடுங்கிய கையுடன் கற்பூரதீபத்தை ஏற்றினார்.

ஓம் ஆறுமுகனே போற்றி
ஓம் ஆண்டியே போற்றி
ஓம் அரண் மகனே போற்றி
ஓம் அபிஷேகப் பிரியனே போற்றி
ஓம் அழகா போற்றி ஓம் அபயா போற்றி
ஓம் ஆதிமூலமே போற்றி
ஓம் ஆவினன் குடியோய் போற்றி
ஓம் இறைவனே போற்றி
ஓம் இளையவனே போற்றி
ஓம் இடும்பனை வென்றவனே போற்றி

என்று தொடங்கி...

ஓம் மூவாப் பொருளே போற்றி
ஓம் யோக சித்தியே போற்றி
ஓம் வயலூரானே போற்றி
ஓம் வள்ளி நாயகனே போற்றி
ஓம் விறலிமலையானே போற்றி
ஓம் வினாயகர் சோதரனே போற்றி
ஓம் வேலவனே போற்றி
ஓம் வேதமுதல்வனே போற்றி
ஓம் கலியுக வரதனே போற்றி

ஓம் புண்ணிய மூர்த்தியே போற்றி என 108 போற்றி மந்திரங்களை தமிழில் உச்சரித்து கடைசியாக "முருகனுக்கு அரோகரா" என ஐயர் சொல்லி முடிக்கும் போது அவரையும் அறியாமல் அவரின் உடம்பு நடுங்கியது.

"போற்றி... போற்றி" என ஐயர் மூலஸ்தான முருகனுக்கு பூப்போடும் போது அவர் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொலவென்று கொண்டியது.

அவ்வாறே அடியார்கள் சிலருக்கும்.

ஐயரின் மந்திர ஒலி குறைந்தாலும் மடப்பள்ளியில் இருந்து வந்து கொண்டிருந்த ஒலி குறையவே இல்லை.

"இந்த ஐயனை வெளியேத்திப் போட்டுத்தான் நான் கோயிலுக்குள்ளை வருவன்"

காலையில் விமான நிலையத்துக்கு வந்திருந்த அந்தச் சிறுவன் தாயின் கையை உதறி விட்டு ஓடிப்போய் ஐயரை இறுகப்பற்றிக் கொண்டான்.

அனைவருக்கும் வியப்பாக இருந்தது.

"இந்த நாட்டில் யாரும் அடிபடமாட்டார்கள்" என காலையில் அந்தச் சிறுவன் பெருமையாக சொன்னது அவருக்கு ஞாபகம் வந்தது.

பாவம் இந்தப் பாலகன் என அவனுக்காக மனம் வேதனைப்பட்டது.

"முருகன் என்னைத் தனிய விடமாட்டன். நீ பயப்பிடாதை" என அந்தச் சிறுவனுக்கு தன் தழுதழுத்த குரலால் ஆறுதல் சொன்னார்.

மௌனம் கோயிலை நிறைத்திருந்தது.

விபூதியையும் தீர்த்தத்தையும் பெற்றுக் கொண்டு அதிகம் பேர் போய் விட்டார்கள்.

அன்னதானத்தில் கலந்து கொள்ள அன்று அதிகம் பேருக்கு மனமிருக்கவில்லை.

***

இரவு ஒரு மணியிருக்கும்.

ஐயர் நன்கு தூங்கிக் கொண்டு இருந்தார்.

ஊரும் உறங்கிக் கொண்டு இருந்தது.

ஐயரின் அறைக்கதவை யாரோ ஒருவர் மெதுவாக திறப்பதை ஐயர் தூக்கத்திலும் உணர்ந்து கொண்டார்.

ஐயர் தனக்கு கிட்டவாக ஓர் அபாயம் வருகிறது என்பதனை உணர்ந்து கொண்டார்.

அவர் தனனைச் சுதாகரித்துக் கொள்ள முதல் "கெற் அவுட் ஒவ் திஸ் ரெம்பிள் பிளாக் பிக்" (கறுத்தப் பன்றியே இந்தக் கோயிலை விட்டு வெளியேறு)"

ஆக்கிரோசத்துடன் சொன்னபடி ஒருத்தன் பெரிய சுத்தியலுடன் ஐயர் மீது பாய்ந்தான்.

ஐயர் தடுக்கப்பார்த்தாலும் சுத்தி அவரின் கன்னத்தை ஆழமாகப் பதம் பார்த்தது.

அடுத்த அடிக்கு முதல் அவனைத் தள்ளி விட்டு ஐயர் கோயில் வீதியை விட்டு வெளியே ஓடி... கன்னத்தால் இரத்தம் சொட்ட சொட்ட ஐயர் பொது வீதியால் ஓடினார்.

அவனும் துரத்திக் கொண்டு போனான்.

எதிரே வந்த ஒரு டெனிஷ்காரனின் கார் ஒன்று தன் வேகத்தை குறைத்த பொழுது துரத்தியவன் இருட்டினுள் மறைந்து விட்டான்.

அரைமயக்கமான ஐயரை தன் மடியில் வைத்துக் கொண்டு டெனிஸ்காரன் பொலிசுக்கு தகவல் கொடுக்க பொலிசாரும் அம்புலன்சும் அவ்விடத்துக் வந்து கொண்டிருந்தது.

ஐயர் அரை மயக்கத்தில் போய்க் கொண்டு இருந்தார்.

"டென்மார்க் உங்களை வரவேற்கிறது" என்ற பதாகை அவர் கண்களுக்குள் மங்கலாக தெரிந்தது.

***

அடுத்தநாள் தினசரியில் ஐயர் இனம் தெரியாதவர் களால் தாக்கப்பட்ட செய்தி தலைப்புச் செய்தியானது.

அதே பத்திரிகையின் சிறிய பெட்டிச் செய்தியாக **526** வெளிநாட்டவர்களுக்கு டெனிஷ்பிரஜாவுரிமை வழங்கப்பட்ட செய்தியும் பிரசுரமாகி இருந்தது.

ஐரோப்பா பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் பயங்கரவாதம் எந்த வடிவிலும் இந்த நாட்டுக்குள் நுழைவதை எம் இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம் என இன்னோர் செய்தியும் அத்தினசரியில் வெளியாகி இருந்தது.

ஐயருக்கு முதன்நாள் அடித்தவன் மூன்று செய்தி களையும் வாசித்து விட்டு உதட்டினுள் புன்னகைத்துக் கொண்டான்.

# நிலவும் பெண்ணும்

வனஜா நடராசா

நீலத்துகில் நீக்கி நிலவுப் பெண் தன் பால் முகம் காட்டினாள். பச்சைத் துகில் களைந்து இருளாடை புனைந்தாள் பூமிப் பெண். பூமிப் பெண்ணின் மகவான பெண்கள் அந்தக் கார் இருளினுள் தம் கரிய சோகம் கலந்தனர். நிலவுப் பெண்ணைப் பார்த்து பூமிப் பெண்ணின் பெண்மகவு ஒருத்தி விம்மித் தணிந்தாள்.

"நிலவுப் பெண்ணே! நான் மலடியாம்" விம்மித் தணிந்தாள் அவள். நிலவுப் பெண்ணோ தன் தன்னொளியால் பூமிப் பெண்ணின் இருளாடை விலக்கி அவள் வதனம் பார்த்தாள். அவள் முகத்தில் பொறுமையின் அணிகலன். தண்மதியாள் பூமிப் பெண்ணின் மகவுப் பெண்ணை நோக்கி "பெண்ணே! பெண் என்ற பதத்தின் பொருள் தாய்மை. அப்படி இருக்கையில் நீ எப்படி மலடியானாய்?" எனக் கேட்டாள்.

"ஆம், ஆம் தாய்மை உணர்வுகள் பொங்கிப் பிரவகிக்கின்றன என்னில் மகவு தான் இல்லை" என்றாள் பெண்.

நிலவுப் பெண் மௌனமானாள். பூமிப் பெண் கூறினாள் "மாந்தர் தாய்மையை கருப்பையுடன் சம்பந்தப் படுத்துகிறார்கள் அவ்வளவு தான்"

"மாந்தரின் சிந்தனை அளவுகோல் இம் மட்டோ" என்றாள் நிலவுப் பெண்.

"..." சிறிது மௌனம்.

பூமியின் மகவுப் பெண்ணின் மௌனதும் உடைப்பெடுத்தது. அவள் விம்மல் அழுகைக்கேவ லாயிற்று.

நிலவுப் பெண் தன் மௌனம் உடைத்தாள். "என்னையும் மலடி என்கிறார்கள். விஞ்ஞானத்தின் விஞ்ஞானிகள்" என்றாள் நிலவுப் பெண்.

"என்னது" என்றாள் திடுக்குற்று பூமிப் பெண்.

"ஆம் என்னில் உயிரினம் வாழும் சாத்தியம் இல்லையாம். தண்ணீர் இல்லையாம்"

"அட கடவுளே! உன்னைக் காட்டி தம் பிள்ளைகளுக்கு கதை சொல்லி அழுகை தீர்ப்பதால் நீ, அத்தனை கோடா பிள்ளைகளுக்கும் தாய். நின்னைப் பார்த்து மகிழும் குழந்தைகளுக்கு நீ தாய். தாயினும் மிக்க தாயான தாய்மை நீ. சாதாரண தாய் அல்லவே" என்றாள் பூமிப் பெண்.

"என்னைப் பார்த்தும் சின்னஞ் சிறிசுகள் என்னை கொஞ்சுகின்றன. நிலா நிலா வா வா... எனப் பாடி மிகிழ்கின்றனர். என் தாய்மையை உணர்ந்து கொள்கின்றனர். பெரியவர்கள் தான்..."

"மலடி என்ற வார்த்தைக்கு அகராதியில் அர்த்தம் கொடுக்கலாம் பொருள் தவறு தவறு. அருத் தம் வேறு பொருள் வேறு. இரண்டுக்கும் நுண்ணிதான வேறுபாடு உள்ளது" என்றாள் பூமிப் பெண்.

பூமிப் பெண்ணின், மகனவுப் பெண் "பெண் தான் தாய்மை" என்பதை பூரணமாக உணர்ந்தாள். தன் அறியாமை நீங்கப் பெற்று தன்தாய்மை உணர்வை அனுபவித்தாள். பூரித்தாள்.

தாய் என்பதை விட தாய்மை நிறைவானது என உணர்ந்து நிறைந்து பூரணபொலிவு பெற்றாள். அவள் மன ஆதங்கம் மறைந்தது. பூமிப் பெண் இருள் ஆடை களைந்து பச்சையம் என்னும் ஆடை அணிந்தாள்.

"நாம் எல்லோரும்
அன்னையரே"

என்றாள் பூமிப் பெண்ணின் மகவு. நிலவுப் பெண் நீலவான ஓடையில் நீந்தியபடியே தாய்மையின் பொலிவுடன்.



# கலைகளும், நெகிழ் ஓட்டக்கோட்பாடும்

■ பேராசிரியர் சபா ஜெயராசா

மனத்தின் நெகிழ் ஓட்டம் (FLOW) என்பது சிந்தனையின் தொடர்ச்சியைக் குறிக்கும் ஒரு கருத்து வடிவம். உளவியலில் மனத்தின் நெகிழ் ஓட்டம் தொடர்பான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கலை, இலக்கியம் திறனாய்வு, கல்வி, சமயம் முதலாம் துறைகளில் இந்தக் கருத்து வடிவம் பல நிலைகளிலே எடுத்தாளப்படுகிறது.

செறிவு மிக்க கவனக்குவிப்புடனும், ஆக்க மலர்ச்சி உட்குவிப்புடனும் சிந்தனையின் தொடர்ச்சியுடனும் மனத்தின் நெகிழ் ஓட்டம் அல்லது உளநெகிழ் ஓட்டம் இயல்பாக நிகழ்த்தப்படுகிறது. அந்நிலையில் தன்னுணர்வும் நேரமுகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வும் இழந்த நிலை நிகழ்கின்றது.

பசியும், அலுப்பும் கூட மறந்த நிலைக்குக் கலைஞர்களும், விஞ்ஞானிகளும் செயற்பட்ட வண்ணமிருப்பர். தமக்குச் சாதகமானதும் தூண்டுதல் தரக்கூடியதுமான நெகிழ் ஓட்ட வலயத்துக்குள் அவர்கள் புகுந்து விடுகின்றனர்.

உள்ளத்தின் நெகிழ் ஒட்டத்துக்கு ஏற்றவாறு தமக்குரிய திறன் மட்டத்தையும் ஒழுங்கமைத்துக் கொள்வர். நெகிழ் ஓட்டத்துக்குத்திறன் மட்டும் துணை செய்யும். அதேவேளை திறன் மட்டம் ஓட்டச் செயற்பாட்டை மீறிச் செல்லும் பொழுது நெகிழ் ஓட்டம் தடைப்படும்.

மொழியின் உருவாக்கம் நெகிழ் ஓட்டத்துடன் இணைந்தது. மக்கள் வாழ்க்கை முறையோடும் மூளையியல் செயற்பாட்டோடும் சமூக இயல்போடும் புவியியற் சூழலோடும், இணைந்த வகையில் மொழிக்குரிய ஒலி உருவாக்கம் நிகழ்கின்றது.

மொழிவழியாக இலக்கியங்கள் உருவாக்கம் பெறும் பொழுது இலக்கிய வளத்தில் நெகிழ் ஓட்டமும் ஒன்றிணைகின்றது.

மொழியின் தொன்மையான வடிவமாகிய கவிதை நெகிழ் ஓட்டத்தைத் தாங்கிய வடிவமாக அமைந்தது. ஒலியின் நெகிழ் ஓட்டத்தை அடிப்படையாகக் கொண்டே யாப்பு இலக்கணம் ஆக்கப்பெற்றது.

ஒலி மட்டுமன்றிப் பொருளும் நெகிழ் ஓட்டத்தில் பங்கு கொள்ளல் நோக்கப்படுகிறது. படிமச் சேர்வைகளும் நெகிழ் ஓட்டத்தில் பங்கு கொள்ளல் கவிதையின் புதிய முயற்சிகளால் நிறுவப்பட்டது.

புனைகதைகளின் நெகிழ் ஓட்டத்தைக் கதை கூறும் நுட்பங்கள் இயக்கிச் செல்கின்றன. ஒளிப் பிறகுவிப்பு (FLASH BACK) என்பது பிற்பாய்ச்சலாக இருப்பினும், புனைவின் நெகிழ் ஓட்டத்தைத் தடுத்து விடுவதில்லை.

ஒளிப்பிற்குவிப்பு மிகவும் பழைய நுட்பம். மக்களின் வரலாற்று நினைவுகளில் இருந்து அது வளர்ச்சி கொண்டது. தொன்மக்கதைகளில் அது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

நெகிழ் ஓட்டம் புனைகதைசாரா எழுத்துக்களின் அளிக்கைத்தரத்தை நிறுவுவதிலும் பங்கு கொள்கின்றது. கருத்துக்களை இயைபு படுத்திச் சொல்வதும் தருக்க ஒழுங்கும் மொழிவளமும் நெகிழ் ஓட்டத்தைத் தீர்மானிக்கும்.

புனைகதைசாரா எழுத்துக்களிலும் பேச்சுக் கலையிலும் இடம்பெறும் தேய்வியம்பல் (CLICHES) நெகிழ்ஓட்டத்தைப் பாதிப்படையச் செய்யும்.

மீளமீளப் பயன்படுத்தித் தேய்ந்துபோன நிலையில் உள்ள எடுத்துக்காட்டுகள், சொற்கள், நிகழ்ச்சிகள் முதலியவை தேய்வியம்பலில் உள்ளடங்கும். தம்மைத் தொடர்ச்சியாக அறிகை நிலையில் ஒருவர் தேய்வியம்பலோடு அளிக்கை செய்யும் இயல்புக்குத்தள்ளப்படுவார்.

இசையில் நெகிழ்வோட்டம் ஒரு முக்கிய கருத்து வடிவமாகவுள்ளது. நெகிழ் ஓட்டத்தைச் செம்மைப் படுத்துவதற்கும், நிலை நிறுத்துவதற்கும் சுருதியும், லயமும் பயன்படுத்தப்படுகின்றன. சுருதி அல்லது இசைத்தளம் தாய் என்றும், லயம் என்ற தண்ணளிகை தந்தை என்றும் குறிப்பிடப்படுகிறது.

சுருதி என்பது வடமொழிச்சொல். தமிழில் அது இசைத்தளம், அல்லது தளம் என்று குறிப்பிடப்படும். லயம் என்பது தண்ணளிகை என்று தமிழிற் குறிப்பிடப் படும். இசைக்கு ஆதாரமாகவும் அடிப்படை ஒலியாகவும் விளங்குவது சுருதி. பாட்டின் வேகத்தை ஒரு சீராகக் கொண்டு செல்லல் லயம் எனப்படும்.

இசையில் நெகிழ் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துவ தற்கு அல்லது தூக்கி நிறுத்துவதற்கு தூக்கு அல்லது தாளம் பயன்படுத்தப்படுகிறது.

ஆடற்கலையிலும் நெகிழ் ஓட்டம் ஒரு முக்கிய கலைச் செயற்பாடாகக் கொள்ளப்படுகிறது. வெவ்வேறு அசைவுகளுக்கிடையே இறக்கத்தை ஏற்படுத்தல், இசையோடும், தாளத்தோடும் இணங்கிச் செல்லல் முதலியவற்றால் நெகிழ் ஓட்டம் பலம் பெறுகின்றது.

இடர்ப்பாடுகள் இன்றி அசைவுகளையும், அடவு களையும் மேற்கொள்வதற்கு ஒழுங்கமைந்த பயிற்சி வேண்டப்படுகிறது. குழு ஆடல்களில் நெகிழ் அசைவு மேலும் உன்னிப்பாக வலியுறுத்தப்படுகிறது.

கடல் அலையின் அசைவு, காற்றில் பயிர்களி லும், தாவரங்களில் நிகழும் அசைவு, மனிதச் செயற்பாடு களில் இயற்கையாக நிகழும் அசைவுகள் ஆடல்வரைபி யலில் (CHREOGRAPHY) ஊன்றி நோக்கப்படுகின்றன. அவற்றைக் கலை நயத்துடன் அளிக்கையில் இடம் பெறச் செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

சிற்பக் கலையில் புலக்காட்சி அசைவு, பௌதிக அசைவு, திசை அசைவு முதலியவை கலைநுட்பங் களுடன் மேற்கொள்ளப்படுகின்றன. அசையாதிருக்கும் சிறப்பித்தில் அசையும் விளைவை உருவாக்குவதில் சிற்பக் கலைஞர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

காட்சிச்சுமையும் (VISUAL WEIGHT) காட்சித் திசையும் (VISUAL DIRECTION) இணைந்த வகையில் நெகிழ் ஓட்டம் நிகழ்த்தப்படுகின்றது. நிறம் மற்றும் உருவ அளவுகளால் காட்சிச்சுமை உருவாக்கப்படுகிறது. ஒருபொருள் மீது செலுத்தப்படும் காட்சியின் அளவு காட்சித்திசையைத் தீர்மானிக்கும்.

நிலைத்த கலைவடிவங்களாகிய சிற்பத்திலும் ஓவியத்திலும் அசைவு நுட்பங்கள் பல நிலைகளிலே மேற்கொள்ளப்படுகின்றன. மிருகங்களுக்கு ஈட்டி எறியும் குகை ஓவியங்களில் அசைவுவினையூட்டும் கலைச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. உருவங்களைத் தொடர்ச்சியாக வரையும் நுட்பத்தைப் பயன்படுத்தியும் அசைவு விளைவு உருவாக்கப்படுகிறது.

சோழர் காலத்தில் உருவாக்கம் பெற்ற தாண்டவச் சிற்பங்களில் அசைவுவிளைவூட்டலும் உள்ளடங்கி இருத்தல் குறிப்பிடத்தக்கது. கலைப் பெறுமானத்தை அந்தச் செயற்பாடு அதிகரிக்கச் செய்கின்றது.

ஒரு புள்ளியில் இருந்து இன்னொரு புள்ளிக்கு அல்லது ஒருபொருளில் இருந்து இன்னொரு பொருளுக்கு கண்களை இயல்பாக மாறச் செய்வது நெகிழ் அசைவாகக் கருதப்படும்.

ஓவியங்களில் அசைவை "முதன்மைப்படுத்தும் ஓவியங்கள்" என்ற ஒருவகை உண்டு. ஒளிச்செறிவின் மாற்றங்கள், வண்ணச் செறிவின் மாற்றங்கள், சிதறல் களின் தொடர்ச்சி, துணிக்கைகளின் தொடர்ச்சி, பரவலைத் திசைப்படுத்தும் குறியீடு, கோட்டு ஓவியத்தில் வளைகோடுகளின் பயன்பாடு முதலாம் முறைகளால் அசைவு விளைவு உருவாக்கப்படுகிறது.

கட்டடக்கலையிலும் நெகிழசைவு என்பது கருத்துச் சுமக்கும் அறிபொருளாகின்றது. அறை களுக்கிடையே காற்றின் ஓட்டம் மனிதநடமாட்டத்தை இலகுவாக்கும் வெளிகளை உருவாக்குதல், முதலாம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. "நெகிழசைவு வடிவமைப்பு (FLOA DESIGN) என்ற கட்டநுட்பியல் வளர்ச்சியுற்றுள்ளது.

நெகிழசைவைக் கலைப்பதிவுடன் அல்லது அழகியல் நீட்சியுடன் மேற்கொள்ளும் செயற்பாட்டைக் கட்டடக் கலைஞர்கள் மேற்கொள்கின்றனர். கட்டக் கலையில் இடம் பெறும் நெகிழ் அசைவுக்குரிய வடி வமைப்புக்கள் பயன்படுத்துவோரிடையே மனச் சுகத்தையும் அவர்களின் செயற்பாடுகளில் விளைவுப் பெருக்கத்தையும் ஏற்படுத்தும் மனித இடைவினைகளின் இறுக்கத்தைத் தணிப்பதற்கும் அது துணை செய்யும் என்று ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர்.

நெகிழ ஓட்டம் பற்றிய சிந்தனைகள் சமய உளவியலிலும் இடம் பெற்றுள்ளன. சமயத்துக்கும் கலைப் படைப்புக்களுக்குமான உறவில் அது கலை இலக்கிய ஆக்கங்களிலும் இடம் பெற்று வருகின்றன.

பொருண்மை கொண்ட மகிழ்ச்சியும், உள்ளார்ந்த ஊக்கலும் குவி உள ஈடுபாடும் மனத்தின் நெகிழ் ஓட்டத்திலே இடம் பெறுகின்றன. ஒவ்வொரு சமயமும் தத்தமது மெய்யியல் தளத்தில் நின்று நெகிழ் ஓட்டத்துக்கு விளக்கம் தருகின்றன.

இந்திய மரபில் பதஞ்சலி முனிவரின் சிந்தனையை அடியொற்றி யோகப்பயிற்சி உருவாக்கப் பட்டாலும் அது தொடர்பான சிந்தனைகள் நெடுங்கால மாகவே இந்திய சிந்தனை மரபிலும் செயல்முறை களிலும் இடம்பெற்று வந்தன. பின்னர் திட்டமிடப்பட்ட கட்டுச் செட்டான பயிற்சிமுறையாக யோகம் அமைக்கப் பட்டது. தியானம் மூச்சுப் பயிற்சி உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் இணைப்புடன் யோகப் பயிற்சியை மேற்கொள்ளலில் மனத்தின் நெகிழ் ஓட்டம் இயல்பாக ஒன்றிணைக்கப்படுகிறது. ஓர் ஆசனத்தில் இருந்து இன்னோர் ஆசனத்தை நோக்கிய மாற்றத்தி லும் நெகிழ் ஓட்டம் கடைப்பிடிக்கப்படுகிறது.

யோகநெறியின் செல்வாக்கு இந்தி ஆற்றுகைக் கலைகளிலும் இடம்பெற்றுள்ளது.

கற்றலில் நெகிழ் ஓட்டம் கற்றதை வெளிப் படுத்துவதில் நெகிழ் ஓட்டம் முதலியவை அறிவளிக்கை இயலில் ஆழ்ந்து நோக்கப்படுகின்றன.

மலரன்னை

# துகில்



துயில் கலைந்து விழிப்புற சுமந்திரா, அருகில் கிடந்த அலைபேசியை எடுத்து நேரத்தைப் பார்த்தாள். ஆறு முப்பதைக் காட்டியது அலைபேசி. அருகில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த கணவனின் மீது பார்வை ஒரு தரம் நிலைத்தது. இடம் பிடித்து அழுது களைத்ததனால் அயர்ந்து உறங்கும் ஒரு குழந்தையை நினைவூட்டியது அவனது தோற்றம். உதடுகள் தாமாகவே விரிந்து ஒரு மென்சிரிப்பை உதிர்க்க, அவள் படுக்கையை விட்டு எழுந்து போனாள்.

அவர்களுக்கு திருமணமாகி பத்து நாட்கள்தான் ஆகியிருந்தன. மாதவன், கொழும்பிலுள்ள ஒரு பிரதான வங்கியில் முகாமையாளராக தொழில் புரிந்து கொண்டிருந்தான். குறைந்த வாடகையில் ஒரு படுக்கையறையுடன் கூடிய சிறிய வீடொன்றை அவன் தெஹிவளையில் தெரிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அவளுக்கும் அது பிடித்திருந்தது. காரணம் அவள் தான் எளிமையில் ஊறிப் போனவளாயிற்றே. ஆயினும் மாதவனுக்கோ ஆடம்பர வாழ்க்கையில் மோகம் அதிகமாயிருந்தது.

குளியலை முடித்துக் கொண்டு வந்த சுமித்திரா கணவனைத் தட்டியெழுப்பினாள்.

“இஞ்சாருங்கோப்பா. ஏழரை மணியாகீட்டுது. எழும்புங்கோவன்”

மனைவி மீது சீறி விழுந்தான் மாதவன்.

“மாது என்று செல்லமாகக் கூப்பிடுறதை விட்டிட்டு அம்மாமார் கூப்பிடுற மாதிரி இஞ்சாருங் கோப்பா என்று கூப்பிடுறீர். எனக்கு உது துப்பரவாக்கப் பிடிக்காது.”

கணவனது கூற்று சுமித்திராவுக்கும் மனதில் நமைச்சலை ஏற்படுத்த மெதுவாக வாய் திறந்தாள்.

“புருசனை பெயர் சொல்லி கூப்பிடுற வழமை எங்கட குடும்பத்தில் இல்லை. குடும்பத்தின் தலைவனாகத் தான் நாங்கள் கணவனைக் கருதுகிறோமே தவிர சகபாடியாக நினைப்பதில்லை. நாளைக்கு பிறக்கப்போற பிள்ளைகளும் அப்பா என்று கூப்பிடாமல் பெயரைச் சொல்லி கூப்பிடப் போகுதுகள்”

படுக்கையிலிருந்து எழுந்து இருந்தவன் தன் இருகைகளாலும் காதுகளை பொத்திக் கொண்டான்.

“அப்பப்பப்பா! இவ்வளவு வார்த்தைகளும் உம்முடைய வாயிலை இருந்து தான் வருகுதா?”

அவளும் விட்டுக் கொடுக்கவில்லை.

“நீங்கள் தானே வரப்பண்ணின நீங்கள்”

“சுமி! பிளீஸ் இன்னும் ஒரு பத்துநிமிடம் படுத்திருந்திட்டு எழும்புறனே”

அவன் கெஞ்சினான். அவள் மிஞ்சினாள்.

“பத்து நிமிசம் தான். தவறினால் தண்ணியை ஊத்தித்தான் எழுப்ப வேண்டி வரும்”

சிரித்துக் கொண்டே கூறியவள், காலை உணவு தயாரிப்பதற்காக சமையலறைப் பக்கமாக நகர்ந்தாள்.

மாதவனுடைய பெற்றோர் அவனுக்கு மூன்று வருடங்களாக பெண்பார்த்து தேடிய மருமகள் சுமித்திரா. அவனுடைய சாதகத்தில் செவ்வாய் தோஷம் இருந்த தால் நல்ல வசதியான குடும்பங்களிலிருந்து வந்த சாதகங்கள் எல்லாம் தட்டிப்போயின. சுமித்திராவின் சாதகம் மட்டும் தொண்ணூறு வீத பொருத்தத்துடன் அமைந்து போயிற்று. வசதி சற்று குறைந்திருந்த போதிலும், நல்ல பண்பான ஒரு குடும்பத்திலிருந்து வந்தவள் தான் இந்த சுமித்திரா.

சமையலறையில் சுமித்திரா காஸ் அடுப்பை தணித்துவிட்டு கிளறிய நூடில்ஸ்ஸை கீழே இறக்கி ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டிருந்த போது குளியலறையில் சலசலப்பு சத்தம் கேட்டது.

“ஓஹோ... ஐயா எழும்பீட்டார் போல”

மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

சற்று நேரத்தில் குளியலை முடித்துக் கொண்டு மாதவன் லுங்கி பனியனுடன் வந்து சாப்பாட்டு மேசையின் முன் அமர்ந்தான். சுமித்திரா சுடச்சுட தேநீரை அவன் முன் நீட்டினாள்.

"சுமி! நூடில்ஸ் வாசம் மூக்கைத் துளைக்குது. முதல்ல சாப்பிட்டிட்டு அப்புறம் ரீயைக் குடிக்கிறனே"

"ஓ.கே உங்கட இஷ்டம்"

மாதவனின் அழைப்புக் கிணங்கி அவளும் அவனுடன் அமர்ந்து சாப்பிட்டாள். அன்றைய பொழுதை எப்படியெல்லாம் இதமாகக் கழிக்கலாம் என இருவரும் அலசி ஆராய்ந்தவாறு சாப்பிட்டு முடித்தனர். சுமார் பத்து மணிபோல் புறப்பட்டு, முதலில் மிருகக் காட்சிசாலைக்கு போவது, பின்னர் மதியம் சரஸ்வதி லொட்ஜில் மதிய உணவை முடித்துக் கொண்டு அப்படியே வெள்ளவத்தையில் இருக்கும் நண்பன் ஒருவனின் வீட்டிற்கும் போய்விட்டு அங்கிருந்து நேராக காலிமுக கடற்கரைக்கும் போய் இனிமையாகப் பொழுதைக் கழித்துவிட்டு வீடு திரும்புவது தான் அவர்களது திட்டம்.

ஒரு பீடிகையுடன் மாதவன் சுமித்திராவைச் சீண்டினான்.

"நாங்கள் இப்ப வெளிக்கிடுறதில ஒரு "சஸ்பென்ஸ்" இருக்கு. நீர் எனக்கு உடுப்பு செலக்ற் பண்ணும். நான் உமக்கு செலக்ற் பண்ணுறன்"

"ஓ.கே. அப்பிடியே செய்வம்"

மாதவன் அவளை முந்திக்கொண்டான். அலுமாரியில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த தனது உடுப்புகளின் மத்தியிலிருந்து ஒரு பொதியை எடுத்து அவளிடம் நீட்டினான். ஆவலுடன் அதனை வாங்கி பிரித்துப் பார்த்தவள், எச்சியில் தேள் கொட்டி விட்டாற் போல் மிரண்டு போனாள். தன்னையறியாமலே கைகள் துவண்டு போக, அதற்குள்ளிருந்த "ஜீன்ஸ்"ஸூம் ரீசேட் அதுவும் கையில்லாதது யாவும் கீழே நிலத்தில் விழுந்தன.

அவளது செய்கையைப் பார்த்து மாதவன் விக்கித்து நின்றான். மளமளவென்று அவள் அவனது அலுமாரிக்குள் குடைந்து தேடி ஒரு கைலியையும் பனியனையும் எடுத்து அவனிடம் நீட்டினாள்.

"இந்தாங்கோ. நீங்கள் இதைப் போட்டுக் கொண்டு வாங்கோ"

"சீச்சீ! இதைப் போட்டுக் கொண்டு நான் என்னெண்டு வெளியில வாறது. இது வீட்டுக்குள்ள போடுறு உடுப்பு."

கேட்டதும் கோபம் பற்றிக்கொண்டு வந்தது, சுமித்திராவுக்கு

"அப்பிடித்தான் நான் நீங்கள் செலக்ற் பண்ணின உடுப்பையும் நினைக்கிறன். வேணுமெண்டால் நான் அதை எங்கட அறைக்குள்ள போடுறன். நீங்கள் ஒன்றை வடிவாய் தெரிஞ்சுகொள்ளுங்கோ. நாங்கள் தமிழர். எங்களுக்கென்று ஒரு பண்பாடு, கலாச்சாரம் இருக்குது. அதை மறந்திட்டு நாகரீகம் என்ற போர்வையில் வேற்று இனத்தவரைப் பின்பற்றி நாங்கள் உடை அணியக் கூடாது. சந்தர்ப்ப வசத்தால் சில உத்தியோகம் பார்க்கிற பெண்களுக்கு அப்படியான ஆடைகளை அணிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால்... எங்களைப் போன்ற குடும்பப் பெண்களுக்கு தங்களை அடையாளப்படுத்தக் கூடிய ஆடைகள் தான் பொருத்தமானது. ஆனால் தத் தமக்குரிய ஆடைகளை தெரிவு செய்து கொள்வது இன்றைய நாகரீக உலகத்தில் பெண்களுக்குக் கிடைத் திருக்கக்கூடிய சுதந்திரம். அதை நான் மறுக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு தமிழச்சியாகவே வாழவிரும்புகிறேன்."

சொல்லிவிட்டு நிறுத்தினாள், சுமித்திரா. கண்கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டு முன்னால் நின்ற மாதவனைப் பார்க்க அவளுக்கு சிரிப்பாக வந்தது.

"என்ன சேர்! நான் சொல்லுறது சரி தானே?"

மாதவனாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. வாய்விட்டு சிரித்தே விட்டான்.

"ஏன் நீர் ஏ.எல்லோட படிப்பை விட்டநீர். தொடர்ந்து படிச்சு ஒரு லெக்சரர் ஆக வந்திருந்தால் நல்லாயிருந்திருக்கும்."

அவளும் விட்டுக் கொடுக்கவில்லை.

"அப்பிடி நான் லெக்சரர் ஆக வந்திருந்தால் உங்களுக்கு தலையை நீட்டியிருக்க முடியாதே"

"சரி. சரி. நேரமாகுது. நீர் வெளிக்கிடும்"

"வெளிக்கிடுறதெண்டால் நீங்கள் தான் உடுப்பு செலக்ட் பண்ண வேணும்"

மெதுவாக மாதவன் நழுவப் பார்த்தான்.

"நீர் விரும்பினதைப் போடலாம். நான் அதில தலையிடமாட்டன்"

"ஆனால் நான் உங்களை விடமாட்டன். நான் செலக்ட் பண்ணுறதைத்தான் நீங்கள் போடவேணும்"

"அம்மா தாயே! அடியேன் நீர் எடுத்துத் தாறதை போடுவதற்குத்தயார்"

இருவரும் வாய்விட்டு சிரித்துக் கொண்டனர்.

சுமித்திரா கோப்பி நிறத்தில் ஒரு பாண்ட்டையும் அதே நிறத்தில் கட்டம் போட்ட ஒரு சேட்டையும் எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு கேட்டாள்.

"எனக்கு...?"

தயங்காமல் மாதவன் பதிலளித்தான்.

"உமக்கு விருப்பமானதை நீரே செலக்ட் பண்ணி எடுத்துக் கொள்ளும். நான் குறுக்கே வரமாட்டேன்"

இரண்டே நிமிடத்தில் சுமித்திரா கோப்பி நிற சாறியும் அதற்கேற்றாற்போல் பிளவுஸூம் அணிந்து வந்து அவன் முன் நின்றாள்.

மனைவியைப் பார்த்து அசந்து போன மாதவனின் கண்களைப் பார்த்து பிரமித்தவாறே சுமித்திரா சொன்னாள்.

"பஞ்சாபியைத் தான் போடலாமென்று நினைத் தேன். திருமணமாகி முதன் முதலாக உங்களுடைய நண்பர் வீட்டுக்குப் போவதால் சாறியோடுபோவது தான் பொருத்தமாயிருக்கும் என்று நினைத்துத்தான் இந்த சாறியை தெரிவு செய்த நான்"

"ஓ.கே. எல்லாமே அசத்தலாயிருக்கு"

அவளது நெற்றியில் இட்டிருந்த குங்குமத்தில் பார்வையைப் பதித்தவாறு கூறியவன், அவளையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். முதலில் பஸ் பிடித்து அவர்கள் மிருகக்காட்சிசாலைக்குப் போனார் கள். அங்கே பலவிதமான பறவைகள், மிருகங்கள், ஊர்வன என்பவற்றுடன் பல தரப்பு மக்களையும் பார்க்க முடிந்தது. அவர்கள் அணிந்திருந்த வெவ்வேறு விதமான உடைகளையும் அவளது கண்கள் அவதானிக்கத் தவறவில்லை.

அங்கு காட்சிபடுத்தப்பட்டிருக்கும் பறவை யினங்களைப் பார்த்தவள், ஒரு குழந்தையாகவே மாறி அவற்றை ரசிக்கத் தொடங்கினாள். மாதவனும் ஓரக் கண்ணால் அவளது செய்கைகளை அவதானித்து ரசித்த வாறே அவளுடன் கூட நடந்தான். அப்படியே அவர்கள் மிருகங்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பகுதியை அடைந்தபோது, கூட்டுக்குள் இருந்து கர்ச்சித்த சிங்கத்தைக் கண்டு பயந்து நடுங்கியவளாய் சுமித்திரா மாதவனின் கரங்களை இறுகப்பற்றிக் கொண்டாள்.

"அது கூட்டுக்குள்ளதானே இருக்குது. ஏன் பயப்பிடுறீர்?"

மனைவியை அணைத்தவாறே சமாதானப் படுத்தியவன், அவளை அப்பகுதியை விட்டு நகர்த்தி பாம்புகள் அடைக்கப்பட்டிருக்கும் பகுதிக்கு அழைத்துச் சென்றான். ஒருவாறு அவர்கள் சாலையை சுற்றிப் பார்த்துவிட்டுவர நேரமும் மதியமாயிற்று.

"சுமி! கூலா ஏதாவது குடிப்பமே"

மாதவன் கேட்க. சுமித்திரா மறுத்து விட்டாள்.

"வேண்டாமப்பா. லஞ்ச் ரைம் ஆகிட்டுது. உதுகளைக் குடிச்சால்... பசியும் இல்லாமல் போயிடும்"

மாதவன் ஆட்டோ ஒன்றை மறிக்க, இருவரும் அதில் ஏறிக் கொண்டனர். நேராக "சரஸ்வதி லொட்ஜ்" ஜின் முன்னால்போய் நின்றது ஆட்டோ. இறங்கி உள்ளேபோனவர்ளுக்கு வரவேற்பு பலமாக இருந்தது. காரணம் இதுதான். மாதவனுடைய சித்தப்பா ஒருவர் தான் அந்த உணவகத்தின் சொந்தக்காரர். இருவரும் உள்ளே போய் ஆற அமர இருந்து சாப்பிட்டார்கள். பீடாவை வாய்க்குள் மென்றவாறு அவர்கள் உணவத்தை விட்டு புறப்படும்போது நேரம் இரண்டு முப்பதைத் தாண்டி விட்டது.

மீண்டும் அவர்களது பயணம் ஆட்டோவில் தொடர்ந்தது. வெள்ளவத்தை தொடர்மாடியில் குடி யிருக்கும் நண்பன் சிறீராமின் வீட்டை அவர்கள் அடைந்தபோது. வாசலில் நின்று வரவேற்றது சிறீராமின் மனைவி சர்மிளாதான்.

"வாங்கோமிஸ்டர் அன்ட் மிஸிஸ் மாதவன். ஆ... என்ன பொருத்தமான ஜோடி"

அவளது முகம் சுமித்திராவுக்கு பிடிக்கவில்லை. காரணம் அவள் அணிந்திருந்த ஆடைதான் முழங் காலுக்கு மேல் அரைக்காற்சட்டையும் கையில்லா ரீசேட்டும் அவளது மேனியை அலங்கோலப் படுத்துவ தாக சுமித்திரா கருதினாள்.

"பிளீஸ் டேக் யுவர் சீற்"

சோபாவைக் காட்டியவாறு அவள் கூற, சுமித்திராவும் கணவனுக்கருகில் சோபாவில் அமர்ந்து கொண்டாள். சர்மிளா உள்ளே திரும்பி குரல் கொடுத்தாள்.

"ராம்! இஞ்சை வந்து பாருமன். உம்முடைய பிரண்ட் மாதவன் கப்பிள் வந்திருக்கினம்"

"யேஸ் கம்மிங்" என்று சொல்லிக் கொண்டே சிறீராம் கையை நீட்டியவாறு வந்தான்.

"கொங்கிராட்ஸ் மாது ஸாரி மச்சான். வெடிங்க்கு வர முடியாமல் போச்சுது. எக்ஸ்கியூஸ் மீ"

"பறவாயில்ல ராம். மெசேஜ் போட்டிருந்த நீதானே. பாத்தநான்"

வருத்தம் தெரிவித்த நண்பனை வாய் வார்த்தை யால் சமாளித்தான், மாதவன். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். சுமித்திராவுக்கு தான் முள்ளின் மீது நிற்பது போல் ஓர் உணர்வு உறுத்தியது. ஒருவாறு சூழலை சமாளித்துக் கொண்டிருந்தாள். சர்மிளா "கேக்" கும் "கூல்டிரிங்"கும் கொண்டு வந்து பரிமாறினாள். சுமித்திரா நன்றி சொல்லிவிட்டு "கூல்டிரிங்"கை மட்டும் எடுத்துக் கொண்டாள்.

ஒருவாறு நான்கு மணியளவில் அவர்கள் சிறீராம் வீட்டிலிருந்து புறப்பட்டு, பஸ் பிடித்து காலிமுக கடற் கரைக்கு வந்து சேர்ந்தனர். மாலை வெயில் சற்று உறைத்தாலும் கடற்காற்று இதமாகத் தழுவி அவர்களை வரவேற்றது. கடற்கரை மணலில் கால்கள் புதைந்து நடப்பதற்கு சற்றுசிரமத்தைக் கொடுத்தனால் மாதவனின் கைகளை வலிந்து வந்து பற்றியவாறு சுமித்திரா நடக்கத் தொடங்கினாள்.

காலிமுகத்திடல் சனத்திரளால் நிறைந்திருந்தது. அங்கு குழுமியிருந்த பல்வேறுபட்ட மக்களுக்கு மத்தியில் தானும் சுமித்திராவும் ஜோடியாக கைபிடித்து நடப்பது மாதவனுக்கு மனத்தில் இனம்புரியாத இன்பக்கிளர்ச்சியை ஏற்படுத்தியது. மெதுவாக அவள் பக்கம் திரும்பி "சுமி!" என்று காதுக்குள் கிசுகிசுத்தான். கணவனது இதமான அழைப்பு கிளுகிளுப்பை ஏற்படுத்த மெய் மறந்தவளாய் அவள் மாதவனைப் பற்றியவாறு நடந்து கொண்டிருந்தாள். திடீரென நடையைத் தளர்த்திய மாதவன் நின்று நிதானமாக அவளிடம் கேட்டான்.

"சுமி! இந்த இடம் எப்படி? இதிலை இருக்கலாமா."

காலை நீட்டியவாறு மாதவன் மணந்தரையில் அமர்ந்து கொண்டவன், சுமியின் கையையும் இழுத்து அவளையும் தன்னருகில் இருத்திக் கொண்டான். உண்மையிலேயே எந்தப் பராயத்தினரையும் கவர்ந் திழுக்கும் தன்மை கடலலைகளை நெருடி வந்து மேனிகளை தழுவிச் செல்லும் காற்றலைகளுக்கே இயல்பானது என்று கூறினால் அது மிகையாகாது. மாதவனும் சுமித்திராவும் ஒருவித இன்பக் கிறக்கத்தில் தம்மை மறந்தவர்களாய், அங்கு குழுமியிருந்த பல்வேறு பட்ட மக்களையும், அவர்களது நடவடிக்கைகளையும் வேடிக்கை பார்த்தவாறிருந்தனர். நடமாடும் வியாபாரி கள் தின் பண்டங்கள், பழங்கள், மென்பானங்கள் என

பலவகையான பொருட்களையும் நடந்து திரிந்து கூவிக்கூவி விற்பனை செய்து கொண்டிருந்தனர். மாதவனுக்கோ, சுமித்திராவுக்கோ அவற்றுள் எதையாவது வாங்கி வாயில் போட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை. ஆனால் இனிமையாக பொழுது கழிந்து கொண்டிருந்தது.

சட்டென அவர்களைக் கடந்து இரண்டு இளம்பெண்கள் போவதை அவதானிக்க முடிந்தது. அவர்களுள் ஒருத்தி கூந்தலை போக்கில் காற்றில் அலைய விட்டிருந்தாள். அடிக்கடி அவள் முகத்தை மறைக்கும் மயிர்களை கைகளால்கோதி சீர் செய்து கொண்டிருந்தாள். மற்றவள் கூந்தலை ஒரு “சிலைட்”டுக்குள் சிறைப்பிடித்திருந்தமையால் இடையூறு ஏதுமின்றி அமைதியாக இருக்க முடிந்தது. சுமித்திராவின் இடது புறத்தில் சற்றுத்தள்ளி அமர்ந்திருந்த அவர்கள் மீது பார்வை விழுந்து அவளது கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தது. நவீன சிகை அலங்காரத்துடன் இறுக்கமான பான்ட் சேர்ட் அணிந்திருந்த ஒரு இளைஞன் அந்தப் பெண்களைக் குறிவைத்து வட்டமிடுவதை அவளது கழுகுக் கண்கள் அவதானிக்கத் தவறவில்லை. அவள் தனது பார்வையை மேலும் கூராக்கிக் கொண்டாள்.

பட்டென அந்த இளைஞன் எதையோ அந்த பாவாடை சட்டை அணிந்திருந்த பெண்ணின் மடிமீது போட்டுவிட்டு அப்பால் நகர்ந்து போய்விட்டாள். கவுண் அணிந்திருந்த மற்றைய இளம் பெண் துடித்துப் பதைத்து எழுந்து நின்று மற்றவளைப் போட்டு உலுப்பினாள்.

“அம்மம்மா! ஆரது உங்கடமடியில் எதையோ போட்டிட்டுப் போறான்?”

“எனக்கும் தெரியயில்ல. இஞ்சை பார் ஒரு ரோஜாப் பூ”

“இனி இங்கை இடுக்கிறது சரியில்லை. வாங்கோ நாங்கள் வீட்டுக்குப் போவம்.”

அவனைப் பலவந்தமாக எழுப்பி அழைத்துப் போனாள், அவள். அப்போதுதான் சுமித்திரா அவர்களை உன்னிப்பாகக் கவனித்தாள். அவளுக்கு எல்லாமே புரிந்து விட்டது. அந்த அம்மம்மாவுக்கு இயற்கை அளித்த முதுமை என்ற பருவத்தை அனுபவிக்கப் பிடிக்கவில்லை. முதுமையை மறைப்பதற்காக தலைமயிருக்கு சாய மிட்டு, அதனை விரித்து காற்றில் பறக்க விட்டதுடன் முகத்தில் ஏற்பட்ட சுருக்கங்களை மறைப்பதற்காக நவீன கிறீம்களைத்தடவி, இளம் யுவதிகள் போல் உடை யணிந்த போதிலும், கைகளில் தோன்றும் சுருக்கங்களும், தளர்நடையும் வயது முதிர்வினை பறைசாற்றத்தான் செய்தது.

ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள். தத்தமது வயதுக்கும் சுற்றாடலுக்கும் ஏற்ற பொருத்தமான ஆடைகளை அணிவது சாலச்சிறந்தது என மனதில் தோன்றிய நினைவுகளுடன் அவர்கள் போன திசையையே வெறித்துக் கொண்டிருந்த சுமித்திராவை மாதவன் நறுக்கென கைகளில் கிள்ளி, அவளை இவ்வுலக நினைவு களுக்கு கொண்டு வந்தான். அவள் நடந்தேறிய சம்பவத்தை அவனுக்கு விளக்க முயன்ற போது, அவன் “எல்லாம் எனக்கு தெரியும் என்ற தோரணையில் கண்ணசைத்தான்.

அங்கு கூடியிருந்தவர்களின் கவனத்தை திசை திருப்புவது போல் ஒருசக்கர நாற்காலி அவ்விடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தது. ஒருவயது முதிர்ந்த மூதாட்டி வெள்ளை நிறச்சேலையுடுத்து அதில் பவனி வந்து கொண்டிருந்தகாட்சி அனைவரது மனங்களையும் கவர்ந்தது. எல்லோரும் அவர்களையே பார்ப்பது அந்த இளைஞனுக்கு ஒருவித தயக்கத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

“கடற்கரைக் காற்றுபடுறது அம்மாவுக்கு நல்லதென்று டொக்டர் சொன்னவர். அது தான் அம்மாவை காற்று வாங்க கூட்டிக் கொண்டுவந்த நான்”

தன் பாட்டில் சொல்லிக் கொண்டான். மாதவனும், சுமித்திராவும் ஏக காலத்தில் அந்த அம்மாவை நிமிர்ந்து பார்த்தனர். வெள்ளைச் சேலையணிந்த சரஸ்வதியாய் முகத்தில் இலட்சுமீகரம் பொருந்தியவளாய் காட்சியளித்தாள், அந்த முதுமைத் தாய்.

# ஒரு மலையில்

கொடிகளில்
வெள்ளைப் பூக்கள்
பூத்தபடி தோன்றும்


ஓடும் நீரோடை
அடித்து
பாதையை
கேலி செய்கிறது

மருந்தகத்தின் புகைக்
குழாய் ஒரு பெரிய
சுருட்டு, அவரது
முதுகில் ஒரு
பெரிய தூக்கம்

உடுகு மலைகளின்
மார்பகத்தை

மண் தூசி
போர்வை
மூடியிருந்தது
நீல நிற வானவில்லின்
தோற்றம்
தோட்டத்து
வீட்டுத்தோட்டம்

சிங்கள மூலம் :- கலவானை ஜெயசேகர
தமிழில் :- மாவனல்லை எம்.எம்.மன்ஸூர்



# சிந்துவெளிநாகரீகமும் தொல் தமிழ் நாகரீகமும்

■ என்.கந்தசாமி

பண்டைய நாகரீகங்கள் ஆற்றுப்படுக்கைகளில் அமைந்திருந்தன. சுமேரிய நாகரீகம் ஈராக்கின் மொசொப்பெற்ராமியாவில் இயூப்பிரக்ரீஸ் - ரைகிறீஸ் நதிகளின் கரையிலும், எகிப்து நாகரீகம் நைல் நதிக் கரையிலும் சிந்துநதிக்கரையில் சிந்து நாகரீகமும் உருவாகி இருக்கிறது.

மிகப்பெரிய நாகரீகமான சிந்து வெளி நாகரீகம் 10 லட்சம் சதுரகிலோமீட்டரில் அதாவது 38600 சதுர மைல்களில் பாகிஸ்தானின் பஞ்சாப்சிந்து மாகாணங் களின் சில பகுதிகள் ஆப்கானிஸ்தானின் சில பகுதிகள் வடமேற்கு இந்தியாவில் ஒரிசா, ராஜஸ்தான், உத்தர பிரதேசம், கரியானா, குஜராத்சண்டிகர் மத்திய பிரசேதம் ஆகியவற்றில் பரந்து விரிந்திருக்கிறது. சிந்து வெளிப் பகுதிகளில் இரண்டு நகரங்கள் காணப்படு கின்றன.

கரப்பா இது மற்ற நகரான மொகின்ஜோதாரா வைவிட 200 ஆண்டுகள் பழமையானது. காலம் கிமு 3000-1300 ஆண்டுகள் பஞ்சாப்நதியின்கரையில் அமைந்திருந்தது. சுமார் 23000-35000 மக்கள் வாழ்ந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

### அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டவை

மாடி இல்லாத வீடுகள் சயனஅறை, குழியல் அறை, குழியல் தொட்டி, கழிப்பறை, கழிவு நீர் வெளியேந்த சுடுமண் குழாய்கள், தானியங்கள் சேகரித்து வைக்கும் களஞ்சிய அறைகள் இருந்தன.

குடிப்பதற்கும் தொழில்கள் அதாவது கைத் தொழில்களுக்கு நீர்தேவை. இதற்காக வீடுகளுக்கு இடையில் உறை கிணறுகள் இருந்தன.

ஆடுகள் மாடுகள் பன்றிகள் வளர்த்தனர். குதிரை கள் வளர்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

சிறந்த நீர்பாசனம் இருந்தது. கோதுமை பார்லி, பயது போன்ற பருப்பு வகைகள் பயிரிடப்பட்டன. திராட்சை போன்ற பழமரங்கள் காய்கறிகளும் விளை விக்கப்பட்டன.

உணவு ஆடு மாடு பன்றி முதலிய இறைச்சிகள், மீன் காய்கறிகள் பழங்கள் தானிய உணவுகளை உட் கொண்டனர். பார்லியிலிருந்து தயாரித்த தமது பாவனை யில் இருந்தது.

கைத்தொழில்கள் - மரவேலை - இரும்பு செம்பு வெண்கலப் பொருட்கள் தயாரித்தல் மண்பானைகள், பொம்மைகள் செய்தல் ஆகியவற்றில் சிறந்து விளங் கினர். கட்டடம் கட்ட சுடுமண் செங்கற்களை பாவித் தனர். கண்டெடுக்கப்பட்ட செங்கற்கள் ஒரே அளவில் இருந்தன. இது அவர்களுடைய கணித அறிவை புலப்படுத்துகிறது.

மனிதனின் மகத்தான கண்டுபிடிப்பான சக்கரம் வண்டிசில்லுகள் கண்டுபிடிக்கப்பட்டன. சக்கர கலா சாரம் பிறந்த இடம் சிந்துவெளிநாகரீகப்பகுதியில் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கலை நிகழ்ச்சிகள் - ஆடல் பாடல் நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்திருக்கின்றன.

வழிபாடு கோயில்கள் அரண்மனைகள் இருக்க வில்லை சைவமத அடையாளமான கல்லிங்கங்கள் கிடைத்துள்ளன. உறுதியான குடும்ப கட்டமைப்பு இருந்தது. அவர்களுக்கென்று ஒருமொழி இருந்தது. அம்மொழிக்கு எழுத்துகள் இருந்தன. அம்மொழியின் எழுத்துகள் தமிழ்ப் பிராமியை சார்ந்ததாக திரு ஜோன்.ஜே.மிச்சினர் மொழி வல்லுநரின் கருத்தாகும். மரணித்தவர்கள் திராவிட முறைப்படி புதை குழிகளில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

### இந்தியாவில் உள்ள கரப்பா பகுதிகள்

1. கரியானாவிலுள்ள ராக்கி கார்த்தி எனப்படும் இடத்தில் தொல்லியலாளர் திரு அமர்நாத்தாஸ் அவர்களால் 1997-1999 ஆண்டுகளில் அகழ்வாராட்சி மேற்கொள்ளப்பட்டது. ஒரு புதைகுழியில் 4 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சில பானைத் துண்டு கள் மண்வளையல்களும் அருகில் இருந்தன.

காலம் - 4000 வருடங்கள்

மனித எச்சங்களின் - டீ.என்.ஏ.M-89 ஆதி திராவிடர்

2. உத்தரபிரதேசம் -சிகாவுளி

இங்குவெங்கலரதம், பானைதண்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஒரு புதைகுழியில் பெண் எலும்புகூடு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. காலம் கிமு 2000 வருடங் கள் மனித எச்சத்தின் டீ.என்.ஏ எம் 89 ஆதிதிராவிடர்

### இரண்டாவது சிந்துவெளிநகரம்

மொகின்ஜோதாரா சிந்து நதிக்கரையில் கரப்பா விலிருந்து 600 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்திருக் கிறது. மொகின்ஜோதாராவென்றால் மரணித்தவர்களின் புதைமேடு என்று அர்த்தம். கரப்பா நாகரீகத்தின் சகல அம்சங்களும் இங்கிருக்கின்றன. காலம் 2800-1100 கி.மு ஒரே புதைகுழியில் வன்முறையால் கொல்லப்பட்ட சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. இவர் கள் சூரியநாடோடிகளால் கொல்லப்படலாம் என கருதப்படுகிறது. ஒரு பசுபதிசிலை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது ஆவணங்களை உறுதிப்படுத்த பாவிக் கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

### சிந்து வெளிநாகரிகத்தை ஆய்வு செய்தவர்கள்

1. 1920-1921 அலெக்சாண்டர் கன்னிகாம். இவர் பிராமணர்களால் வழிநடத்தப்பட்டால் இது வேத நாகரீகம் என தெரிவித்தார். இதற்கு ஆதாரங்கள் ஒன்றும் இல்லை.

2. 1923-1924 ஆண்டுகளில் - ஈடுஇணையற்ற தொல்லியல் ஆராட்சியாளர் ஜோன் மார்சல எல்லா ஆதாரங்களையும் நுணுக்கமாக ஆராய்ந்தார். லண்ட னில் உள்ள ஆசிய மக்கள் சஞ்சிகையில் 20.09.1924 ஒரு கட்டுரையில் சிந்து வெளிநாகரீகம் ஆதிதிராவிட நாகரீகம் என ஆணித்தரமாக அறிவித்தார்.

சிந்துவெளிநாகரீகம் அழிந்ததற்கான காரணங் கள் சிந்து நதி ஓடும்பாதையை மாற்றி வேறுபாதையால் ஓடியபடியால் வரட்சி ஏற்பட்டது. இது நடற்பதற்கு முன் வெள்ளம் வரட்சி மாறிமாறி ஏற்பட்டிருக்கிறது. மொகின்ஜோதாராவில் 200மாதவறட்சி இருந்ததாக குறிப்புகள் இருக்கின்றன. வரட்சியால் பஞ்சம் பட்டினி யால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். இது தவிர மலேரியா நோயாலும் மக்கள் அழிந்திருக் கிறார்கள்.

ஒரு தொகுதி மக்கள் இந்தியாவின் வடமேற்கு பகுதிக்கு இடம்பெயர்ந்து கிராமங்களை அமைத்து வாழ்கிறார்கள். வேறு தொகுதி மக்கள் பாகிஸ்தானின் சில பகுதிகளில் குடியேறி இருக்கிறார்கள். அவர்கள் அங்கு கிராமங்களை அமைத்து வாழ்கிறார்கள்.

### சிந்துவெளிமக்கள் இடம் பெயர்ந்ததற்கான ஆதாரங்கள்

உலகில் இடப்பெயர்வு தொடர்ந்து கொண்டிருக்கும் நிகழ்வாகும். புலம் பெயர்மக்கள் தாம் புதிதாக போய் குடியேறும் இடங்களுக்கு தாம் வாழ்ந்த இடங்களின் நினைவுகள், மொழி தெய்வ வழிபாடு பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை எடுத்துச் சென்று அவர்களின் தலைமுறைகளுக்கு நினைவுச் சின்னமாக்கி இருக்கிறார்கள்.

உதாரணமாக அமெரிக்காவில் குடியேறிய டச் பிரான்சு - இங்கிலாந்து மக்கள் புதிய இடங்களுக்கு அம்சாடாம், பரீஸ் லண்டன் என பெயரிட்டுள்ளார்கள். இதுபோல் சிந்துவெளிநாகரீகப் பகுதிகளில் புலம் பெயர்ந்து பாகிஸ்தானின் இதரபகுதியில் குடியேறிய மக்கள் அங்கு கிராமங்களை அமைத்து வாழ்கிறார்கள். முன் வாழ்ந்த இடங்களின் பெயரை புது கிராமங்களுக்கு சூட்டியிருக்கிறார்கள். பாரிதெண்டிகொற்கை கின்னி மதுரை ஆகிய நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழ் பெயருள்ள கிராமங்களை அங்கு காணலாம்.

### திருமண முறைகள்

ஒரிசாவில் 64 பழங்குடி இனக்குழுக்கள் இருக் கின்றன. இவர்கள் தமிழ்மொழியை ஒத்த திராவிட மொழிகளைப் பேசுகிறார்கள். இவர்களின் மண வாழ்க்கை சங்ககாலகாதல் மணத்தை படம் பிடித்து காட்டுகிறது. வயது வந்த பெண்கள் பெற்றோரிட மிருந்து சுதந்திரமாக விடப்பட்டு கூட்டம் கூட்டமாக குடிசைகளில் தங்க வைக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு முது பெண்டிர் பொறுப்பாக இருப் பார். வயது வந்த ஆண்களும் சுதந்திரமாக விடப்படு கிறார்கள். ஆணோ பெண்ணோ தங்களுக்கான வாழ்க்கை துணையை சுதந்திரமாக தெரிவு செய்யலாம். ஆனால் ஓர் இனக்குழுவை சேர்ந்த ஆணோ பெண்ணோ வேறு ஓர் இனக்குழுவிலிருந்து தான் துணையை தெரிவு செய்ய முடியும்.

ஆதாரம் - திரு ஆற்.பாலகிருஸ்ணன் ஐ.ஏ.எஸ்.சிந்துநதி கலாச்சார ஆய்வாளர் - சிந்துமுதல் வைகை வரை நூலின் ஆசிரியர் ஒரிசா மொழிவல்லுநர்- முன்னால் ஒரிசா முதல்வரின் ஆலோசகர்

### சங்ககால நூல்கள் கீழடி ஆதிச்ச நல்லூர் அகழாய்வுகள்

சங்ககால நூல்களில் குறிப்பாக பட்டினப்பாலை மதுரைக்காஞ்சி தொல்தமிழரின் சீர்மிகு வாழ்வை படப் பிடித்து காட்டுகின்றன. இவைகளில் உள்ளவை வெறும் கற்பனை ஆதாரமற்றவை என தமிழரை தவிர மற்ற மொழி பேசும் மக்கள் நிராகரித்துவிட்டனர்.

மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் 2013-2014 இல் நடைபெற்ற அகழ்வாராய்ச்சி மேற்படி சங்க பாடல் களில் கூறப்பட்டவை உண்மையானது எனவும், சிந்து வெளி நாகரீகத்து ஒப்பான நாகரீகம் வைகையாற்றம் கரையில் தழைத்தோங்கி இருந்ததெனவும் உறுதிப் படுத்தி இருக்கிறது. முழு உலகத்தின் கவனத்தையும்கீழடி நோக்கி திருப்பி வைத்திருக்கிறது.

இனி கீழடிநோக்கி எமது பார்வையை திருப்புவோம்.

### கீழடி

மதுரையிலிருந்து 15 கிலோமீட்டர் தூரத்தில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி அமைந்திருக்கிறது. பழைய வைகையாற்றுப்படுக்கையில் ஒரு தென்னந் தோப்பில் 110 ஏக்கர் பரப்பளவில் அகழாய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இதில் ஒருசிறிய இடத்தில் தோல்வியாளர் திரு அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையில் அகழாய்வு நடத்தப்பட்டது.

**கிடைத்த பொருட்கள்**

சுடுமண்பானைகள் இரண்டு லட்சத்திற்கு மேல் கிடைத்திருக்கின்றன. இவைகளில் 100 மேற்பட்டட பானைகளில் கிறுக்கல் எழுத்துகள் காணப் படுகின்றன தமிழ்பிராமி எழுத்துக்கள் தமிழியிலும் சில பானைகளில் எழுதப்பட்டிருக்கின்றன. மொழி வல்லுநர் களால் வாசிக்கப்பட்ட பெயர்கள் அதன் குயிரன்லேந்தன் ஆகியவை. பானை செய்வோர் கற்றவராய் இருந்தது இதன் மூலம் புலப்படுகிறது.

சுட்டமண்ணிலான 16மனித உருவங்கள் தாயக் கட்டைகள் தங்க ஆபரணங்கள், ஆணிஅரிவாள், இரும்பை உருக்க இரண்டுக்கு மண்குனை, ஆடுமாடு எலும்புகள் வளர்ப்பு குதிரை எலும்பு ராட்டை தக்கடி துணிசெய்ய உதவும் உபகரணங்கள் மணிமாலைகள் ரோம நாணயங்கள் உறைகிணறுகள்

கீழடி நாகரீகத்தை உறுதிப்படுத்தும் பட்டினப் பாவை பாடல் பூம்புகார் - காவிரிப்பூம்பட்டமை துறை முகம் வந்தபொருள் பாடியவர் - கடியலூர் உத்திரங் கண்ணயர். பாடப்பட்டவர் - கரிகால்பெருவனத்தாள்

**பாடல்**

நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும் காலின் வந்த கருங்கதி
மூடையும் வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் குடமலைப்
பிறந்த ஆரமும் அகிலமும்தென் கடல்முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப்பயனும் ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்

**பொருள்**

வேற்று நாடுகள் யவனம் ஆகிய நாடுகளிலிருந்து கடலில் கப்பல்களில்கொண்டு வந்த நிமிர்ந்தவளர்ப்பு-குதிரைகளும் பக்கத்து ஊரில் கேறணம் வண்டிகளில் கொண்டுவரப்பட்ட கருமினது மூட்டைகளும் - வடக்கே மேருமலையில் பிறந்த பொன்னும் இரத்தின மணிகளும் மேற்கு மலையில் விளைந்த சந்தனமும் அகிலும், தெற்கு கடல் மன்னார்கடலில் தோன்றிய முத்தும், கீழ்க்கடலில் வளர்ந்த பவளமும், கங்கை கரையிலிருந்து வந்த பொருட்களும் காவிரிக்கரை வழங்கிய பொருட்களும் ஈழத்திலிருந்து வந்த பொருட் களும் கழகம் - கடாரம் - இன்றைய பர்மாவிலிருந்து வந்தபொருட்களும் வேற்றுநாட்டினர் விரும்பும் மூதூர்

**பாடல்**

மொழி பலபெருகிய பழி தீர்த்தே எத்துப் புலம்பெயர் மாக்கள்
கலந்தினிது உறையும் முட்டாச்சித் பின் மட்டினம்

**பொருள்**

பலமொழிபேசும் புகழ்சிறந்த நாடுகளில் இருந்து வந்தமக்கள் இங்குள்ள மக்களுடன் ஒன்றெனக் கலந்து இனிமையாகவாழும் குன்றச் சிறப்புடைய பட்டினம் - அதாவது புகார்

**உறைக்கிணறுகள்**

பாடல் - பறழ்ப்பன்றப் பல்கோழி உறைக்கிணற்றுப் புறச்சேரி

பொருள் - பன்றிகள் கோழிகள் - பல கொண்ட உறைக்கிணறுடையபுறச்சேரி

இனி மதுரைக்காஞ்சியை பார்ப்போம்
பாடியவர் - மாங்குடி மருதனார்
பாடப்பட்டவர்
பன்நாட்டுவணிகர்வந்து குவியும் பாண்டிய மண்டலம்

பாடல் -

முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம் அரம்போழ்ந்து அறுத்த
கண்றேர் இலங்குவளை பரதர்தந்த பல்வேறு கூலம் இருங்க
ழிச் செதுவில் தீம்புளி வெள உப்புப் பரந்தோம்பு வன்னகத்திமிலர்
கொழுமீள் குறைஇயதுடிக்கண் துணியல் விழுமியநாவாய்
பெருநீர் ஓச்சுநர் நனந்தரைத் தோத்து நன்கலன் உய்ம்
மார் புணர்ந்து உடன் கொணர்ந்த புரவியொடுஅனைத்தும்

பொருள்

அலைமுழங்கும் கடலிலே விளைத்த ஒளிவீசும் முத்துக்கள் வான்அரத்தால் கீறி அறுத்து சிறப்புடைய தாகச் செய்த அழகிய சங்குவளையல்கள் செட்டிமார் கொண்டுவந்த பல்வேறான பண்டங்கள் உப்பங்கழி களில் பாத்திகட்டி விளைவித்தவெள்ளை உப்பு வெல்லக் கட்டி கூட்டிப் பொரித்த இனிக்கும் புளி வலியகை உடைய மீன்காரர்கள் மீன்பிடிப்படகிலேறிக் கொண்டு வந்து துண்டாக்கிய பெரியகொழு மீன் கருவாடுகள் ஆகியவற்றை மரக்கலங்களில் அதைத்திறம்படக் கடலிலே செலுத்துவோர் பரந்த உலகின் பல பகுதிகளில் இருந்தம் யவனம் போன்ற தேசங்களிலிந்து கொண்டு வந்த குதிரைகளுக்கு விலையாகப் பெற்று கொண்டு ஏற்றிச் செல்வார்கள்.

தமிழ்நாட்டில் 100க்கு மேற்பட்ட புதைகுழிகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானதும் பெரியதும் ஆதிச்ச நல்லூர்

**ஆதிச்ச நல்லூர்**

இது தாமிர பரணி ஆற்றுப்படுக்கைக்கும் பாண்டியரின் கொற்கை தலை நகரத்திற்கும் அருகாமை யில் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதை 1876 இல் டாக்டர் ஐகோர் தொல்லியலாளர் ஆய்வு செய்துள்ளார். 1903-1904 ஆண்டுகளில் டாக்டர் அலெக் சாண்டர் நீ அவர்களால் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. காலம் கிமு 1000-600

**கண்டுபிடிக்கப்பட்டவை**

எழுத்துக்கள் அற்ற பானைகள், காதணிகள், புஷன் ஆபரணங்கள் மணிக்கோர்வை நெல் அரைக்கும் கல், நெல் பயறு உமி

முதுமக்கள்தாழிகள் 169 இருக்கின்றன. முழு உடல்கள் குனிந்த நிலையில் சிவப்பு தாழிகளில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. முன்பு புதைத்து பின்புதோண்டி எடுக்கப்பட்ட எலும்பு எச்சங்கள் கறுப்பும் சிவந்த தாழி களில் வைத்து அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

**புதைக்கும் திராவிட கலாச்சாரத்திற் குசங்க நூல் ஆதாரங்கள்**

புறநானூறு பாடல் - 256

*பாடியவர் பெயர் தெரியவில்லை.*

பாடல்

**கலம் செய்கோவே கலம்செய்கோலே அச்சுடைச்**
**சாகாட்டு ஆரம்பொருந்திய சிதுவெண்பல்லி போலத்**
**தன்னொடு சுரம் பல வந்த எமக்கும் அருளி வியன**
**மலர் அகன் பொழில் ஈமத்தாழிஅகவது ஆகவலினமோ**
**நனந்தலை மூதூர்க்கலம் செய்கோலே**

பொருள்

*மண்கலம் செய்யும்வேட்கோவலனே (ஈமத் தாழி) வண்டிச் சக்கரத்தில் சேர்ந்து பொருந்திய பொருந்திய சிறு வெண்பல்லி நெடுந்தொலைவு அவ்வண்டியோ செல்வதைப் போல வாழ்வின் எல்லா இடர்பாடுகளிலும் எனது தலைவனோடு வாழ்ந்து வந்தவன் எனது தலை வனுக்கு செய்யும் தாழியில் எனக்கும் இடம் வைத்து அகலமாக வன்னக.*

*பாடல் சிறப்பு தாழிசெய்யும் குயவரையோ அரசனே என அழைப்பதன் மூலம் அவர் சமுதாயத்தில் உயர்வாக மதிக்கப்பட்டார்கள் என்பது புலனாகிறது.*

*புறநானூறு பாடல் - 228*
*பாடியவர் - புலவர் ஐயூத் முடவனார்*
*பாடப்பட்டவர் - சோழன் குனமுந்தத்து துஞ்சிய மிள்ளிவளவன்*

*பாடல்*

**கலஞ் செய்கோவே கலஞ்செய்கோவே அகல் இரு**
**விசும்பினி ஊன்றும் சூளைநனந்தலை மூதூர்கலம் செய்கோலே**
**அளியை நீயே யாங்கு ஆகலை கொல் - நிலவளரசூட்டிய**
**நிள்நெடுந்தானைப் புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை விரிகதிர்**
**ஞாயிறு விசும்பு இவர்ந்தன்ன சேண் விளங்கு சிறப்பின் செம்பியர்**
**மருகன் கொழுநுடங்கு யானை நெடுமாவளவன் - தேவர் உலகம்**
**எய்தினை ஆதலின் அண்ணேள் கவிக்கின் கண்ணகன் தாழி**
**வனைதல் வேட்டனை ஆயின், எனையதூஉம் இரு நிலம்**
**திகிரியாப் பெருமலை மண்ணாவனைதல் ஒல்லுமோ நினைக்கே**

பொருள்

*மண்கலம் செய்யும் வேட்கோவனே திணிக்கப் பட்டது போன்ற அடர்ந்த புகைவானத்திலதங்கும் அகன்ற சூளையையுடை வேட்கோவனே நின்செயல் இரங்கத்தக்கது. நிலத்தின் எல்லையாகப் பரந்த சேனை யும் புலவர்கள் புகழ்ந்த பொய்ம்மை இல்லாத பெரும் புகழும் கொண்டு வானத்தில் விளங்கும் சூரியனைப் போன்று திகழும் சோழர் குலத்தின் வழி வந்தவன் யானைப் படையுடன் விளங்கும் நெடுமா வளவன் ஆவான். அவள் இப்போது தேவர் உலகத்தை அடைந் தான். அத்தகையவனுக்கு அகன்ற தாழியை அமைக்க வேண்டும் என்று விரும்பினால் இந்த உலகமே சக்கரமாகவும், பெரிதாக விளங்கும் மேருமலையே மண்ணாகவும் தொண்டு அருங்கலம் வளைதல் வேண்டும் அது உன்னால் முடியுமோ?*

முடிவுரை

*இதுவரை கூறிய ஆதாரங்கள் - நகரவீடமைப்பு கண்டெடுத்த பொருட்கள், திராவிடமுறைப்படி சடலங் கள் தாழிகளில்வைத்து புதைத்தல், வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவை சிந்துவெளிநாகரீகமும் தொல் தமிழர் நாகரீகமும் திராவிட நாகரீகங்களே என உறுதி யாக சொல்லலாம். சிந்துவெளி மக்கள் ஆதிதிராவிடத் தமிழர் என்பதற்கு புலம்பெயர்ந்த சிந்து மக்கள் குடியேறி அமைத்த புது இடகிராமங்களுக்கு தமிழ் பெயர்களை காணலாம். ஒரிசா பழங்குடிமக்களின் மணவினை கலாச்சாரம் சங்ககாலத்தை படம் பிடித்து காட்டுகிறது.*

*சங்க நூல்களான பட்டினப்பாலை மதுரைக் காஞ்சி, புறநானூறில் உள்ளவை ஆதாரங்களுடன் உண்மை என நிருபிக்கப்பட்டிருக்கிறது.*

**ஆதாரங்கள் - உசாத்துணை நூல்கள்**


1. *சிந்துதுதல் வைகை வரை நூல் ஆசிரியர் திரு ஆர்.பாலகிருஷ்ணன். ஐ.ஏ.எஸ்.சிந்துவெளி நாகரீக ஆய்வாளர்*
2. *பட்டிளப்பாலை, மதுரைக்காஞ்சி, புறநானூறு பாடல்கள்*


# ப(ரி)தவிச் சோபிதம்

■அ.பௌநந்தி

நீயே கற்பிதம் செய்கிறாய்
உன் இருக்கைக்கான
அலங்காரங்களை
ஒவ்வொரு அங்குலமாக
சோபிதங்களை
சுவீகரிப்பதாய்
சுழிக்குள் இழுக்கப்படுகிறாய்


அடிக்கடி ஆர்ப்பரிக்கிறாய்!
உனது இருக்கையின் கீழ்
ஆகாய பரவெளியாதி
அத்தனையும்
அடக்கமென்கிறாய்!
உன் இருக்கைக்குமுன்
அனைவரும் வந்திக்க
வேண்டுமென்ற
வாஞ்சையில் உழல்கிறாய்!

பின்னுள்ள உன் வாழ்சுவடுகளின்
அத்துணை தடயங்களையும்
அழிக்கிறாய் மீகதியில்...
தக்கவைத்தலுக்கான
உன் தந்திரமாய்...

ஆராத்திகளின் அணிவகுப்பில்
அலாதிப்படுகிறாய்
அந்தரிக்கிறாய்
குடை, சாமரை, கொடி, ஆலவட்டம்
அத்தனையின் திரட்சிக்காய்...

கயமையை துணிகளால்
கண்களைக் கட்டிக் கொண்டாய்!
கடுகளவும் உணராய்!
நுனிக்கொம்பர்களின்...?
நுகர்ச்சியில் நுழைந்தாய்!

இருக்கைக்கான அலங்காரம்...
சோபிதம்...
ஆராத்தி, குடை, சாமரை...
அத்தனையும் தாரைவார்க்கப்படும்
அந்திமத்தில்
என்ன ஆவாய்...?



# நிழல் தேடும் மரங்கள்!

இரா. சம்பந்தன் (கனடா)

சேர்! என்னைக் கல்யாணம் கட்டுங்கோ. உங்களை நான் கவனமாகப் பார்த்துக் கொள்வேன்.

ஒரு காலத்தில் இந்த வார்த்தைகளைச் சொன்ன வளைத் தான் கணவன் பிள்ளைகள் மாமன் மாமி என்று ஒரு கூட்டமாக இன்று கனடா பெரிய பிள்ளையார் கோவிலில் காண்கிறான் சத்யா.

அவனுக்கு அது அதிர்ச்சியாக இருக்கவில்லை. எனக்கே வயது வந்த பிள்ளைகள் இருக்கும் போது நான் காதலித்தவளுக்கு இருக்காதா என்ற எண்ணமே அவன் மனம் முழுவதும் வியாபித்து இருந்தது.

கோவில் உட்பிரகாரத்தை சுற்றி வரும் போது அவள் மூன்று முறை திரும்பிப் பார்த்துவிட்டாள் கூட வந்தவர்களுக்குத் தெரியாமல். அவள் கதைக்க விரும்பு கிறாள் என்பதை இதழ் ஓரத்தில் தோன்றி மறைந்த புன்னகை இருமுறை சொல்லிக் காட்டிவிட்டது.

ஆனால் அந்தப் புன்னகையைத் தொடர்ந்து ஓரக் கண்கள் பயத்துடன் கணவனையும் பார்த்துக் கொண்டதையும் சத்யா கவனிக்கத் தவறவில்லை.

அவன் எழுந்து வரமாட்டான் என்று சத்யாவுக்குத் தெரியும். முச்சக்கர வண்டியில் இருந்து கொண்டு தாயுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான் அந்தக் கணவன். கால் பழுது பட்டிருக்க வேண்டும். கவலை யோடு மகனின் காலைத் தடவிக் கொண்டிருந்தாள் அந்த அம்மா. அவர்கள் கவலை அவர்களுக்கு.

நீங்கள் சத்யன் மாஸ்டர் தானே? என்னை உங்களுக்குத் தெரிகிறதா நான் மேகா. நீலமேகலா. உங்களிடம் எண்பதாம் வருடம் வன்னியில் இருந்து வந்து தமிழ் படிச்சனான் மாஸ்டர்.

பெருமாள் சன்நிதியின் பின் புறத்தில் யாரும் காணாத ஒதுக்குப் புற ஒற்றை வழியில் எவரும் வராத போது எதிர்ப்புறமாக வந்து தயக்கத்துடன் கேட்டாள் அவள்.

எங்கள் காதல் பக்கங்களில் முக்கியமானவற்றைக் கிழித்து விட்டு வெறும் முகவரி பற்றி மட்டும் அவள் பேச நினைக்கிறாள் என்பது சத்யாவுக்குத் தெரிகின்றது.

தெரியும்.

தெரியுமா? அப்ப ஏன் நான் பார்த்தும் பார்க்காமல் இருந்தீர்கள்?

எனக்கு உங்களைக் கண்டதும் கூப்பிட்டுக் கதைக்க வேண்டும் போல இருந்தது. கூட வந்தவை ஏதாவது நினைச்சாலும் என்ற பயத்தில் தான் தெரியாதது போல இருந்தேன். இவ்வளவு காலம் போயும் அப்படியே தான் இருக்கிறீங்கள் மேகா. பேச்சின் திசையை மாற்றினான் சத்யா.

உண்மைதான். எவ்வளவு காலம் போனாலும் எல்லாம் குத்திய முள்ளுப் போல அப்படியே தான் இன்ன மும் இருக்கிறது மாஸ்டர். நான் சொல்வது மனசிலே. அவள் தலை கவிழ்ந்து சொன்னாள்.

தலைமேல் கூப்பிய கையோடு தேவாரம் பாடிக் கொண்டு வந்த ஒரு ஆச்சி தம்பி கொஞ்சம் விலகப்பா அங்காலே போவதற்கு என்றாள்.

அது தான் அவர் விலகிட்டாரே. இனி எங்கே விலகுவது? என்று அந்த ஆச்சிக்குச் சொல்லிச் சிரித்துக் கொண்டு திரும்பிப் போனாள் மேகலா.

காதலில் தோற்பது ஒரு கவலை என்றால் அந்தக் காதலியை திரும்பவும் காண்பது அதைவிடக் கவலை என்று தான் பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் விட தாங்க முடியாத கவலை யொன்று காதலிலே உண்டு. அது அனுபவித்தவர் களுக்கு மட்டும் தான் தெரியும்.

அது தான் காதலித்தவள் கண்ணுக்கு முன்னாலே தன் கணவனுக்கு செய்யும் பணிவிடைகளைக் காண்பது. அதைப் பார்த்து ஒரு பொறாமை வருமே அது தான் காதலில் தோற்ற மனங்களைச் சுட்டுத் தகனம் செய்கிற மிகப் பெரிய துன்பம். ஆறாத ரணம். மனதிலே அன்பைக் கலைத்துவிட்டுக் காமம் புகுந்துவிடும் நேரம் அது.

சத்யா பார்த்துக் கொண்டிருக்க முழங்கால்களில் கணவனுக்கு முன்னால் மண்டியிட்டு பாயில் இருந்து கொண்டு கணவனின் நெற்றியில் விபூதியைப் பூசிவிட்டு அவனின் கண்களைத் தன் ஒரு கையால் பொத்திக் கொண்டு உதடுகளால் நெற்றியை ஊதினாள் மேகலா.

அவளின் மறு கை மடிக்கப்பட்டு முழங்கை மட்டும் அவனின் மடியிலே ஊன்றப்பட்டு இருந்தது. தாவணிச் சேலை மட்டும் நிலத்திலே சரிந்து அவன் கால்

விரல்களோடு கதைபேசிச் சிரித்தது.

இனியும் கோவிலில் நின்றால் தற்கொலை தான் செய்து கொள்ள வேண்டிவரும் என்று நினைத்துச் சத்யா புறப்படத் தயாரான போது மாஸ்டர் என்றாள் மேகலா இப்போது தான் முதலில் கண்டவள் போல. எழுந்து நின்று சிரித்தாள். சத்தியனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

எனக்குப் படிப்பித்த மாஸ்டர் மாமி என்று அவள் அறிமுகப் படுத்தவும் எப்படி மோனே இருக் கிறாய் என்று கேட்டாள் அந்தத் தாய். அதற்குள் அந்தக் கணவனும் கைகூப்பி வணங்கி வரவேற்று விட்டான்.

இருக்கிறேனம்மா. என்ன இவர் காலிலே.

என்னத்தைச் சொல்லுறது மோனை. செல் வெட்டினது தான். உன்னைப் போலத்தான் இவனும் பள்ளிக் கூடத்திலே படிப்பிச்சவன். இப்ப தள்ளிக் கொண்டு திரியுறம். எங்கே பெண்சாதி பிள்ளையள் வரல்லையா? தனிய நிக்கிறாய் தம்பி.

இல்லையம்மா. நான் தனியத்தான் வந்தனான். இன்றைக்கு என்னுடைய பிறந்தநாள். மனுசி வீட்டிலே சமைக்குது. பிள்ளைகளுக்கு டியூசன். அது தான்

ஓ! பிறந்தநாள் வாழ்த்துக்கள் மாஸ்டர் என்று ஆங்கிலத்தில் சொன்ன அந்தக் கணவன் மேகலாவைப் பார்த்து படிக்காத அம்மா கூட நல்லா இரு மோனை என்று சொல்லுறா. மேகா நீர் படிப்பித்த மாஸ்டருக்கு ஒரு வாழ்த்துச் சொல்லாமல் நிற்கிறீர். என்ன பழக்கம் இது என்றான்.

நான் கவனிக்கவில்லை. பிறந்தநாள் வாழ்த்துக்கள் மாஸ்டர் என்றாள் மேகலா.

சத்யா நன்றி சொல்வதற்குள் இவள் பிள்ளையும் யாழ்ப்பாணத்திலே படிக்கும் போது யாரோ உயிர்ச் சினேகிதியாம். வருத்தம் வந்து செத்துப் போச்சாம். அதின்ரை பிறந்தநாளும் இன்றைக்குத் தான் கட்டாயம் கோவிலுக்கு போக வேண்டும் என்று சொல்லி கால் ஏலாதவனையும் இழுத்துக் கொண்டு வந்து விட்டாள்.

வருசா வருசம் அந்தப் பிறந்தநாளுக்கு கோவிலுக் கும் போகாமல் இருக்க மாட்டாள். நாள் முழுவதும் சாப் பிடவும் மாட்டாள். ஊர் உலகத்திலே இல்லாத அப்படி யொரு சினேகிதம் வைச்சிருக்கிறாள் என்றாள் மாமி.

சத்யா திகைத்துப் போனான். அவனுக்கு அந்த நிகழ்ச்சி ஞாபகத்துக்கு வந்தது. அன்று அவனுக்குப் பிறந்த நாள். யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து படித்த வீட்டுக்காரரிடம் டியூசன் முடிய நேரமாகும் என்று அறிவித்து விட்டு வந்த மேகலாவுடன் அந்த மாலை வேளையில் கொட்டடி மீனாட்சி அம்மன் கோவில் முன் மண்டபத்தில் பண்ணைக் கடலைப் பார்த்தபடி அமர்ந்திருந்து பேசிக் கொண்டிருந்தான் சத்யா.

களைத்துச் சிவந்து போய் பண்ணைக் கடலிலே கொஞ்சம் கொஞ்சமாக மறையும் சூரியனை அந்தக் கோவிலில் இருந்து பார்ப்பதே ஒரு தனி அனுபவம். அருகே மனதுக்குப் பிடித்த காதலியும் இருந்துவிட்டால் அங்கே சொர்க்கம் நிர்மாணிக்கப்பட்டு விடுகின்றது.

வரும் போது நாவலர் சந்தியில் சினிமாச் சுவ ரொட்டிகளைத் தின்றுவிட்டு ஒரு மாடு போட்டிருந்த சாணியில் வழுக்கி மோட்டார்ச் சைக்கிளோடு விழுந்து முழங்கையில் கல்லுத் தேய்த்த காயத்தை அவளுக்கு இன்னும் காட்டவில்லை சத்யா. சொன்னால் கவன மில்லை என்று ஏசுவாள் அழுவாள் என்று பயம்.

பிறந்த நாள் பரிசாக ஒரு மொண்டியா மணிக் கூட்டைக் கையில் கட்டிவிட்ட போது தான் காயத்தை அவள் பார்த்துவிட்டாள். கத்தினாள். உங்களுக்கு ஒன்று என்றால் நான் என்ன செய்கிறது என்று அழுதாள். பின்பு சொன்னாள்.

இது வேறு ஒன்றுமில்லை. காலையிலே பிறந்த நாளுக்கு முட்டை போட்ட கேக் வாங்கி யோசிக்காமல் இரண்டு பேரும் சாப்பிட்டோம் இல்லையா? அது தான் கடவுளுக்குப் பொறுக்கல்லை. உடனேயே காட்டிப் போட்டுது.

நான் இந்தக் கோவில்லே இப்பவே சத்தியம் பண்ணுறேன். இனி உயிர் உள்ள வரைக்கும் உங்கள் பிறந்த நாள் அன்றைக்கு எதுவும் சாப்பிடாமல் விரதம் இருப்பேன். ஏதாவது ஒரு கோவிலுக்கு போட்டு வந்து தான் தேத்தண்ணீர் கூடக் குடிப்பேன் சரியோ.

பொறுங்கோ வருகிறேன் என்று சொல்லிலிட்டு சத்யா கீழே ஓடினான். இரண்டு தட்டிலே பிரசாதம் வாங்கிக் கொண்டு வந்து அம்மா செத்துப் போன உறவுக் காக சாப்பிடாமல் இருக்க வேண்டாம் என்று உங் களுடைய மருமகளுக்கு சொல்லுங்கோ அம்மா. கடவுள் இனிக் கோவிக்க மாட்டார். இதைச் சாப்பிடச் சொல்லுங்கோ என்றான் சத்யா.

இல்லை நான் இன்றைக்குச் சாப்பிட மாட்டேன். விரதம். நான் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவள். என் சினேகிதிக்காக அம்மனுக்கு முன்னாலே செய்த சத்தியம் இது. சினேகிதி தான் என்னோடு இல்லாமல் போனாலும் அவள் தொடக்கி வைத்த நினைவுகள் இன்னமும் என் மனதுக்குள்ளே ஈரமாகத் இருக்கின்றன. கோவிக்காதை யுங்கோ மாஸ்டர்.

அது சொல்வழி கேளாது மோனை. தான் பிடிச்சது தான் சரியென்று நிக்கும். நீ அதிலே என்னுடைய பேத்திகள் இரண்டு பேரும் நிக்கினம். அவையைச் சாப்பிடச் சொல்லிக் குடு தம்பி. அதுகளுக்குப் பசிக்கும்.

சத்யா அந்தப் பிள்ளைகளிடம் தட்டுகளைக் கொடுத்துவிட்டு வந்தான். நான் தப்புப் பண்ணி விட்டேன் என்று மனம் அழுதது.

சரி மாஸ்டர் நாங்கள் போயிட்டு வாறோம். மனைவி பிள்ளைகளைக் கேட்டதாகச் சொல்லுங்கோ. உங்களுடைய பிள்ளைகளுக்கும் என்னுடைய பிள்ளை கள் வயது தான் இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு வேளை கூடவோ தெரியாது. கவனமாகப் படிப்பி யுங்கோ. உங்களைக் கண்டது சந்தோசம் என்ன என்று சொல்லிச் சிரித்தாள் மேகலா.

அவள் என்ன கேட்கின்றாள் என்று சத்யாவுக்குத் தெரியும். என்னை விட்டு ஓடிப்போய் உடனேயே சந்தோசமாகக் கல்யாணம் பண்ணிப் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு விட்டீர்களா என்பதைத்தான் ஒரு

வேளை கூடவோ தெரியாது என்று அவள் ஒரு வார்த்தையை வயதோடு சேர்த்துக்கொண்டாள் என்பது சத்யாவுக்கு மட்டும் தெரியும்.

இல்லை எனது பிள்ளைகளுக்கும் இவர்களுடைய வயது தான் இருக்கும் என்ற பதிலின் மூலம் உம்மை நான் முந்திக்கொண்டு ஓடவில்லை என்று மறைமுகமாகச் சொன்னான் சத்யா. அதை விளங்கிக் கொண்டு புன்னகைத்தாள் மேகலா.

சத்யாவுக்கு வருத்தம் தான். இவ்வளவு தூரம் பேசிக் கொண்ட பிறகு கூட ஒரு சம்பிரதாயத்துக்காக என்றாலும் ஒரு நாளைக்கு மனைவி பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு வாங்கோ மாஸ்டர் என்று இவள் கேட்காமல் போகின்றாளே சரி அதுதான் வேண்டாம் போன் நம்பரையாவது தந்து கதையுங்கோ என்று சொல்லியிருக்கலாம் எதுவுமே சொல்லாமல் போகின்றாளே என்று துடித்தான் சத்யா.

பொறுக்க முடியாமல் அம்மா உங்களை எனக்கு நல்லாகப் பிடிச்சிருக்கு. ஒரு நாளைக்கு மகனையும் மருமகள் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு எங்கள் வீட்டுக்கு வாங்களேன் என்று மாமிக்குத் தூண்டில் போட்டுப் பார்த்தான் சத்யா.

உங்களுக்கு மாமியை விருப்பம் என்றால் இப்ப வேண்டும் என்றாலும் கூட்டிப் போங்கோ எங்களுக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை. ஒரு கிழமை உங்கள் வீட்டிலும் மாமி இருந்து பார்க்கட்டும் என்ற தன் பதிலால் உன் வீட்டுக்கு நான் வர மாட்டேன் என்று அறிவித்துவிட்டு திரும்பினாள் மேகலா.

மாஸ்டர் எனக்கு காலிலே பிரச்சனை வந்த பிறகு நல்ல மனுசரை சந்தித்தது மிகவும் குறைவு. அதிகம் வெளியிலும் நான் போவதில்லை. உங்களைப் போல படித்த வர்க்கத்திலே நட்பு இருந்தால் நல்ல விசயங் களைக் கதைக்கலாம் என்று நினைக்கிறேன்.

நீங்கள் மேகாவின்ரை செல் நம்பரை வாங்கிக் கொண்டு போங்கோ. எனக்குப் போன் இல்லை. அது தேவையுமில்லே. இந்த நிலையிலே எனக்கு அது வீண் செலவும் தானே. மேகா மாஸ்டருக்கு உமது நம்பரை எழுதிக் கொடுமப்பா

நில்லுங்கோ மாஸ்டர் அருச்சனை அலுவலகத் திலே ஒரு பேனை வாங்கி எழுதிக் கொண்டு வாறேன் என்ற மேகலா சற்று நேரத்தில் எழுதி வந்து தந்துவிட்டு விடை பெற்றாள்.

கடவுளே எனது இன்றைய பிறந்த நாளுக்குத் தான் மிகப் பெரிய உறவுப் பரிசு ஒன்றைத் தந்திருக்கின்றாய். நான் தொலைத்த உறவை திரும்பவும் தேடித் தந்திருக் கின்றாய்! என்னவளோடு நான் என்றுமே பேசிக் கொண்டு இருக்க வேண்டும். அவளோடு பேசிக் கொண்டு இருக்கும் போதே செத்தும் விட வேண்டும்.

மேகா எழுதித் தந்த துண்டை சட்டைப் பையில் வைத்துக் கொள்ள விரும்பவில்லை சத்யா. அருச்சனை செய்த சந்தனம் குங்குமம் தேங்காய் இருந்த பையிலே கவனமாக வைத்துக் கொண்டு காரில் ஏறினான். அவன் மனம் முழுவதுமே மேகலா வியாபித்திருந்தாள்.

யாழ்ப்பாணத்துக் கல்வி உலகத்துக்கு அவன் மனம் சென்று பழைய நினைவுகளை ஒவ்வொன்றாகத் தேடத் தொடங்கியது.

மாஸ்டர் உங்களை இரண்டு பிள்ளைகள் வந்து தேடிக் கொண்டு போகினம் என்று அறிவித்தாள் அந்தத் தனியார் கல்வி நிலையத்தின் வரவேற்பு அறைக்குப் பொறுப்பான பெண்.

என்னையா யாரது என்று கேட்டான் சத்யா.

அடேய் அந்த இரண்டாவது ஓ. எல் வகுப்பிலே வடிவான உயரமான வெள்ளைப் பிள்ளை ஒருத்தி இருப்பாளடா. வன்னியிலே இருந்து படிக்க வந்தவள் அவளும் மற்றது அந்த வாயாடி ஸ்ரெலா அவளும் தானடா வந்து தேடிக் கொண்டு போறாளவை.

ஏதாவது பிரச்சனை என்றால் ஸ்ரெலாவின்ரை ஆட்கள் கடலிலே சுறாவுக்கு குத்துற மண்டாவால தான் குத்துவான்கள் கவனமாக இரு என்று அடுத்த அறையி லிருந்த சக ஆசிரிய நண்பன் சொல்லிச் சிரித்தான்.

சேர் இன்று காலை வகுப்பிலே ஒரு பையனை நீங்கள் படிக்கவில்லை ஏசினீங்களே அப்போது நீங்கள் சொன்ன கதை உண்மையாக நடந்ததா? நீங்கள் படிக்க கஸ்டப்பட்டீங்களா? என்று கேட்டாள் நீலமேகலா சத்யாவிடம் தனிமையில்.

உண்மைதானம்மா. படிக்கக் காசில்லாமல் நான் பட்ட கஸ்டம் கொஞ்சமல்ல. கற்பூரக் கம்பனியிலே வேலைக்குப் போய்த்தான் நான் படிக்கக் காசு சேர்த் தேன். இவன்களுக்குப் படிக்கச் சொல்லிப் பெற்றார் காசை அள்ளி இறைச்சாலும் படிக்கிறான்கள் இல்லை. அது தான் கோபம் வந்தது.

சேர் சின்ன வயசிலே நீங்கள் பட்ட கஸ்டம் போகட்டும். நீங்கள் என்னைக் கல்யாணம் கட்டுங்கோ. வன்னியிலே எங்களுக்கு நிறைய வயல் இருக்குது. திரு கோணமலையிலும் வவுனியாவிலும் கடை இருக்குது. நான் உங்களைக் கவனமாகப் பார்த்துக் கொள்வேன்.

சத்யாவின் பதிலுக்குக் காத்திராமல் தானே ஒரு முடிவைச் சொல்லி விட்டு மேகலா போய் விட்டாள்.

அதன் பின்பு யாழ்ப்பாணத்து உறவினர் வீட்டில் தங்கிப் படித்த நேரத்தை விட மேகலா சத்யாவுடன் இருந்த நேரம் தான் அதிகம் என்று சொல்லும் அளவுக்கு அந்த உறவு மலர்ந்து இருந்தது.

எங்கள் வீட்டிலே யாழ்ப்பாணத்துப் பையன் என்றால் மறுக்க மாட்டினம். உங்கள் வீட்டிலே தான் வன்னி ஆட்கள் அது இது என்று ஏதாவது பிரச்சனை வருமோ தெரியாது. நான் பார்த்த அளவிலே யாழ்ப்பாணத் தாருக்கு சரியான கொழுப்பு இருக்கு என்பாள் மேகலா.

உமக்கு அப்படி ஒரு பயம் இருந்தால் இப்பவே உம்மை எங்கள் வீட்டுக்குக் கூட்டிப்போய் அவர்கள் வாயாலேயே நீ தான் எங்கள் மருமகள் என்று சொல்ல வைக்கட்டுமா.

இல்லை இல்லை அதெல்லாம் வேண்டாம். நான் உங்களை நம்புறன். நீங்கள் சொன்னால் சரிதான்.

பல காதல்கள் சாதியாலே அழிந்தன. பல காதல் கள் சாத்திரத்தால் அழிந்தன. பல காதல்கள் பணத்தாலே

அழிந்தன இன்னும் பல காதல்களைப் பெற்றார் அண்ணன் தம்பிகளே அழித்து ஒழித்தனர் யாழ்ப் பாணத்தில்!

ஆனால் இவை எதுவும் இல்லாமல் நன்றிக் கடனுக்குப் பிராயச்சித்தமாக தனது காதலைத் தியாகம் செய்ய வேண்டிய காலம் ஒன்று வரும் என்று சத்யா எதிர்பார்த்து இருக்கவில்லை.

சத்யா ஏ.எல் படித்துவிட்டு வேலையில்லாமல் வீட்டிலே இருந்த உம்மை இன்றைக்கு யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆசிரியர்களில் ஒருவர் ஆக்கியது நாங்கள்.

பட்டி தொட்டியெல்லாம் உமது பெயரைச் சுவரொட்டியாக ஒட்டிப் பிரபலப்படுத்தியது நாங்கள். அதுக்கு நீர் செய்யும் நன்றிக் கடனா இது?

உம்முடைய கதை வெளியே பரவினால் எவன் எங்களை நம்பிப் பொம்பிளைப் பிள்ளைகளைப் படிக்க அனுப்புவான் என்று சொல்லும் பார்ப்போம். தயவு செய்து இந்தக் காதல் கத்தரிக்காய் ஒன்றும் உமக்கு வேண்டாம்.

இந்த டியூட்டரியை நம்பித்தான் எங்கள் எல்லோருடைய வாழ்க்கையும் இருக்கு. நீர் ஒரு ஆளாலே அத்தனை பேரும் கஞ்சிக்கு அலைய வேணும் என்று நினைக்கிறீரா. உம்மை எவ்வளவு உயர்வாக நினைத் திருந்தோம். இப்படிப் பண்ணியிருக்கிறீரே. சீ!

இப்ப நினைச்சாலும் உம்மை நீக்கிவிட்டு வேறு ஆளைப் போட முடியும். அது பிரச்சனையைத் தீர்க்காது என்ற படியால் தான் உம்முடைய காலிலே விழுந்து கெஞ்சிக் கொண்டிருக்கின்றோம். தயவு செய்து நாங்கள் சொல்வதைக் கேளும்.

உங்களுக்கு என் காதல் தான் பிரச்சனை என்றால் நான் மேகலா படிச்சு முடித்த பின்பு வன்னியிலே போய் பேசிச் செய்து கொள்கிறேன். அது வரைக்கும் நான் அவளைப் பார்க்கல்லை சரியோ

இல்லை நீர் யாரை வேண்டும் என்றாலும் கட்டும். ஆனால் இங்கே படித்த பிள்ளைகள் வேண்டாம். எவ்வளவு காலம் போனாலும் அந்த அவப் பெயர் எங்களைப் பாதிக்கத்தான் செய்யும். இந்த நிலையத்தை நாங்கள் எதிர் காலத்தில் மிகப்பெரிய கல்லூரி ஆக்கும் கனவோடு இருக்கின்றோம். அந்தக் கனவைக் கெடுக்காதையும்.

யாழ்ப்பாணக் கல்வி உலகத்துக்கு நீர் செய்யும் மிகப்பெரிய உதவியாக இதை நினைத்து எல்லாவற்றை யும் கையை விடும்.

சரி உங்களுக்கு நான் இப்ப என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள் சத்யா நிர்வாகத்தைக் கேட்டான்.

நீலமேகலாவை நாங்கள் டியூட்டரியை விட்டு வெளியே அனுப்புறம். நீர் அவளோடை இனி ஒரு தொடர் பும் வைக்கக் கூடாது. அவள் வன்னிக்கே போகட்டும்.

மார்கழியில் பரீட்சை வரப் போகுதே இடையிலே படிப்பைக் குழப்பி அனுப்பினால் பாவம் அல்லவா

அதை அவள் முதலிலே யோசித்து நடந்திருக்க வேணும். நீரும் தான்!

சத்யா எதுவும் பேசவில்லை. சில நாட்கள் வகுப்புக்கு அவன் வரவுமில்லை.

அன்று சத்யா வகுப்புக்கு வந்தான். வகுப்பிலே மேகலா இல்லை. ஸ்ரெலா மட்டும் அவனை ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டுத் தலை குனிந்து இருந்தாள். நீ எல்லாம் ஒரு மனுசனா என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை.

தம்பி யாழ்ப்பாணத்தவனுக்கு இனி அந்தப் பிள்ளையைக் கட்டித்தரக் கூடாது என்ற சுயமரியாதை தலை தூக்கக் கூடியதாக அதின்ரை அப்பனோடு பண்பு தவறிக் கதைத்துப் போட்டினம் உம்முடைய டியூட்டரி ஆட்கள். அவன் படிக்காதவன் என்றாலும் மானஸ்தன். வசதியானவன்.

அவன் என் நண்பன். அவன் கண் கலங்கியதை முதன் முதலாக நான் அன்றுதான் பார்த்தேன்.

உம்மைக் காதலித்த ஒரு தப்புக்காக அந்தப் பிள்ளை இந்த முற்றத்திலே அப்பனிட்டை வாங்கின அடிகள் கொஞ்சமல்ல. நாங்கள் மறித்திருக்காவிட்டால் செத்திருக்கும்.

உன்னை நம்பிப் பிள்ளையைப் படிக்க விட்டால் அவள் என்ன ஏது செய்கிறாள் என்று நீ பார்க்க மாட்டியா? உன்னையும் அவளுக்கு ஒரு அப்பன் என்று நினைத்துத் தானே உனது வீட்டிலே இருந்து படிக்க விட்டேன். நீயும் சேர்ந்தா இந்தக் கூத்தெல்லாம்? என்று கேட்டான் தம்பி அவன்.

அதுகள் போட்டுதுகள். சரி நீரும் இனி உம்முடைய வேலையை போய்ப் பாருமன்.

இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்திக் காட்டிவிட்டுத் தெருப்படலையைச் சாத்திக் கொண்டு போனார் மேகலா இருந்து படித்த வீட்டுக்காரப் பெரியவர்.

இன்றைய கம்பியூட்டர் போன் வசதிகள் எதுவுமே இல்லாத ஒரு காலத்தில் அந்த வீட்டின் முன்னால் நீண்ட நேரம் நின்றான் சத்யா

ஏனப்பா ஏதாவது பிரச்சனையே நான் சமைத்து வைத்துவிட்டு பார்த்துக் கொண்டிருக்கிறன். கோவிலாலே வந்து காராலே இறங்காமல் இருக்கிறியள் என்றாள் மனைவி ஜன்னலால் எட்டிப் பார்த்து.

சாப்பாட்டைப் போடும் வாறன் என்று சொல்லி விட்டு அருச்சனைப் பையில் இருந்து மேகலா தந்த துண்டுச் சீட்டை எடுத்து விரித்தான் சத்யா.

அவன் ஆவலோடு எதிர்பார்த்த போன் நம்பர் அதிலே காணப்படவில்லை.

மரங்கள் என்றால் நிழல் கொடுக்கும் பண்பு அதற்கு இருக்க வேண்டும். ஆனால் அந்த மரங்களே தங்களுக்கு நிழல் தேடி அலைந்தால் அவைக்கு யார் எதனால் எந்த நிழலை எத்தனை தடவைகள் கொடுத்து விட முடியும்? இன்று இன்னொரு மரத்தினைச் சுற்றிக் கொண்டு வாழும் ஒரு கொடியின் போன் நம்பர் நிழல் கொடுக்குமா? இல்லையே! அதனாலே அதை நான் தரவில்லை.

என்ற வாக்கியத்தை மட்டும் தான் அதிலே கண்டான் சத்யா.

# நேர்காணல்



இராஜினிதேவி சிவலிங்கம்
சந்திப்பு - பரணீ

இராஜினிதேவி சிவலிங்கம் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற தலைசிறந்த ஆசிரியர்களில் ஒருவர். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், குறுநாவல், ஆன்மீகப் பாடல்கள், திருப்பள்ளி எழுச்சிகள் என பல இலக்கிய, ஆன்மீகச் செயற்பாடுகளில் ஆடுபட்டு வருபவர். நல்லதொரு மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தில் ஒன்றித்து பயணிக்கின்ற அருமையான படைப்பாளி. தொடர்ச்சியாக சிறுகதைகள் கட்டுரைகள் என்பவற்றை எழுதி சமுதாயத்துக்கு வேண்டிய நல்ல எண்ணக்கருக்களை விதைத்து வருகின்றார். அவரது நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்கு தருவதையிட்டு மகிழ்கின்றோம்.

**பரணீ**

வணக்கம் உங்கள் பிறந்த இடம் பெற்றோர் பாடசாலைக் கல்வி பற்றி அறிந்து கொள்ள விரும்புகின்றோம்.

**இராஜினிதேவி சிவலிங்கம்**

வணக்கம் நான் பிறந்த இடம் உடுவில். எனது பெற்றோர்களின் பெயர் இராமலிங்கம் நாகம்மா ஆரம்பக்கல்வியை உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும், உடுவில் மகளிர் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டேன்.

**பரணீ**

பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து எங்கு பட்டம் பெற்றீர்கள்? எந்தப் பாடங்கள் கற்பித்தீர்கள்?

**இராஜினிதேவி சிவலிங்கம்**

உயர்தரப் பரீட்சை எடுத்த பின்னர் எங்களுடன் ஒன்றாக கல்விகற்ற சுபாசினி, மேனகா, சுகன்யா ஆகியோர் சட்டம் பயில விரும்பினர். நானும் மேனகா, சுகன்யா ஆகிய இருவருடன் சேர்ந்து யாழ் சட்டக் கல்வி நிலையத்தில் கல்வி கற்றோம். பா.தவபாலன், அ.சிவராசா, நெல்லை க.பேரன், இரட்ணராஜா, மீனலோஜினி முதலானவர்களுடன் ஒன்றாகக் கல்வி கற்றோம். சட்ட முதல் தேர்வில் சித்தியடைந்தும் சூழ்நிலை காரணமாக சட்டக்கல்வியை தொடரமுடியாத காரணத்தால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி கலைப் பட்டதாரியாக பட்டம் பெற்றேன். கலைப் பட்டதாரியாக ஆசிரிய நியமனம் பெற்றதால் தமிழ், இந்துநாகரீகம் ஆகிய பாடங்களைக் கற்பித்தேன்.

**பரணீ**

இலக்கிய ஈடுபாடு எப்போது தோன்றியது? காரணமாக இருந்தவர்கள்.

**இராஜினிதேவி சிவலிங்கம்**

சிறு வயதிலிருந்தே வாசிப்பதில் ஆர்வம் இருந்தது. சுன்னாகம் நூல் நிலையத்தில் உள்ள நூல்களைப் பெறுவதற்கு எனது சகோதரர் உதவியாக இருந்தார். அங்கு பிரபல எழுத்தாளர்களான புதுமைப்பித்தன், ஜானகிராமன், பார்த்தசாரதி, சுந்தரம் ராமசாமி, அகிலன், கல்கி, சாண்டில்யன், ஜெனசிப்பியன் போன்றோரது நூல்களை வாசித்தமையால் இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட்டது. கல்கி, கலைமகள், ஆனந்த விகடன், சுபமங்களா, மல்லிகை ஆகிய சஞ்சிகைகளையும் வாசிப்பேன். ஈழத்து எழுத்தாளர்களான திரு.க.சட்டநாதன், கோகிலா மகேந்திரன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், தாமரைச்செல்வி, தாட்சாயணி, செங்கை யாழியான் போன்றவர்களது ஆக்கங்களும் எனக்கு இலக்கியத்தில், ஈடுபாட்டை ஏற்படுத்தியது. எனது இலக்கிய முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பவர் எனது கணவர் சிவலிங்கம் அவர்கள் எனலாம். எனது பாடசாலையில் சக ஆசிரியர்களாக இருந்த திரு.க.சட்டநாதன், முத்து இராதாகிருஷ்ணன் இன்னும் பல எழுத்தாளர்கள் எனது எழுத்து முயற்சிக்குத் தூண்டுதலாக இருந்துள்ளார்கள்.

**பரணீ**

உங்களது முதலாவது படைப்பு வெளியான ஊடகம் காலகட்டம் படைப்பு...

**இராஜினிதேவி சிவலிங்கம்**

நான் இராமநாதன் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றபோது தமிழ்சங்கத் தலைவராக இருந்தேன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடாத்தும் மாணவர் அரங்கு நிகழ்ச்சியை ஒழுங்கு படுத்தும் கே.எம். வாசகர் அவர்கள் எமது பாடசாலையிலும் அந்த நிகழ்ச்சியை நடாத்தினார். அந்த நிகழ்ச்சியில் நான் எழுதிய "உழைப்பின் உயர்வு" என்ற நாடகம் மேடை ஏற்றப்பட்டது. இது என்னுடைய எழுத்தாக்க முதல்

முயற்சி எனலாம். ஆசிரிய நியமனம் கிடைத்த பின்னர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கடமையாற்றிய காலப் பகுதியில் எனது ஆக்கங்கள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. 1988ம் ஆண்டு ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தினகரன் பத்திரிகையில் "சமுதாயச் சிற்பிகள்" என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதை வெளி வந்தது. இதே ஆண்டில் எனது கணவர் சிவலிங்கத்துடன் இணைந்து எமது குலதெய்வமான காட்டுமலை முருகன் மீது "காட்டுமலை கந்தசுவாமி பேரில் புதிய பிள்ளைத் தமிழ்" என்ற பிள்ளைத் தமிழை எழுதியுள்ளேன். உதயன் பத்திரிகையில், கவிதை முற்றம் என்ற பகுதியில் "வெளி நாடு" "ஆதவனின் சீற்றம்" என்ற கவிதைகளும் உதயன் பத்திரிகை, பிரகாசம், கூர்மதி, கவின்தமிழ், கலைக்கல சம், செம்புலம், வலம்புரி, யாழ்ப்பாணம், நல்லைக் குமரன் மலர் ஆகியவற்றிலும் ஜீவநதியிலும் எனது சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள் வெளி வந்துள்ளன.

**பரணீ**

**உங்களுடைய முதலாவது சிறுகதை தொகுதியான "நிலவும் சுடும்" சிறுகதை தொகுதி வெளியீடு பற்றிக் கூறுங்கள்**

**இராஜினிதேவி சிவலிங்கம்**

எனது முதலாவது சிறுகதைத் தொகுதியான "நிலவும் சுடும்" 2013ம் ஆண்டு வெளியிடப்பட்டது. சுமை, அமைதிப்பூங்கா, நிலவும் சுடும், மெழுகுவர்த்திகள், பொய் முகங்கள், உதவும் கை, நிறம் மாறும் மனிதர்கள், ஏமாற்றம், அன்பின் வலிமை, கனவும் காலங்கள், கல்லுக்குள் ஈரம், தரையில் விழுந்த மீன் ஆகிய 12 சிறு கதைகளை உள்ளடக்கி "நிலவும் சுடும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இச் சிறுகதைகளில் பெரும் பாலானவை உதயன் பத்திரிகையில் வெளிவந்தவை. நான் எழுதிய சிறுகதைகளை நூலாக வெளியிட வேண்டும் என விரும்பி அதற்கான நிதியை வழங்கியவர் எனது மாணவி திருமதி வசந்தமலர் அவர்கள். "நிலவும் சுடும்" சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதற்கான ஆலோசனைகளை எனது கணவர் சிவலிங்கத்திற்கு வழங்கியதுடன் சிறுகதைகள் பற்றிய கருத்துரைகளை வழங்கியவர் எழுத்தாளர் திரு.க.சட்டநாதன் அவர்கள். சிறுகதைத் தொகுப்பிற்கான அட்டைப் படத்தை ஒழுங்கமைத்தவர் திரு பொ.ஐங்கரநேசன் அவர்கள் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நினைவு மண்டபத்தில் நடைபெற்ற வெளியீட்டு விழா பேராசிரியர் சிவலிங்க ராஜா தலைமையில் நடைபெற்றது. கருத்துரைகளை எழுத்தாளர்களான திரு இ.இராஜமகேந்திரன் திரு.சு.சிவநேசராஜன் ஆகியோர் நிகழ்த்தினர்.

**பரணீ**

**நீங்கள் வெளியிட்டுள்ள சிறுகதைத் தொகுதிகள் பற்றிக் கூறுங்கள்**

**இராஜினிதேவி சிவலிங்கம்**

எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பு "நிலவும் சுடும்" 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் பின்னரே எனக்கு ஜீவநதி பிரதம ஆசிரியர் திரு.க.பரணீதரன் அவர் களின் அறிமுகம் கிடைத்தது. திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் மூலம் பரணீதரன் அவர்கள் அறிமுகமானார். அதன் பின்னர் எனது நூல்கள் யாவும் ஜீவநதி ஊடாகவே வெளிவந்தன. இரண்டாவது சிறு கதைத் தொகுதி தடம் மாறும் பாதைகள் 2017ஆம் ஆண்டு வெளியாகியது. மூன்றாவது சிறுகதைத் தொகுதி உதாரணம் எனது பெண்மை 2020ஆம் ஆண்டு வெளி யிடப்பட்டது. நான்காவது சிறுகதைத்தொகுதியான "நெய்தல் வானம்" 2024ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

**பரணீ**

**இராஜினிதேவியின் பல்துறைசார் கட்டுரைகள் தொகுதியில் பன்முக சமூக அக்கறையுள்ள கட்டுரைகளை எழுதியுள்ளீர்கள். இந்தச் சமூகத்தில் இன்று பெரும்பாலும் நிகழும் பிரச்சினையாக நீங்கள் கருதுவது? அதை எப்படித் தீர்க்கலாம்.**

**இராஜினிதேவி சிவலிங்கம்**

சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் பற்றிய விடயங்கள் எனது கட்டுரைகளில் இடம் பெற்றுள்ளன. பெண்கள் காலங் காலமாக பல் வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். சிறுமிகள் தொடக்கம் வயது வந்தவர்கள் வரை பல்வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தொழில் பார்க்கும் பெண்கள் கூட தாம் தொழில் புரியம் இடங்களில் பல்வேறு வகைகளில் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகின்றனர். பெண்களைச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு சமூகப் பொறுப்புள்ள அனைவரும் முன்வர வேண்டும்.

**பரணீ**

**உங்களது சிறுகதைகள் பெரும்பாலானவற்றில் அறிவுரைப்புத் தன்மை அதிகம் காணப்படுவதாக உணர்கின்றனர். அவ்வாறு கதைகளை அமைப்பதற்கு காரணம்**

**இராஜினிதேவி சிவலிங்கம்**

சமூகத்தில் நான் கண்டும், கேட்டும், அனுபவித்த விடயங்களை எனது மனதில் ஆழமாக பதிந்த விடயத்தை பாதித்த சம்பவங்களை மையப்படுத்தியே நான் சிறுகதை களை எழுதுகின்றேன். நான் ஆசிரியை யாக, பிரதி அதிபராக கடமையாற்றியமையால் கல்விப்புலம் சார்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் சார்ந்த பிரச்சினைகளை எழுதும் போது அவை அறிவுரைப்புத் தன்மையுடைய தான தோற்றப்பாடாக இருந்திருக்கலாம்.

**பரணீ**

**நீண்டகாலம் ஆசிரியர் சேவை செய்து ஓய்வு பெற்றவர் என்ற வகையில் மாணவர்களிடம் அதிக நெருக்கீடாக உள்ள விடயங்களாக நீங்கள் கருதுபவை.**

**இராஜினிதேவி சிவலிங்கம்**

நான் இரண்டு பாடசாலைகளில் ஆசிரியராக கடமை

யாற்றியுள்ளேன். கிளி/இராமநாதபுரம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. இரண்டு பாடசாலைகளும் கலவன் பாடசாலைகள். பெரும்பாலான மாணவர்கள் வறுமை யான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பல்வேறு பிரச்சினை களுக்கு முகங் கொடுத்தவர்கள். குடும்பத்தவர்களும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்தவர்கள். அந்த மாணவர் களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களை அன்புடன் அணுகி அவர்கள் தமது பிரச்சினைகளை எம்மிடம் வெளிப்படையாக கூறுவதற்கான முயற்சி களை மேற்கொண்டோம். அதனால் கட்டிளமைப் பருவத்து பிள்ளைகளின் உள நெருக்கடிகளுக்கான தீர்வுகளையும் ஓரளவு நிறைவேற்ற முடிந்தது.



**பரணீ**

விடைபெறும் கழுகுகள் என்னும் சாதியக் குறுநாவலையும் எழுதியுள்ளீர்கள். இன்று சாதியத்தின் வீரியம் யாழ்ப்பாணத்தில் எவ்வாறு உள்ளதாக கருதுகின்றீர்கள். எந்த நிலைகளில் இன்று கடைப்பிடிக்கப்படுவதாக உணர்கின்றீர்கள்.

**இராஜினிதேவி சிவலிங்கம்**

*யாழ்ப்பாணத்தில் சாதியத்தின் வீரியம் குறைந்தது போல வெளியிலே தெரிந்தாலும் நீறுபூத்த நெருப்பாக இன்றும் சாதியம் பின்பற்றப்படுகின்றது. கல்வி, பொருளாதாரம் என்பவை சாதிய ஒடுக்கு முறைகளை மழுங்கடிக்கச் செய்தாலும் குறைந்த சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் உயர் பதவிகளுக்கு வரும்போது பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. திருமண விடயங்களிலும் சாதியம் முட்டுக் கட்டையாக உள்ளது. ஒருவரின் சாதி பற்றி அறிந்து கொள்ள அவர் இருக்கும் இடம், குறிச்சி என்பவற்றைத் துருவித்துருவி அறியும் வழக்கத்தையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.*

**பரணீ**

உங்களுடைய இலக்கிய முயற்சிகளுக்கு துணை நிற்கும் கணவர் சிவலிங்கம் அவர்களது ஆசிரிய சேவை இலக்கிய செயற்பாடு பற்றி கூறுங்கள்.

**இராஜினிதேவி சிவலிங்கம்**

*எனது கணவர் திரு.சி.சிவலிங்கம் அவர்கள் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியராக, பிரதி அதிபராக பதில் அதிபராக கடமையாற்றியவர். எனது இலக்கிய முயற்சிகள் அனைத்திற்கும் அவரே பக்கபலமாக இருப்பவர். கிறிஸ்தவ கல்லூரியின் கலைத்துறை சாதனைகளுக்கெல்லாம் காரணமாக இருந்தவர். உயர்தர மாணவர்களுக்கு தமிழ்பாடத்தை கற்பித்து உயர் பெறுபேறுகளை பெற வைத்ததுடன் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராக இருந்து சங்கத்தை நல்ல முறையில் நடாத்தியவர். ஆண்டு தோறும் நடைபெறும் தமிழ் விழாவில் மாணவர்களூடாக பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர். கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை, தமிழ்த் தாய்சிலை, ஔவையார் சிலை, சி.வை.தாமோதரம் பிள்ளை சிலை என்பவற்றை நிறுவுவதற்கு மாணவர்களை வழிப்படுத்தியதுடன் கல்லூரி சஞ்சிகைகள் வெளியிடுதல் 150ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியிடுவதற்கு திரு.க.சட்டநாதன் அவர்களுடன் இணைந்துமலர் வெளியிடுவதற்கு பொறுப்பாசிரியராக இருந்து செயற்பட்டவர். சைவப்புலவர் அ.செல்லத்துரை (சிறுவை கிழார்) எழுதிய சி.வை.தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு என்ற நூலை தமிழ்ச்சங்கத்தினூடாக வெளியிட்டவர். பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். அச்சுவேலி காட்டுமலை கந்தசுவாமி பேரில் புதிய பிள்ளைத் தமிழை நாம் இருவரும் சேர்ந்தே எழுதி வெளியிட்டோம். மேலும் என்னுடன் இணைந்து ஆலயங்களுக்குப் பக்திப் பாடல்களையும் எழுதியுள்ளார்.*

**பரணீ**

உங்கள் திருமண நிகழ்வு ஷெல்லடி, பொம்மர் தாக்குதல்களுக்கு மத்தியில் நடைபெற்றதாக அறிகின்றோம். அது பற்றிக் கூறுங்கள்.

**இராஜினிதேவி சிவலிங்கம்**

*1987ஆம் ஆண்டு எமது திருமணம் அச்சுவேலி காட்டுமலை முருகன் ஆலயத்தில் நடைபெற திட்டமிட்டிருந்தது. நாட்டுச் சூழ்நிலை காரணமாக பகல் நடைபெற வேண்டிய திருமணத்தை இரவு நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதனால் வாகனத்தில் செல்ல முடியாது துவிச்சக்கர வண்டியில் எனது சகோதரர்களும், நெருங்கிய உறவினர்கள் சிலரும் குறுக்குப் பாதைகளால் அச்சு*

வேலிக்குப் புறப்பட்டோம். வானத்தில் உலங்கு வானூர்திகள் வட்டமிட்டன. பயத்தில் பற்றைக்குள்ளும் என்னை மறைந்திருக்கச் செய்தனர். நாம் இருந்த இடத்திற்கு சமீபமாக குண்டுத் தாக்குதல் நடாத்திய சத்தத்தைக் கேட்டோம். ஒருவாறு என்னை முருகன் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். ஆலயத்தின் உட்பிரகாரத்தில் ஏற்பட்ட தீபஒளியிலேயே எமது திருமணம் நடைபெற்றது. இது எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் எனலாம்.

பரணீ

நீங்கள் பிரதி அதிபராக இருந்த கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் மாணவர்களைக் கொண்டு சஞ்சிகைகளைவெளியிட்டுள்ளீர்கள் அவை பற்றி விரிவாக கூறுங்கள்

இராஜினிதேவி சிவலிங்கம்

*ஆண்டு தோறும் நடைபெறும் தமிழ் விழாவில் மாணவர் களின் ஆக்கங்கள் தாங்கிய வண்ணம் என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. தமிழ்த் தினப் போட்டிகளுக்கு மாணவர்களுக்கு கவிதைகள், சிறுகதைகள் எழுதுவதற் கான பயிற்சிகளை வழங்கும் போது அவர்களில் தேர்ந் தெடுக்கும் மாணவர்களின் கவிதைகள், சிறுகதைகள் செவ்வை பார்த்து ஆர்வமுள்ளவர்களின் ஆக்கங்களை சஞ்சிகையாக்கி தமிழ் விழாவின் போதும் மாண மன்றங் களிலும் வெளியிட்டிருக்கின்றோம். தளிர், ஊற்று, திறவுகோல், வண்ணம், பூங்காற்று என்ற பெயர்களில் அவை வெளியிடபட்டன. குயிலரசி, யசோதா கண்ணன் ஆகியோரது கவிதை நூல்கள் வெளியிடப்பட்டன.*

பரணீ

பல்வேறு கோயில்களுக்கு திருப்பள்ளியெழுச்சி, கோயில்கள் மீதான பாமாலைகள் பாடியுள்ளீர்கள் அவை பற்றி கூறுங்கள்

இராஜினிதேவி சிவலிங்கம்

*எங்கள் குலதெய்வமான அச்சுவேலி நாவலம்பதி காட்டு மலை முருகன் மீது திருப்பள்ளியெழுச்சி, அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளைார் மீது திருப்பள்ளியெழுச்சி, ஒட்டுச்சுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் மீது திருப்பள்ளியெழுச்சி, காட்டுமலை முருகன் சுப்பிரபாதம் என்பவற்றையும், காட்டுமலை முருகன் மீது "கந்தன் பக்திப் பனுவல்கள்" ஒட்டு சுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் சிவசுப்பிரபாதம், நல்லூர் முருகன், கதிர்காமக் கந்தன். செல்வச்சந்நிதி முருகன் மீதும் பக்திப் பாடல்களை எழுதியுள்ளேன்.*

பரணீ

எதிர்கால உங்கள் இலக்கிய முயற்சி...

இராஜினிதேவி சிவலிங்கம்

நாவல் இலக்கியம் எழுத வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. அதற்கான முயற்சிகளை மேற் கொண்டுள்ளேன்.

பரணீ

இலக்கியத்தில் மாணவர்களை ஈடுபாடு கொள்ள என்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இராஜினிதேவி சிவலிங்கம்

*மாணவர்களை வாசிப்பதற்கு தூண்ட வேண்டும். அவர் களை நூலகத்திற்கு அழைத்துச் சென்று சிறுவர் இலக்கி யங்களை, கவிதைகளை, சிறுகதைகளை, கட்டுரைகளை வாசிக்க ஊக்குவிப்பதன் மூலம் அவர்களை இலக்கித்தில் ஈடுபடச் செய்யலாம். நல்ல சிறுகதைகளை கவிதை களைப் பற்றி அவர்களுடன் கலந்துரை யாடி ஊக்குவிக்க லாம். வகுப்பறைகளிலும் நூலகங்களை அமைத்து அவர் களை வாசிக்கத் தூண்டலாம். போட்டிகளை நடாத்தி அவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர வழி செய்யலாம்.*

பரணீ

நீங்கள் பெற்ற கௌரவங்கள்

இராஜினிதேவி சிவலிங்கம்

*அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டியில் பாடலாக்கத் திற்கான பரிசு. தேசிய கலை இலக்கியப் பேரவையால் நடாத்தப்படும் போட்டிகளில் கவிதை, சிறுகதை, சிறுவர் பாடலாக்கம். விமர்சனம் ஆகியவற்றிற்கு பிரதேசமட்ட, மாவட்டத்தில் பரிசு அகவிழி நிறுவனம் சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு "ஆசிரியப் பணிகளில் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் - ஒரு பால் நிலைக் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் நடத்திய கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம். 2010 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சமூக மேம்பாட்டு மையத்தால் வழங்கப்பட்ட இலக்கியத் திற்கான விருது நிலவும் சுடும் பேனா இலக்கிய சான்றிதழ் விருது 2010 பிரதீபா பிரபா நல்லாசியர் விருது ஜீவநதி மூத்த பெண்படைப்பாளிகள் விருது. 2024 கலைக்குரிசல்*

பரணீ

*உங்கள் நூல் வெளியீடுகள்*

இராஜினிதேவி சிவலிங்கம்

*1998 ஆம் ஆண்டு காட்டுமலை கந்தசுவாமி பேரில் புதிய பிள்ளைத் தமிழ்*
*2013 ஆம் ஆண்டு நிலவும் சுடும் சிறுகதைத்தொகுதி*
*2017 ஆம் ஆண்டு தடம்மாறும் பாதைகள் சிறுகதைத் தொகுதி*
*2020 ஆம் ஆண்டு - இராஜினிதேவி சிவலிங்கத்தின் பல்துறைசார் கட்டுரைகள்*
*2020 ஆம் ஆண்டு- உதாரணம் எனது பெண்மை சிறுகதை தொகுதி*
*2023 ஆம் ஆண்டு "நெய்தல் வாடை" சிறுகதைத் தொகுதி*
*2023 ஆம் ஆண்டு விடைபெறும் கழுகுகள் குறுநாவல்*
*2024 ஆம் ஆண்டு திருத்தல ஆன்மீகப் பாடல்கள்*

## மீட்சி

இறப்பும் பிறவியும்
உறக்கமும் விழிப்பும் போன்றவை
ஆழ்ந்த உறக்கம் பதிவாகியுள்ளது
என்னை நன்றாகத் தூங்கவிடுங்கள்
தீபத்தையும் ஊதுபத்தியையும்
என்னைச் சுற்றி ஏற்றுங்கள்
என்னுடல் முழுதும் தைலம்பூசி
உலர விடுங்கள்
மலர்களை என் பாதங்களில்
பரவித்தூவி விடியலுக்காய்
விடைகொடுங்கள்

மந்திரங்கள் ஒலிக்கட்டும்
மந்தமாருதம் வீசட்டும்
பாமாலைகள் இசைக்கட்டும்
நிர்மலமான வாழ்க்கை
நிலையாமையை உணர்த்தட்டும்
கண்களை வருத்தி
கண்ணீர்மழை பொழியாதீர்கள்
காலதேவன் கருணைகாட்டி
கணக்கை முடித்திருக்கின்றான்
என்விழிகள் சோர்ந்துவிட்டன
உணர்ச்சிகள் அழிந்துவிட்டன

விடுதலையின் பாதை
பாசங்களுக்குவிடை கொடுத்துவிட்டது
பரிபூரண அமைதி
கிடைத்து விட்டது
சனத்திரளின் சண்டமாருதம்
ஓடி ஒழிந்து விட்டது
எல்லையில்லாப் பரவெளி
வெறுமையையும் சூனியத்தையும்
இருப்பாக்கி நிஜ ஒளியால்
அலங்கரிக்கப்பட்டு விட்டது
விதைப்பு அறுவடையாகியுள்ளது

கிட்டநெருங்கி நின்று
கிறங்காது தலைநிமிர்ந்து
மூத்தோரும் மற்றோரும்
என்தலையை மெல்லத்தொட்டு
ஆசீர்வாதம் செய்யுங்கள்
ஆன்ம ஈடேற்றம்
நிகழ்ந்திருக்கிறது
நிலையாமையின் புதிர்
அவிழ்க்கப்பட்டுள்ளது
என்கண்களில் இறைஒளி
தெரியட்டும்

என் முகத்திரையை
மெல்லமெல்ல அகற்றிவிடுங்கள்
என் இறுதிப் பயணத்துக்காய்



# செல்வகலாவின் கவிதைகள்

யாரும்புலம்ப வேண்டாம்
என் உயிர் ஓய்வின் தாலாட்டில்
ஒரு நிலைப்படுத்தப்பட்டு விட்டது
என்மீது கண்ணீர் பூக்களைச்
சிந்தாதீர்கள்
கறுப்பு ஆடை அணிந்து
துக்கத்தை பெருமூச்செறிந்து
மிகைப்படுத்தாதீர்கள்

வாழ்வின் நியதி
அரங்கேறியுள்ளது
துயரத்தை மறந்து
ஆத்மா சாத்வீகமடைந்து
நிற்பதை அறிந்து கொள்ளுங்கள்
வழிநெடுக நெடுந்தூரம்
நிறை அன்பர்கள்
என்னைச் சுமக்க வேண்டாம்
சுமக்கும் வழிகளெங்கும்
சுகமான தென்றல் வீசட்டும்
பூமாரி பொழியட்டும்

என்னை இயற்கை இறையிடம்
அர்ப்பணித்து விட்டீர்கள்
கலைந்து செல்லுங்கள்
விரைந்து செல்லுங்கள்
இதுதான்வழி இதுதான் பயணம்
இதுதான் முடிவு உறுதியாகியுள்ளது
உறவுகளுக்காய் ஏங்கும்
ஏம்பலிப்பு என்னிடமில்லை

தேம்பி அழாது ஆறுதல் பெறுங்கள்
என் அமைதியின்
இரகசியம் உணரப்படட்டும்

## சோதியகன்றதோர் நெஞ்சம்

நள்ளிரவை நெருங்கும்
அந்தகார இருள்
நடுச்சாமம்
ஒளி முழுதாக
மறைக்கும் நேரம்
ககன்வெளியெங்கும்
கதிர்பரப்பிய கதிரவன்
கண்களை மூடி
ஆழ்ந்த உறக்கத்திற்கு
ஆசைப்பட்ட கணம்
கால்கள் காலணியைக்
கவ்வ மறுக்கிறது
கைகள் மேலே
உயரத் தயங்குகிறது
குளிர்நீங்கி
வெப்பம் வேண்டி
நெஞ்சம் துடிக்கிறது
கையை தூக்குங்கோ ஐயா
எல்லாம் நோமல்
சாப்பாடு ஏதும்கொடுங்க
உயிர்காவலர் உரை
மட்டற்ற மகிழ்ச்சி
கணவேளைதான்

கைமசில்கள் அதிர்ந்து
கண் இமை சிரிக்க
தன்னிலையறியா
பூவை மனங்கண்டு
கலங்கிற்றோ
விம்மிற்றோ சிந்தை
காட்சிகள் மாற
கோலம்பொய்யாகக்
கண்டபாவை
கடவுளரை வேண்ட
காண்பதெல்லாம் ஒருகணம்
அற்பமாயையும்
அடக்கமாச்சு
நம்பமறுத்த உளம்
இதயம் மீண்டும் துடிப்பதுபோல்
காட்சிகாட்ட
நெஞ்சமதில் காதுவைத்து
சுவாசத்தைக் கேட்க
சுவாசிப்பதுபோல்
காற்றின்வேறு
அலைகள்மிதந்து
வரஉணர்ந்து
நானுமோர்கனவோ
ஞாலமும் பொய்யோ
எனத்தியங்கியது
ஒரு சிறிய நெஞ்சம்

## சங்கப்பலகையில் அமர்ந்து . . .

மஞ்சள் வர்ண மலர்சொரியும்
பெயர் தெரிய மரநிழலில்
உன்னுடன் நான் இருந்தேன்
இடைவெளி என்னவோ
தொட்டுவிடும் தூரம் தான்
ஆனால் என் மனசோ
உன்னை உரசியபடி
காதல் என்ன என்பதை
நீதான் எனக்குச் சொல்லித் தந்தாய்
என்னை விளங்கிக்
கொள்ளவும் செய்தாய்
சகதோழிகளுடன்
விரிவுரைகளுக்குச் செல்லும்போது
நிரம்பிவழியும் ரயிலில்
காலடிவைக்கும் போது
இரவில் தியானிக்கும்
வேளைகளில் நினைவுக்கு
வந்துபோனாய்
வட்டத்துள் சிறுவட்டமான
ஜாதிப்போர்வை களைந்து
சங்கத்து அகம்போல
தூயவர்களாய்
நீயும் நானும்
உறுதியளிக்கப்பட்ட
காலடியைப் பூமியில்
எடுத்து வைத்து
துன்பத்தைவெற்றி கொண்டு
துணிவுடன் எமது காரியத்தில்
மீண்டெழுந்து
எல்லாவற்றையும் சகித்த
நாட்டிற்காகவும்
வதைக்கப்பட்ட நசுக்கப்பட்ட
மக்களுக்காகவும்
வாழ்ந்திருக்க உறுதி செய்து
மகிழ்ச்சியின்றியும்
மகிழ்ச்சியாயும்
மாதங்கள் உருண்டன
வருடங்கள் கழிந்தன
பொய்மைகள் புரண்டன
இன்று, மூடசம்பிரதாயங்களை
ஒழிக்கவும் எனக்காகவும்
நீயில்லை
இன்னும் தூக்கமில்லா
இரவுகள் தான்
என்னை அலைக்கழிக்கின்றன
என்றா எண்ணுகிறாயாய்?
இன்னும் உனக்காய்
நான் வருந்துகின்றேனா
வருத்தம் யாருக்கில்லை
பரிதாபகரமான ரம்மியமான
நினைவே
சுகமாக சுமையாக
நண்பனாக எதிரியா
நினைத்து
வாழ்ந்து விடுகிறேனே.

## தேவதைகள் உறங்குவதில்லை

யாகசாலையில்
உறக்கத்தைவிற்று
வைகறையைத்தேடும்
தேவதையே
ஏன் அழுகிறாய்
வரங்களை யாசித்துப்
பிச்சைப் பாத்திரத்தை
ஏதற்காக ஏந்தி நிற்கிறாய்
நெருக்கீடுகளைக்கண்டு
நெஞ்சம் நொருங்கி
நின்று நினைத்து
யாருக்காக அரற்றுகிறாய்
சீவிச்சிங்கரித்த
கையால்
கோலம்போடக்கூடத்
தயவில்லை என
ஏன் கலங்குகின்றாய்
சின்னத்திரைச்சீரியலில்வரும்
பாதியைத் தொலைத்த
பார்வைகூட
பொட்டிட்டு புதுக்கோலம்
பூண்டு நடப்பது
நலம் என வாழ்த்தும்
மனிதம்
விளக்கேற்றித்
திலகமிட வருகையில்
தன்னையறியாது
பொட்டைத் தேடுகையில்
தேடாதிருக்க வகைகூறும்
சம்பிரதாயங்களுக்காய்
ஏன் விசனிக்கின்றாய்
காற்றாடக் ககனவெளிக்கு
அமர வருகையில்
முகம் திரும்பும்
நெருப்பூசிகளுக்காய்
ஏன்வெட்கப்படுகிறாய்
கடைத்தெருவில்
வாங்கும் பொருட்களில்
கூட உனக்கு
முன்னுரிமையில்லை
முதற்கைவியளம்
உனக்கில்லை என
ஏன் ஒதுங்கி நிற்கிறாய்
ஆன்மலயத்திற்கு வரும்
வனிதையர் கூட்டம்
நிலம் நோக்கி
சேலைத்தலைப்பால்
கன்னம் மறைத்து
விலகி ஓடும்
கோலம் கண்டு
ஏன்தேம்பி அழுகின்றாய்
துன்பம் சொந்த வீட்டில்
நிரந்தரம் கொள்வதில்லை
வாடகை வீட்டில்த்தான்
குடியிருக்கும்
அடுத்தடுத்து
எங்கே போகும் என
யாருக்கும் தெரியாதே
காலத்தை வென்றுவிடு
வீட்டினுள் பதுங்கி
ஒதுங்கி நிற்காது
வீறுகொண்டு நடந்துவிடு
விசும்பலை நிறுத்திவிடு
உன்வாழ்வு உன் கைகளில்
அதை உன்னைத்
தவிர்த்து
வேறெங்கும் தேடாதே
நின்று நிமிர்
நிச்சயம்
இமயம் கூட உச்சிகாண
ஒரு நாள் உன்னிடம்
ஏணி கேட்கும்.

# கங்காரு பூமியில்...

1

மே முப்பது சந்திரன் பிறந்தநாள்
போ நீ இப்போ நல்லதென்றான் யோகேஸ்
சும்மாவா, யாழ்ப்பாணம் பிறவுண் வீதி
எண்பத்தொன்பதிற்கு ஒரு நாள் சென்றேன்
முழுப்பெயர் சொன்னேன் பிறந்த திகதி பாஸ்போட்டின்படி
சொன்னேன்
நீட்டினேன் கை விரல் அடையாளம் பற்றினர்
காட்டினேன் முகம் படமெடுத்தனர்
"காணும் போம்" என்றார்
"இருவாரம் பொறும்" என்றார்
இரண்டாம் நாளே விசா வந்ததென மகன் சொன்னான்

விட்டேனா பார் என்று "விலாசம்" காட்ட சென்றேன்
வெளிக்கிடடேன் வெளிநாடு அதுவும்
"சாவதற்கேன் இவ்வளவு அவசரம்"
என விளம்பரம் செய்யும்
அவுஸ்திரேலியாவுக்கு ஏறினேன் விமானம்
மே- பதின்னான்கில் கால் பதித்தேன் சிட்னியில்.

2

அவுஸ்திரேலியாக் குளிர்காலம்
ஆனிமுதல் ஆவணிவரை என்பர்
அழகு மனைகள் அடக்குமாடிகள்
அகலத் தெருக்கள் அருகிலெங்கும்
அடர்ந்த பச்சை மரக்காடுகள்
நகரெங்கும் முகிலில் விளையாடும் மாடி முகடுகள்
புற நகர வீடுகளின் ஒரு பக்கம் காடு மறுபக்கம் றோட்.

ஒரு நாள் காலை கிழக்கே பார்த்தேன்
காட்டு மரங்களின் கடும்பச்சை மாமலை தெரிந்தது
வியக்கும் வைகறை மஞ்சள் தெளித்தது
உழைப்பில் உதித்த சூரியன் சிரித்தனன்
வெள்ளிச் சலங்கைகள் மின்னின வானில்.

பச்சை வர்ணக் கிளிகள் சில வந்து தட்டின கதவு
மைனாக்கள் வேறு வர்ணப் பறவைகளும் வந்து மொய்த்தன
மூன்று டொலர் பாண் அவர்க்குப் பசியாற
ராகினி அங்கே ஒவ்வொன்றாய் போட்டார்.

பச்சைக் கிளிகள் மைனாக்கள்
பல்விதப் பறவைகள் ரீங்காரம் கேட்கும்
கண்ணாடி ஜன்னலைத் தட்டி உணவு கேட்கும்
தலைவி உணவைத் தட்டில்
பசும் புற்தரையில் தானே வைப்பாள்.
புற்தரையில் கிளிகள் அங்கே சொந்தங் கொண்டாடின
மைனாக்கள் பறவைகள் கோழிகள் பற்பலவும்
கிளிகளின் சொற்களுகுப் பணிந்து பறந்து
பறந்தே பாதம் பதித்துப் படர்ந்தன.
பஞ்சவர்ணக் கிளிகள் பறந்து பறந்து
சொண்டால் கொத்திக் கொத்திப் பசியாறும்
மைனாக்கள் வந்தாலும்
பஞ்சவர்ணக்கிளிகள் பாய்ந்து
பாய்ந்து பறந்து துரத்தும்
மைனாக்கள் மற்றும் பறவைகள்
விடாது கொத்திக் கொத்தி உண்டு மகிழும்
தம்பாட்டில் பார்த்துப் பார்த்தும் பறந்து பறந்து
கொத்தித்தின்று குதூகலங் கொண்டன
கொள்ளையின்பம் கொட்டிக்கிடந்தது
கண்டு களிக்கும் காட்சிகள் மாறும்.

3

ஆளுக்கொரு கார் தூள் கிளப்பும்
காலையில் எழுவார் காலைக் கடன் முடிப்பார்
வேலை வேலையென்று காரில் விழுவார்
மாலையில் வருவார் உண்டு மகிழ்வார்
வீட்டிலிருந்தும் வேலை செய்வார்
வெளி வேலை எட்டு மணி நேரம் எனில்
வீட்டில் வேலை பதினாறு மணியென வாழ்வே துலைப்பர்
வீட்டிலும் மீற்றிங் வெளியிலும் மீற்றிங்
ஓட்டிடும் வாழ்வில் இதுவோர் சூட்டிங்
தொலைபேசி கதறும் கட்டளைகள்
காதோடு மூளை கை கால் யாவும் கண்டபடி கதறும்.

அரசாங்க வரிகள் பில்லுகள் கடன்கள் ஆளுக்காள் மாறும்
ஆண்டுகள் தோறும் அது முறையாய்ச் சேரும்
இலங்கையில் இலவசக் கல்வி
இங்கிருக்க முடியாத இவர் சோகம் கவ்வி
தொழில் வல்லார் எல்லாம்
அவுஸ்திரேலிய வலையில் வீழ்வர்.
"சாவதற்கென்ன அவசரம்" என்ற அரசின் விளம்பரம்
இலங்கையில் பரப்பும் அவ்வுண்மை புரியும்.

வீதியில் பவனிவரும் வண்டிகள்
வீதிச் சட்டம் விலகுவாரின்
பல நூறு டொலர்கள் பாதையில் பறிபோகும்
விரைவோட்டமெனில் விலையேறும்
வீதி ஒன்று போதாதென்று
ஒரு பக்கம் ஐந்து பாதை
மறு பக்கம் ஐந்து பாதை
அது போதாது தானே ஆளுக்கொரு
கார் எனறால் கோப்பிறேற் வேலைக்குச் சுகந்தானே!
பொதுவானப் போக்குவரவு சிறிதே
கார் உற்பத்திக்கு ஆளை விழுங்கி
கோப்பிறேற் துரைக்கு
உலகப் பணக்காரருக்குச்
செங்கம்பளம் விரிக்கும் அரசு அக மகிழும்
கொத்தடிமைகளாய் மக்கள்.

4

குடும்பத்தில் காசுக் கணக்கு
மனைவி வேறு கணவன் வேறு
பிள்ளைகளுக்கு பாதுகாப்பு
கண்டபடி கதைக்க கை கொடுக்க
சிரிக்க இயலாது சட்டந் தடுக்கும்.
வேற்றாரைக் கண்டால்
விலகி நடத்தலே பாதுகாப்பு ஆகும்
உற்றாருடன் உலகத்தாருடன்
பழகுதல் என்பது முற்றுப்புள்ளி.
மொத்தத்தில் அவரவர் தனிவழி.

தனி மனித முத்திரை மானுடர் சாதனை
சட்டங்கள் பிசகாது களவில்லை பொய்யில்லை
கண்டபடி கதையில்லை சட்டமே சகலது மெனும்
உச்சமே மனிசர் வாழ்வு மகிழ்வின்றியே முடியும்.

5

றோபோக்களுக்குச் செலவதிகம்
மனிச றோபோக்கள் வெகுசுலபம்
ஏஐ என்றால் எதுக்குஞ் சுகம்
எங்கள் வாழ்வில் அதுவே இணை.

இனியென்ன தேவை
சமூகம் என்பது முன்னொரு காலக் கதையாகிப் போகும்.
குடும்பம் என்பது மியூசியத்தில் தொங்கும்.
டைனோசர் காட்சியாய் மனிதர் உருவம்
மொடேண் மியூசியத்துக்குப் பாடையேறும்.

**-சோ.தேவராஜா**

## கொஞ்சம் ஒதுங்குங்கோ...

கொஞ்சம் ஒதுங்குங்கோ ...
வீரியம் மிக்க விழுதுகள்
வேரோட ...

மூச்சிரைக்க மூச்சிரைக்க
ஏன் முண்டியடிக்கிறியள்?
விடாக்கண்டனொப்ப
வீறுகொண்டு நிக்கிறியள்?
கொஞ்சம் ஒதுங்குங்கோ...

சிலர்தானே குந்தலாம்
குத்தகை எடுத்துக்
குந்துதல்
குந்தகம் இல்லையோ?
கொஞ்சம் ஒதுங்குங்கோ ...


அனுபவச்... சித்தாந்தத்தை
அலாதிப்பட்டு ஊதாதையுங்கோ...
எனில்...
இளசுகள் எப்படிக் குருத்தெறியும்...?
கொஞ்சம் ஒதுங்குங்கோ...

சாகும்போது அந்தக் கதிரையில்
சரிய நினைத்தல் சரியோ...
உங்களுக்கு நீங்களே
கரி பூசி... கரிபூசி..
களித்தது போதும்!
கொஞ்சம் ஒதுங்குங்கோ...

அடுத்தவனை அள்ளி வைச்சது...
கூட இருந்தவனுக்கு குளி பறிச்சது ...
சுகபோகத்துக்குச் சோடை போனது...
தவிர...
உருப்படியா ஏதும்
செய்தீரோ...? காணும்...
கொஞ்சம் ஒதுங்குங்கோ...

கொள்கையிலாக் கும்பல்
ஒற்றுமையறியா ஒன்றியம்
சேர்தலும் பிரிதலும்...
பிரிதலும் சேர்தலுமே...
உமது.:. சந்தர்ப்பவாதச் சித்தாந்தம்
சரி... சரி... காணும்...
கொஞ்சம் ஒதுங்குங்கோ...

சங்கீதக் கதிரைபோல
காவுகொள்ளப்படும்
கதிரைகளின் எண்ணிக்கை...
கங்கணம்கட்டி
கையகப்படுத்த நீங்கள்...



கலாவதியான சக்கர வியூகத்தில்
விட்டில்கள் வீழலாம்
விழுதுகள் வீழுமோ...?

கொஞ்சம் ஒதுங்குங்கோ...
வீரியமிக்க விழுதுகள்
வேரோட...

## காலப் பெருநதியின் பயணம்

ஒருபோதும் ஒத்திருப்பதில்லை
எந்த நதியின் பயணமும்
ஒன்றின் பிரவகிப்பைப்
தரிசித்து
மற்றையது
கர்ச்சிப்பதில்லை
அது அது...
தனக்கான தடங்களைத்
தேடிக்கொள்கிறது!

அன்று...
தோட்டத்துக்கோ...
வயலுக்கோ ...
வாய்க்காய்வழியே
பாய்ச்சி
வரம்புகளுக்குள்
அடக்கிவிட முடியாத
வீறாப்பும் வீரியமும்
கொண்டே பாயும்!


சங்கமித்துப்
பெருமைகொள்ளும்...
கிளைநதிக் கீறல்களும்
பெருநதிப் பிரவாகத்தில்...

அவை பிரவகித்து...,
கர்ச்சித்து...,
தடங்களைத் நாடி...,
தமக்கான பாதையைத்
தாமே தேடிப் பாயும்...!
அவை அடங்காது.....
பாயும்...
கரையுடைத்து,
கண்டவற்றையும் சுருட்டி,
கண்மூடித்தனமாய்...
பாயும்..... பாயும்.... பாயும்...
வேகம் அடங்கும் வரை...
பாய்ந்தே தீரும்!

வேகம் அடங்கியபோதில்...
வரம்புகட்டி,
வாய்க்கால் கீறி...,
வழிகாட்ட...
பாயும்...
பயிரை வளர்த்து,
பருக இடங்கொடுத்து,
வேகம் அடங்கி,
பயனுடைத்தாய்
வினை முடிக்கப் பாயும்!

-அ.பௌநந்தி

முல்லைக்கோணேஸ்



# இறுதிக்குளியல்

வெயில் கூடிய பொழுதொன்றில் மாமர நிழலில் இருந்து பார்க்கும்போது சிலாவத்தைத் தாமரைக்குளம் சூரியவொளியில் வெள்ளித்துண்டுகளாய் அலையடித்துக் கொண்டிருந்தது. மாரியில் பெய்த மழைக்கும் நீர் நிறைந்து தாமரைப் பூக்களையும் இலைகளையும் மூடி நின்றது. இனிகோடை காலத்திலேயே தாமரைப் பூக்களும் இலைகளுமாகக் குளம் ரம்மியமாக இருக்கும். பாடசாலை விடுமுறை நாட்களில் நான் கெங்கா, சதீஸ், விசயன் சேர்ந்து மணிக்கணக்காகக் குளிப்பும் விளையாட்டும் கூந்தலுமாயிருந்த பொழுதுகள் நினைவிலோடியது.

பத்து மணியாகவே குளத்திற்குக்குளிக்கப் போவதற்கு ஆர்வமும் உந்துதலும் ஏற்பட நாங்கள் வேக வேகமாய் வந்து சேருவோம். குளம் மதிய நேரத்தில் அலையடிக்கும் நீர்ப்பரப்பில் தாமரை இலைகள் காற்றுக்குப் பின்புறத்தைக் காட்டி எழும்பி எழும்பி மீண்டும் நீர்ப் பரப்புக்கு மாறியும் படுத்துக் கொண்டிருக்கும். இலைகளில் சம்புக்கோழிகள் இலை மாறி இலையாய்த் தாவி தாமரை விதைகளைக் கொத்தும் அழகே அலாதியானது. தெற்கே பனங்காடு. காற்றுக்குக் காவோலைகள் சரசரக்க அணிவகுத்து நிற்கும்போர் வீரர்களாய் பனைகள் வரிசை கட்டும். கரையில் உடுப்புத் துவைக்கப் போட்டிருந்த கல்லில் அன்றும் அமர்ந்தவாறு வழமையாக என்னோடு குளிக்கும் கெங்கா சதீஸ் விசயன் வருகிறார்களா என விதியையே பார்த்த வண்ணமிருந்தேன். நேரம் ஏற ஏறப் பொறுமையிழந்து எழுந்து வீதிக்கு வந்துபார்த்தபோது தூரத்தில் விசயன் நடந்து வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் உற்சாகத்தில் வாயில் விரலை வைத்து விசிலடித்து வேகமா வருமாறு கையை அசைத்தேன். என்னைக் கண்டதும் விசயன் ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டே பதிலுக்கு விசிலடித்தான்.

இருவரும் சேட்டைக் கழட்டி விட்டுக் காற்சட்டையோடு நீரில் பாய்ந்தோம். பாய்ந்த வேகத்தில் நீர்த்திவலைகள் நெஞ்சில் அடித்து சுள்ளென்று விறைத்தது. இருவரும் குளித்துக் கொண்டிருக்கும் போதே கெங்காவும் சதீசும் வந்து சேர்ந்தார்கள். அவர்களும் ஓடிவந்துநீரில் பாய்ந்தனர். தண்ணீர்சுழித்து வளையம் வளையமாய் பரந்து அடங்கியது. குளிக்கும் போது ஒருவர் பிடிப்பதும் மற்றவர்கள் நீந்தியும் சுழியோடி ஒளிப்பதும் எங்களது நீர் விளையாட்டாக இருந்தது. அன்று நான் முதலில் பிடிப்பது என்றும் மற்ற மூவரும் நீருக்குள் சுழியோடி ஒளிப்பதுமாக ஆரம்பித்தோம்.

நான் றெடி என்றதும் மூவரும் நீந்தத் தொடங்கினார்கள். விசயன் நீருக்கடியில் நீந்துவதில் கெட்டிக்காரன். கெங்காவும் சதீசும் ஆழத்திற்கு நீந்திப் போனார்கள். நான் விடாமல் அவர்களைப் பின் தொடர்ந்து நீந்தினேன். இந்தா பிடித்து விட்டேன் என்று நெருங்கும் போதே கெங்கா நீருக்கடியில் மீனைப் போல உடலையும் காலையும் அசைத்து அசைத்து உந்திக் கொண்டு போனான். சதீஸ் அவ்வளவாகச் சுழியோடத் தெரியாததால் மாட்டிக் கொண்டான்.

அடுத்து இருவரையும்பிடிக்க வேண்டும் என்னும் ஆக்ரோசத்தோடு கைகளைச் சுழற்றிச் சுழற்றிச் சுழற்றி நீந்தினேன். கெங்கா தப்பித்துக் கொள்வதற்காக மூச்சை உள்ளிழுத்து நீருக்கடியில் நீண்ட நேரம் படுத்திருந்தாள். விசயன் அகப்பட்டுக் கொண்டான். நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியாமல் கெங்கா மேலே வந்து மூச்சு வாங்க நின்றபோது நீருக்கடியால் வந்து அவனது காலையும் பிடித்துக் கொண்டேன். மூவரையும் பிடித்து விட்ட வெற்றிக் களிப்பில் கூச்சலிட்டுக் கொண்டே விளையாட்டை முடித்தோம்.

சிறிது நேரம் நால்வரும் முங்கி முங்கிக் குளித்த போது மூச்சு வாங்கிது. எல்லோரும் களைத்து விட்டிருந்தோம். சற்று நேரம் வெளியே கரையில் இருந்த புல்லில் உட்கார்ந்து குளத்தையே பார்த்தவாறிருந்தோம்.

கெங்கா சொன்னான் “நீ சுழியோடி வந்த தெனக்குத் தெரியாது. இல்ல மயிரப் புடிச்சிருப்பாய்.”

“டேய் என்னவோ நீ பிடிபட்டிட்டாய்தான பிறகு ஞாயம் கதைக்கிறாய்” என்று விசயன் பதிலுக்குச் சொன்னான்.

“சரி நான் பிடிக்கிறன் இனி ஏலமெண்டா வாங்கோ பாப்பம். எல்லாரேம் ஐந்து நிமிசத்துக்குள்ள பிடிச்சுக் காட்டுறன்.” கெங்காவுக்குத் தான் பிடிபட்ட ஆதங்கம் தீராமல் மற்றவர்களைச் சீண்டினான்.

உடனே மூவரும் இறங்கி நீந்தத் தொடங்கினோம். கெங்கா ஆவேசத்தோடு நீரில் பாய்ந்தான். அவன் சொன்னதுபோல் ஐந்து நிமிடங்களுக்குள் யாரும் பிடிபடாமல் நீந்திம் சுழியோடியும் தப்பித்துக் கொண்டோம். கெங்காவுக்குக் கோபம் மேலிட அவனது நீச்சல் உக்கிரமாக இருந்தது.

விசயன் தான் சொன்னான் “ஆட்டம் குளோஸ், நீ சொன்னது போல் ஐஞ்சு நிமிசத்துக்குமேல் ஆச்சு நிப்பாட்டு நாங்கள் போப்போறம்.”

கெங்காவுக்கு ஆத்திரம் தாங்க முடியாமல் “டேய் ஆத்தாத்தூங்கியே உங்களுக்கேலாது, நான் பிடிச்சுப்போடுவன் எண்டு பயத்திலான நிப்பாட்டிறியள்” என்று விசயனைப் பார்த்து விரல் காட்டிப் பேசினான். அது சண்டையாகமூண்டு கெங்கா விசயனை அடிக்கப்போனான். நானும் சதீசும் இடையில் நின்று கெங்காவைச் சமாதானப்படுத்த கெங்காவுக்கு மூச்சு வாங்கியது. அத்தோடு விளையாட்டை முடித்துக் கொண்டு வெளியேறினோம்.

நீண்ட நேரமாகத் தண்ணீரில் இருந்ததால் கண்கள் சிவந்து எரிவு கண்டது. கைத்தோல்கள் சுருங்கி வெள்ளை நிறமாக மாறியது. தண்ணீரை விட்டுவெளியே வரும்போது உடல் குளிர்ந்தது. தண்ணீரில் இருக்கும்

போதிலிருந்த சுகம் வெளியே குளிராய் மாறியது.

அப்போது பிரதான வீதியில் இருந்து இறங்கி குளக்கரை வழியாக சின்ராசன் ஓடிவந்தான். நாங்கள் ஆச்சரியம் மிகுந்து பார்த்துக் கொண்டிருக்கும்போதே "துவண்ட ஏப்பா… துவண்ட ஏப்பா" என்று கத்தியபடி நான்கு இராணுவத்தினர் அவனைக் கலைத்தபடி ஓதினர். அவர்கள் வந்த இராணுவ ஜீப் வாகனம் சந்தி முடக்கில் இருந்து மெதுவாக வீதியில் நகர்ந்து கொண்டிருந்தது.

"டேய் எல்லாரும் குதியுங்கோடா குளத்துக் குள்ள" என்று விசயன் சொல்ல எல்லோரும் சேட்டுக் களைத் தூக்கிக்கொண்டு வெறும் காற்சட்டை களுடனேயே திக்கொன்றாய் திசையொன்றாய் சிதறி ஓடினர். சதீஸ் கால்கள் நடுங்க ஓடமுடியாமல் நடந்தே போனான். போகும்போது திரும்பித் திரும்பிப் பார்த்த வாறே சேட்டைப்போட்டுக் கொண்டான். அதினமாயப் பயந்துபோயிருந்த அவனையோ மற்றவர்களையோ நாலைந்து நாட்களாகக் குளத்துப் பக்கம் பார்க்கவே முடியவில்லை.

தீர்த்தக்கரை போகும் கிரவல் ஒழுங்கையில் தான் சின்ராசனின் வீடிருந்தது. பத்தொன்பது இருபது வயதிருக்கும். படிப்பை நிறுத்திவிட்டு தகப்பனின் மாட்டுவண்டியில் தென்னோலை தேங்காய் வைக்கல் ஏற்றுவது அவனது தொழிலாக இருந்தது. மூன்றாங் கட்டை நீக்கிலானின் மகளை விரும்பியிருப்பதாகவும், அவளைத்தான் கல்யாணம் செய்யப்போவதாகவும் ஊருக்குள் கதை உலாவியது. இது அவனது தகப்பனின் காதுக்கெட்டியதால் சின்ராசனை வெளுவெளுவென்று வெளுத்து" என்ர மூஞ்சையிலேயே முளிக்காத, நான் உசிரோட இருக்கும் வரைக்கும் இந்த வீட்டுப்பக்கம் தலைகாட்டக்கூடாது." என்று திட்டியதோடு அவன் ஊரை விட்டே போய் விட்டான். எங்கு போனான் என்ன ஆனான் என்று அன்றிலிருந்து யாருக்கும் தெரிய வில்லை. இரண்டு வருடங்களுக்குப் பிறகு தான் ஊருக் குள் அவனைக் காண முடிந்தது. அவனது தோற்றத்திலும் ஆடைகளிலும் நிறைய மாறுதல்கள் இருந்தன. அவனது பேச்சில் விடுதலை பற்றியும் அடக்கு முறைகளுக்கு எதிரான கிளர்ச்சியும் தெரிந்தது. படிப்பிலேயே மந்த மாக இறைவன் லெனின் கார்ல்மாக்ஸ் பிடல் கஸ்ரோ என்றெல்லாம் புரட்சியாளர்களைப் பற்றியும் இளைஞர் களோடு உரையாடினான்.

அப்போது தான் எங்களுக்கெள்ளலாம் தெரிந்தது. அவன் இந்தியாவுக்கு இயக்கப் பயிற்சிக்காகப் போய் வந்திருக்கின்றான் என்று.

அவன் இந்தியாவில் இருந்து வந்தபோது தகப்பன் இறந்து விட்டிருந்தார். தாய் அவனைக் கட்டிப் பிடித்துக் கதறினாள்.

"அம்மா! பிறந்த எல்லாரும் ஒரு நாளைக்குச் சாகிறது தான். அதுக்காகக் காலமெல்லாம் அழுது குழறி என்ன வரப்போகுது" என்று ஞானவானாகக் கூறித் தாயைத்தேற்றினான்.

சில வேளைகளில் அவனது வீட்டுக்கு முன்னால் கறுப்பு நிறபிக்கப் வாகனம் நிற்கும். அதிலிருந்து வேறும் சில இளைஞர்கள் இறங்கிப் போவார்கள்.

ஒருநாள் பாடசாலைக்கு வேகமாய் நடந்து கொண்டிருந்தபோது சிலாவத்தைச் சந்தியில் அவனும் இன்னுமொரு இளைஞனும் நின்றிருந்தார்கள். அவனுக்குப் பக்கத்தில் நின்ற இளைஞனின் தோழில் துப்பாக்கி தொங்கியது. சின்ராசன் என்னைப் பார்த்துச் சித்தவாறே ஆ… தம்பி! படிப்பெல்லாம் எப்பிடிப் போகுது… நல்லாப்படியுங்கோ, நாட்டப் பற்றியும் யோசியுங்கோ" என்றான்.

ஆரம்பத்தில் அவனைச் சந்திக்கப் பீதி கொண்டு விலகிய போதும் பின்னாட்களில் அவனோடு கதைப்பதி லும் சந்திப்பதிலும் அதீத ஆர்வம் கொள்ளவே செய்தது. பாடசாலை விடுமுறை நாட்களில் எங்களைச் சந்திப்பதிலும் அவன் தவறுவதில்லை. நான் றஞ்சன் சிவம் விசயன் அவனோடு திரிவதில் பெருமிதம் கொண்டலைந்தோம். ஊருக்குள் சனங்கள் பெருமயாகப் பார்ப்பதாகத்தான் தோன்றியது.

ஊர்ச்சந்தியிலுள்ள சர்பத் கடையில் எங்களுக் கும் சர்பத் வாங்கித் தந்தான். சண்முகநாதன் வீட்டில் ஞாயிற்றுக் கிழமைகளில் ரீவி பார்க்க எங்களுக்கும் காசு கொடுத்துக் கூட்டிச் சென்றான்.

அவனோடு திரிவதையறிந்த ஐயா என்னை ஒருமுறை

"ஏன் படிப்ப விட்டிட்டு அவனப் போல இயக்கத்துக்குப் போப்போறியே… அவனோட சுத்துறத விட்டிட்டுப் படிக்கிற அலுவலப் பார்" என்று கண்டித் தார். அதோடு சின்ராசனைக் காண்பதிலிருந்து நான் வெகுவாக விலகிக் கொண்டேன்.

சில நாட்களுக்குப் பிறகு சிவத்தையும் றஞ்சனை யும் ஊருக்குள் காணவில்லை. சின்ராசன்தான் அவர்களை இயக்கத்திற்கு றெயினிங்குக்கு அனுப்பி விட்டதாகச் சனம் கதைத்தது. சிவத்தின் தாய் மண் அள்ளித் திட்டி னாள். "உவன் நாசமாப் போவான், கெரியில அழிஞ்சு போவான்… ஐயோ என்ர புள்ள" என்று ஒப்பாரி வைத்தாள்.

றஞ்சனின் வீட்டில் வேறு மாதிரியாக இருந்தது. "இஞ்சரப்பா பிள்ளய ஒருக்காத் தேடிப் பாருங்கோவன். எங்கயாலுவும் நிண்டால் அவனக் கூட்டிக் கொண்டு வாங்கோவன் என்று தாய் கெஞ்சினாள் தகப்பனிடம்.

தகப்பனோ "அவன் என்ன புத்தி தெரியாத வனே… எதோ நாட்டுக்கெண்டு வெளிக்கிட்டிட்டான், போக எண்டு வெளிக்கிட்டவனக் கட்டி வைக்க ஏலுமே?"


தாய் சமாதானம் கொள்ளாதவளாய் ஊரூராய்த் தேடித் திரிந்தாள். போனவர்கள் போனது தான் திருப்பவேயில்லை.

சின்ராசன் ஊருக்குள் புதிது புதிதாய் இளைஞர் களோடு திரியவே செய்தான். அந்தப் பொழுதுகளில் ஒரு நாள் தான் அந்தச் சம்பவம் நடந்தது. சின்ராசனைத் துரத்திக் கொண்டு இராணுவத்தினர் போனதோடு குளத்திற்குக் குளிக்க யாருமே வருவதில்லை. தனியாக நானும் குளிப்பதில் அக்கறை காட்டாது குளப்பக்கமே போகவில்லை. நாலைந்து நாள் கழித்து பனங்காட்டுக்கு ஆடு மேய்க்கப்போன மணிப்பதான் பற்றைக்குள் இருந்து ஏதோ துர்நாற்றம்வீச எட்டிப் பார்த்த போது ஊதிப் பெருத்த மனிதவுடல் இருப்பதைக் கண்டு ஊருக்குள் வந்து சொன்னார். சனம் கூடிப் பார்த் போது தான் அது சின்ராசனின் உடல் எனக் கண்டு கொண்டனர்.

இராணுவம் சுட்டபோது சின்ராசன் அகப் படாமல் வெடிப்பட்ட காயத்தோடு பற்றைக்குள் ஒளிந்து கொண்டிருக்கின்றான். இராணுவம் தேடி விட்டுப் போகும் வரைக்கும் குருதி ஒழுக அவ்விடத்திலேயே கிடந்து இறந்திருக்கின்றான் என்று ஊருக்குள் கதைத்தார்கள்.

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# திக்குவல்லை கமால் அவர்களின் “பாதை தெரியாத பயணம்” என்ற நாவல் பற்றிய கண்ணோட்டம்




தென்னிலங்கையில் முகிழ்ந்த நாடறிந்த எழுத்தாளரே திக்குவல்லை கமால் அவர்கள். இவர் இலக்கியத்தின் சகல துறைகளிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல் மிகவும் அமைதியாக இயங்கி வருபவர். நான் அறிந்தவகையில் கவிதை, சிறுகதை, நாவல், சிறுவர் படைப்புகள், மொழிபெயர்ப்பு போன்ற துறைகளில் இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட இலக்கிய நூல்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

திக்குவல்லை கமால் அவர்களின் ‶பாதை தெரியாத பயணம்” என்ற நாவல் என்னிடமிருந்து விடை பெற்றுக்கொள்கின்ற (இரவல் நூல்) கடைசி நேரத்தில் இரண்டாம் முறையும் வாசிக்க வேண்டும் என்ற ஒரு அருட்டுணர்வு என்னில் ஏற்படவே நேற்றைய தினம் இஷாத் தொழுகைக்குப் பின்னர் ஒரே இருப்பில் அமர்ந்து கொண்டு நள்ளிரவு ஒரு மணி வரை வாசித்து முடித்த மகிழ்ச்சியான ஒரு சுகானுபவம் எனக்குக் கிடைத்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பும் ஏற்கனவே இதே நாவலை நான் வாசித்திருக்கிறேன்.

திக்குவல்லை கமால் அவர்களின் பல சிறுகதைத் தொகுதிகள் போலவே அவரது நாவல்களும் என்னில் அதிக தாக்கம் செலுத்தியுள்ளன. திக்குவல்லை கமால் அவர்களின் படைப்புகள் வாசகர்களினால் மிகவும் ஆர்வமாக வாசிக்கப்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அதேபோல் அப்படைப்புகள் பற்றிய விமர்சனங்களையும் அவ்வப்போது காணக் கிடைப்பது இலக்கிய வாசகர்களுக்கு மிகுந்த ஆர்வத்தைத் தூண்டி, அவரது படைப்புகளை வாசிக்க வேண்டும் என்கின்ற உந்துதலை ஏற்படுத்துகின்றன என்பதும் நிதர்சனமான உண்மையாகும். இவருடைய பல படைப்புகளில் நான் வாசித்த நூல்கள் என்னைக் கவர்ந்ததால் நானும் இவருடைய ஓரிரு நூல்களுக்கு இரசனைக் குறிப்புகளை எழுதியுள்ளேன்.

மறைந்த கவிஞர் ஏ. இக்பால் அவர்கள், “திக்குவல்லை கமால் அவர்கள் தாம் அனுபவித்தவற்றை, கண்டவற்றை, கேட்டவற்றை அவற்றோடு நெருங்கி உணர்ந்து மெய்யாக எழுதுவது தான். இன்னும் சொல்லப் போனால் இவர் யதார்த்த வாத இலக்கியச் செல்நெறியைத் தனது எழுத்தின் ஆதாரமான சுருதியாகக் கொண்டிருப்பவர்” என்று குறிப்பிடுவதைப் போல இவரது படைப்புகளின் கதாபாத்திரங்களோடு மிகவும் ஐக்கியமாகிய நிலையிலேயே படைப்புகளை முன்வைக்கின்றார். இதுவே இவரது படைப்புகளின் வெற்றிக்குக் காரணியாக அமைகின்றது.

“பாதை தெரியாத பயணம்” என்ற நாவலை இரண்டு வருடங்களுக்கு முன்பு வாசித்தது ஓரளவே என் நினைவுகளில் பதிந்திருந்தது. இரண்டாம் முறை வாசிக்கும் போது புதிதாக வாசிக்கின்ற ஒரு நாவல் போல் எனக்குத் தோன்றவில்லை. பழைய ஞாபகத்தை மீட்டுகின்ற ஒரு இன்பமான அனுபவமே எனக்கு கிடைத்தது.

“பாதை தெரியாத பயணம்” என்ற இந்த நாவலில் வருகின்ற முக்கியமான கதாபாத்திரம் ரசீதா பானு என்கிற 16 வயதுப் பாடசாலை மாணவியாகும். மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள திக்குவல்லை என்ற அவளது ஊரிலிருக்கின்ற பாடசாலையில் சாதாரண தரப் பரீட்சை எழுதி, அதில் சிறப்பாகச் சித்தியடைகிறாள். அந்த ஊரைப் பொருத்தவரை பெரிய வசதிகள் எதுவுமற்ற அந்தப் பாடசாலையில் ரசீதா பானு பெற்றுது மிகவும் சிறந்த பெறுபேறுதான் என்று அந்தப் பாடசாலை மட்டத்தில் குறிப்பிடப்படுகிறது.

உயர் தரம் படிப்பதற்காக சரியான தெரிவுமுறை இல்லாத காரணத்தினால் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று மருத்துவராக வர வேண்டும் என்று அவளும், அவளது பாமரப் பெற்றோரும் கனவு காண்கின்றனர். இந்த நாவலில் வருகின்ற வழிகாட்டியாக இருக்க வேண்டிய ஆசிரியர்கள் ஏனோ ரசீதா பானுவுக்கு சரியான வழியைக் காட்டிக் கொடுக்கவில்லை.

கணிதப் பாடம் கற்பித்த ஃபரீத் மாஸ்டர்கூட வெற்றி பெறக்கூடிய உண்மையான நிலையை எடுத்துக் கூறி அவளுக்கு ஒரு தெளிவான பாதையைத் தேர்ந்தெடுக்க உதவி செய்யத் தவறிவிட்டார். ரசீதா பானுவின் தூரத்து உறவினரான ரமீஜா டீச்சரும் “இந்தக் காலத்துல பாஸ் பண்றதென்னா ஏஎல் படிக்கக்கூடிய தாகத்தான் பாஸ் பண்ணனும். ஏஎல் இல்லேன்னா எந்த உத்தியோகத்துக்கும் அப்ளை பண்ணக்கூட முடியாதே” என்று ஃபரீத் மாஸ்டரிடம் சொன்ன விபரத்தை ரசீதா

பானுவுக்கு புரியும் விதமாக மிகவும் அழுத்திச் சொல்லிக் கொடுக்காத காரணத்தினால் உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவை அவள் தேர்ந்தெடுக்கிறாள்.

மிகவும் வறுமையான குடும்பப் பின்னணியைக் கொண்ட ரசீதா பானுவினால் கலை அல்லது வர்த்தகப் பிரிவைத் தேர்ந்தெடுத்துக் கற்று இருந்தாலும்கூட மிகவும் சிறப்பான பெறுபேற்றைப் பெற்று, பல்கலைக் கழகத்திற்கும் சென்று ஆசிரியர் உத்தியோகத்தையும் பெற்றிருக்க முடியும். இப்படியான ஒரு முடிவே இந்த நாவலின் கதாநாயகி ரசீதா பானுவுக்கு மிகவும் பொருந்திப் போவதாக அமைந்திருக்கும். அதுவே அக் குடும்பத்தின் தேவையாகவும் இருந்தது.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ரமீஜா டீச்சரின் ஏற்பாட்டில் தனது ஊரையும் குடும்பத்தாரையும் நண்பி களையும் பிரிந்து மலையகப் பிரதேசத்தில் அமைந் துள்ள கண்டிக்கு அண்மையிலுள்ள பாடசாலைக்கு விஞ்ஞானப் பிரிவில் உயர் தரம் கற்பதற்காக மிகுந்த எதிர்பார்ப்போடு கதாநாயகி செல்கின்றாள். அங்கு தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதீகவி யல் ஆகிய நான்கு பாடங்களையும் மிகுந்த சிரமத்தோடு படித்த போதும் எல்லாப் பாடங்களிலும் சித்தியெய்த முடி யாது போன நிலையில் ஒரேயொரு பாடத்தில் மட்டுமே சாதாரண சித்தியை அவள் பெற்றுக் கொண்டாள்.

ஊர்விட்டு ஊர் சென்று இரண்டு வருடங்கள் அங்கேயே தங்கிப் படிப்பதென்பது வசதிகளற்ற ஏழை களுக்கு மிகவும் சிரமமான விடயமாகவே அமையும். கோழி விற்று அன்றாட உழைப்பின் மூலமாக மிகவும் கஷ்டப்பட்டு சிறுகச் சிறுக தந்தை சேர்த்து வைத்த பணம் முழுவதும் செலவாகிவிட்டதுதான் மிச்சம்.

ரசீதா பானுவின் அப்பாவிப் பெற்றோர்களான ஃபளீல் நானாவும் உம்மு ஸல்மாவும் தனது மகளுக்கு சிறப்பான ஒரு வழிகாட்டியாக இருப்பார் என்றே ரமீஜா டீச்சரைப் பெரிதும் நம்பி இருந்தார்கள். ரமீஜா டீச்சர் சரியான வழிகாட்டியாக செயற்படாமையினால் கடைசி யில் ரசீதா பானுவுக்கு ஒரு வகையில் பாதிப்பு ஏற்படு கிறது என்பது மிகவும் கவலை தருகின்ற விடயமாகும். நாவலின் இறுதிப் பகுதியில் ரமீஜா டீச்சர் முறையான வழிகாட்டலைச் செய்யாதது மறைமுகமான ஒரு சூழ்ச்சியாகவே சித்தரிக்கப்படுகின்றது.

ரமீஜா டீச்சரின் மகள் ஷர்மிளாவோடு சிறிய வயதி லிருந்து எட்டாம் வகுப்பு வரை ஒன்றாகப் படித்தவளே இந்த ரசீதா பானு. எட்டு வருடங்கள் ஒன்றாகப் படித்த போதும் டீச்சரின் மகளான ஷர்மிளாவைத் தாண்டி பானுவே வகுப்பில் முதலாம் பிள்ளையாக வருகிறாள். இதனால் ஏற்பட்ட ஒரு வகையான தாழ்வு மனப்பான்மை யின் காரணமாக ரமீஜா டீச்சர் தனது மகளை அளுத்கமை பெண்கள் கல்லூரிக்கு அனுப்பிவிட்டார். ரமீஜா டீச்சருக்கு ரசீதா பானுவுடன் அப்படியென்ன கோபமோ எனக்குத் தெரியவில்லை.

சின்னச் சின்ன கவலைகளை சட்டென மறந்திட வும் சிட்டென பறந்திடவும் கற்றுத் தந்தது பாடசாலை நாட்கள். வெள்ளை முயல்களைப் போல் கள்ளம் கபடமற்று ஓடியாடித் திரிந்து விளையாடக் கற்றுத் தந்ததும் பாடசாலை நாட்கள். அவ்வாறு வெள்ளந்தி யாக இருந்த ரசீதா பானுவுக்கு சரியான பாதையில் பயணம் செய்வதற்கு யாருமே துணை புரியவில்லை என்பது ஆழ்ந்த வலியைத் தருகிறது.

உயர் தரத்தில் வணிகப் பிரிவில் கல்வி கற்ற காரணத்தினால் சிறப்பாகச் சித்தியடைந்த ஷர்மிளா வுக்கு மிகவும் இலகுவாக ஆசிரிய நியமனம் கிடைத்தது.

“சர்மிக்கு டீச்சர் வேல கெடச்சீக்காம்.. ரமீஜா டீச்சர் மகளேம் எப்பிடிச்சரி படிப்பிச்சி டீச்சராக்கீட்டா..”

“மிச்சம் மிஞ்சினா ரெண்டாயிரம் ருவா சம்பளம் கெடக்கும்.. அவங்க லெச்சக் கணக்கில சம்பரிக்கிய ஆள்கள்..”

“டீச்சர் வேல சம்பரிக்கியத்துக்கல்ல.. ஒரு மதிப்புக்கு..”

என்றவாறு ஊரில் பல கதைகளும் அடிபட்டது.

இரண்டாவது தடவை மிகவும் சிரமப்பட்டு வீட்டிலிருந்து படித்து, பரீட்சை எழுதிய போதும் சாதாரண இரண்டு சித்திகளையே ரசீதா பானுவால் பெற முடிந்தது. அதற்கு மேல் ஒன்றுமே செய்ய முடியாத நிர்க்கதி நிலை ஏற்பட்டு பெரிய கவலையாகவும் அமைந்தது அவளுக்கு. பணம் இல்லாத ஏழைகளின் ஒரே சொத்து என்று சொல்லும் படிப்பை கை நழுவ விட்டு விட்டு எங்கோ ஒரு அதல பாதாளத்தில் தொப் பென்று விழுந்துவிட்டது போன்ற ஒரு உணர்வில் தவித்தாள் ரசீதா. பாவம் அவள். காலம் கடந்து கிடைத்த ஞானத்தில் என்ன பிரயோசனம்?

நாவலின் இரண்டு இடங்களில் ரசீதா பானு தான் வைத்தியராகி டிஸ்பென்ஸரியில் நோயாளிகளை பார்த்துக் கொண்டிருப்பதாக கனவு காண்கிறாள். இந்த வரிகளை வாசிக்கும் போது ரசீதா பானு எப்படியாவது டொக்டராக வேண்டும் என்ற எண்ணம் எனக்குள்ளும் தொற்றிக் கொள்கின்றது. நாவலின் முடிவில்கூட ரசீதா பானு வைத்தியராக முடியவில்லை என்ற நிலை நாவலாசிரியரின் மேல் எனக்கு சிறிய எரிச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தியது என்பது உண்மைதான். இருந்தாலும் நாவலாசிரியரின் யதார்த்தமான முடிவை என்னால் ஜீரணித்துக்கொள்ள முடிகின்றது. வேறு வழிகளற்ற அக்கால சூழ்நிலையில் அதுவே ரசீதா பானுவுக்கும் மிகவும் ஆறுதலாகவும் அமைந்தது.

பாடசாலைக் காலத்தை ஞாபகப்படுத்தி இரசனை யாக எழுதப்பட்டுள்ள இந்த நாவல் அந்தக் காலத்தில் தினகரன் நாளிதழில் தொடராக வெளிவந்துள்ளது. மட்டுமல்லாமல் அக்காலங்களில் உயர் வகுப்பில் படித்த மாணவர்களையும் பல்கலைக்கழகத்தில் படித்த மாணவர்களையும் இந்நாவல் பெரிதும் கவர்ந்துள்ளது. கால் நூற்றாண்டுக்கும் மேலான நூலாசிரியரின் ஆசிரிய வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவமே இந்த நாவலை மிகவும் சிறப்பாக நகர்த்திச் செல்ல ஏதுவாக அமைந் துள்ளது. நாவலாசிரியர் இன்னும் பல நூல்களை வெளி யிட்டு இலக்கிய உலகுக்கு சிறப்பான பங்களிப்புகளைச் செய்ய வேண்டுமென்ற பிரார்த்தனையோடு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்!!!

கோகிலா மகேந்திரன்

# 10 முடிவைத் தொடுவாய் முயன்று

"எங்கே வாழ்க்கை தொடங்கும். அது எங்கே எவ்விதம் முடியும்?" என்று யாருக்கும் தெரியாது. அப்படி இருக்கும்போது, எதிர்காலத்துக்கென்று சேர்த்து வைக்க முடியாத, போனால் வராத, பொன்னை விடப் பெறுமதி வாய்ந்த நேரத்தை, தனித்துவமான அந்த வளத்தை நாம் ஏன் இப்படி வீசித் தள்ளுகிறோம்?

உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் எந்தவித பேதமுமின்றிச் சமத்துவமாக வழங்கப்படும் நேரம் என்ற பொக்கிஷத்தைச் சரியான முறையில் முகாமை செய்வது, முடிவெடுத்தலுடன் நெருங்கிய தொடர்புபட்ட விடயம்!

நேரம் என்பது வாழ்க்கை. ஆகவே நீங்கள் நேரத்தை வீணடித்து வாழ்க்கையையும் வீணடிக்கலாம். அல்லது நேரத்தை உங்கள் கையில் எடுத்துக்கொண்டு வாழ்வையும் கைக்குள் வைத்திருக்கலாம் என்பார் அலன் லக் கீன்.(Alan Lakein)

நேரத்தைத் தேவையற்ற முறையில் செலவு செய்யாதிருக்கவும், முக்கிய கூட்டங்கள், செயற்பாடு கள், நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு ஆயத்தமாக இருக்கவும், அதீத வேலைப்பழுவைக் குறைக்கவும், எமது செயலொழுங்கை நாமே மேற்பார்வை செய்து கொள்ளவும், எமது செயற்பாடுகளின் முக்கியத்துவ ஒழுங்கில் நேர ஒதுக்கீடு செய்யவும், நீண்ட கால இலக்குகள், செயற்றிட்டங்கள் கவனிக்கப்படா திருப்ப தைத் தடுக்கவும், ஒவ்வொரு நாளும் வினைத்திறனுடன் வாழவும், ஒவ்வொரு கணத்தையும் நாளையும், வாரத்தையும், மாதத்தையும், வருடத்தையும் விளை திறனுடன் தொடரவும் நேர முகாமை செய்வது மிக அவசியமாகிறது.

சரித்திரத்தை ஒருமுறை திரும்பிப்பார்க்கிறபோது டைட்டானிக் கப்பல் புறப்பாட்டில் தாமதமாகி விட்டது. இழந்த நேரத்தை ஒடிப்பிடிப்பதற்காக வேகமாகப் பயணிக்க ஆரம்பித்தது. அது பனிப்பாறையில் மோதி 1500 பேரின் துரதிர்ஷ்ட மரணம் நிகழ்ந்தேறியமைக்கு, அதன் பயண நேரம் முதலில் தாமதப்பட்டதும் ஒரு முக்கிய காரணம்!

பாபிலோனியர்களும், எகிப்தியர்களும் குறைந்தது 5000ஆண்டுகளுக்கு முன்னரே நேரம் பற்றிய பிரக்ஞை யுடன் இருந்திருக்கிறார்கள். சமூக நிகழ்வுகளைத் திட்ட மிடவும், கப்பலில் ஏற்றி இறக்கப்படும் பொருள்களின் காலத்தைக் கணிப்பிடவும், தாவரங்கள் பயிரிடும் காலம், அறுவடை செய்யும் காலம் ஆகியவற்றை அனுமானிக்க வும் அவர்கள் கலண்டரை அறிமுகம் செய்தார்கள்.

இன்றைய காலகட்டத்தில் நேர விரயம் செய்பவர் கள் விடயங்களைப் பிற்போடுகிறார்கள். கவலைப்படு வதிலும் பதற்றப்படுவதிலும் நேரத்தை வீணடிக்கிறார் கள். விடயங்களைத் திட்டமிடாமற் செயற்படுத்தித் தோல்வி காண்கிறார்கள். நேரம் பற்றிய யதார்த்தமற்ற மதிப்பீடுகளைக் கொண்டிருக் கிறார்கள். மற்றவர்களின் எதிர்பாராததும், தேவையற்றதுமான தலையீடுகளுக்கு இடமளித்து நேரத்தைத் தொலைத்துக் கொண்டி ருக்கிறார்கள்.

நேரத்தை விரயம் செய்யும் ஆளுமை உள்ளவர் கள் பொதுவாகக் கவனக் கலைப்பான்களால் ஈர்க்கப் படுபவர்களாக இருப்பர். செயற்பாடுகளுக்கான இறுதித் தேதியை அநேகமாகத் தவற விடுவார்கள். எப்போதும் பதற்றத்துடன் ஓடித் திரிவார்கள். நெருக்கீட்டுக்குட் படுதலும், சக்தி தீய்தலும் இவர்களுக்கு அடிக்கடி நிகழும். அடைவுமட்டங்கள் குறையும். விளைதிறன்கள் கீழிறங்கும். தலைக்குமேல் எப்போதும் அதிக வேலை இருப்பதாகச் சொல்வார்கள். நேரம் தவறும் இயல்பு, கூடப் பிறந்ததுபோல் ஒட்டிக்கொள்ளும்.

இதற்கு மறுதலையாகச் சிலரது நேரம் தவறாத தன்மை அதிசயிக்க வைக்குமளவு சிறப்புடையதாக இருக்கும். மூன்று வருடங்களின் முன் குவாராவில் (Quora )ஒரு நேயர் இவ்வாறு பதிவிட்டிருக்கிறார். "பெங்களூரில் உள்ள ஆங்கிலமொழிக் கல்விநிலையம் ஒன்றில் (Regional Institute of English)நடந்தது இது. தினமும் காலை 8.30க்கு வகுப்புத் தொடங்கும். அன்றைய முதல்வகுப்பு ,பேராசிரியர் ஜெப்பிரி கே (Jeffrey Haye) எடுக்க வேண்டும். 8.20முதல் மாணவர்களும் பிற பேராசிரியர்களும் (இறுதிக் கலந்துரையாடலில் பங்கு பெறுபவர்கள்) காத்திருக்கிறார்கள். 8.28க்கு இன்னொரு பேராசிரியர் வந்து சொல்கிறார் "ஜெப்பிரி சிங்கப்பூர் பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருக்கிறார். ஆயினும் இன்றைய வகுப்பைத் தான் எடுப்பதாகச் சொன்னார். "நேரம் இப்போது சரியாக 8.30ஆகிறது. விரிவுரைக்கூடத்தின் பக்க வாசல் வழியாக சூட்கேசுடன் வந்து சேர்ந்தார் ஜெப்பிரி!"தொடங்கலாமா?" என்று கேட்டார்.

உலகின் பல இடங்களிலும் இப்படியான சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். "காலமும் வெள்ளமும் யாருக்கும் காத்திருப்பதில்லை" என்ற ஆங்கிலப் பழமொழியை நன்கு புரிந்துகொண்டவர்கள் அவர்கள்!

நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடிக்கும் போது, நாம் எடுக்கும் தீர்மானங்களைச் செயற்படுத்துவ தும், சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதும் எளிதாக இருக்கும்.

நேர யன்னல் எனும் கருத்து நிலையூடு வாழ்வில் முக்கியமானதை முதன்மைப்படுத்தல் இங்கு வலியுறுத் தப்படுகிறது. நீங்கள் செய்யவேண்டும் என்று நினைக் கும் எல்லாவற்றையும் எழுதுங்கள். உங்களதும் உங்கள் குடும்பத்தினரதும் மன அமைதிக்கு முக்கியமானவற்றை

முதன்மைப் படுத்தி மேலே கொண்டு வாருங்கள். அந்த ஒழுங்கில் செய்து வாருங்கள். முக்கியமில்லாததும் அவசரமில்லாததுமான விடயங்கள் பல காலம் இழுபடலாம் பரவாயில்லை.

ஒரு நாளில் உங்களால் செய்யப்படக்கூடியது எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியும் .அதற்குமேல் திட்டமிடவேண்டாம்.

குடும்ப அங்கத்தவர்கள், வேலைத்தள நண்பர்கள், சமூகப்பிரதிநிதிகள் மத்தியில் வேலைகளைப் பொருத்தமானபடி பங்கீடு செய்யுங்கள். குடும்பத்திலும் பாடசாலையிலும் பொதுவாகப் பிள்ளைகள் தமக்குப் பொறுப்புத் தரப்படுவதை விரும்புவார்கள். வயதுக்கு ஏற்ற வேலைகளைப் பங்கிடலாம்.

நேர முகாமைத்துவத்திலே உங்களுக்கான தனிப்பட்ட தரமான நேரம் என்பது மிக முக்கியமானது. உங்கள் நித்திரைநேரம் (7 -8மணி)குறையாதிருப்பதையும் அது இரவில் தொடர்ச்சியாக இருப்பதையும் உறுதிப்படுத்துங்கள். ஆரோக்கிய உணவு, தளர்வுநேரம், விரும்பிய பொழுதுபோக்கு ஆகியவற்றை எதற்காகவும் இழக்கவேண்டாம்.

"எதற்கும் ஒரு காலம் இருக்கிறது" என்று பைபிள் கூறும். "பருவத்தே பயிர் செய்" என்பதும் எமக்கு நன்கு பரிசயம். அந்தந்த விடயங்களை அதற்குரிய நேரத்தில் செய்தல் என்பதும் முக்கியந்தான்.

18 வருடங்கள் சும்மா இருந்துவிட்டு 18 ஆவது வயதில் பாடசாலையில் முதலாம் வகுப்பில் சேர முடியுமா? 8 வயதில் திருமணம் செய்ய முடியாது என்பது போல் 80 வயதிலும் முடியாது. சிலர் செய்கிறார்கள் என்பது வேறு .திருமணப்பருவம் இதுவல்ல.

நேரத்தை நன்கு பயன்படுத்துபவர்கள் தங்கள் இலக்குகளில் எண்ணங்களைக் குவியப்படுத்திச் செயற்படுத்துவார்கள். உலகில் மிகச் சிறந்த ஓட்டப் பந்தய வீரராகக் கருதப்படும் ஜமேய்க்கன், உசைன்போல்ட் ஏறத்தாழ 20 வருடங்கள் திட்டமிட்டு நேரத்தைச் செலவுசெய்து ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தம் எட்டுத் தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்துக்கொண்டார். அந்த ஓட்டங்கள் மூலம் அவருக்குக் கிடைத்த பணம் 90 மில்லியன் டொலர். சில நிமிடங்களில் ஓடி முடித்து அவர் பெற்ற பணம் அதுபோலத் தோன்றினாலும் அதற்குப் பின்னல் மிக நீண்ட காலத் திட்டமிட்ட உழைப்பு இருப்பது கவனிக்கப்பட வேண்டும்.

எமது வாழ்வு முறை என்று பார்த்தால் (lifestyle )தூய நீர், தூய காற்று, உடல் உழைப்பு, தெளிவான அமைதியான மனம் போன்ற விடயங்கள் எமது சக்தியை அதிகரிப்பதால் அவற்றுக்காகச் செலவிடப்படும் நேரம் பெறுமதி மிக்கதாகவே அமையும்.

குடும்பத்தினருடன் தரமான நேரத்தைச் செலவு செய்வதும் மிக முக்கியம் .அது பிள்ளைகளின் வளர்ச்சியில் அதீத செல்வாக்குச் செலுத்தும் காரணி!

நல்ல நூல்களின் வாசிப்பு, தியானம் செய்தல், சுவாசப் பயிற்சியில் ஈடுபடல், யோக வகுப்புக்களில் பங்குபெறல் போன்ற விடயங்கள் நேர விரயம் போலத் தோன்றினாலும் அவற்றால் வரும் லாபம் நேரத்தின் செலவை விடப்பெறுமதியானதுதான்.

அதேபோல நல்ல நண்பர்களின் சேர்க்கையும் அவர்களுடன் கலந்துரையாடும் நேரமும் பயனுள்ளவை தான்.

பயனுள்ள பொழுதுபோக்குகள் பெறுமதி மிக்கவை என்பது உண்மைதானாயினும், இன்று சினமா, நெடுந்தொடர் நாடகங்கள், வேகமாக ஒலிக்கும் பாடல்கள் ஆகியவை எமது கைத்தொலைபேசிக்குள் அடங்கி விட்டமையால் அது எங்களை ஆக்கிரமித்து அடிமைப் படுத்த விட்டுவிடுவது போன்ற பேதைமை வேறு இருக்க முடியாது.

நேர முகாமை தொடர்பான சில கட்டுக்கதைகள் அல்லது போலி நம்பிக்கைகளும் எம்மிடத்தில் உள்ளன. உதாரணமாக, "நேர அட்டவணை ஒன்றைத் திட்டமிட்டு எழுதிக்கொள்ள வேண்டும்" என்று யாராவது சொன்னால் "அதில் செலவு செய்யும் நேரம் வீணானதுதானே" என்று சொல்லப் பார்க்கிறோம். ஆயினும் ஆய்வு முடிவுகள் அதற்கு எதிராகவே உள்ளன. திட்டமிடுவதில் செலவு செய்யும் நேரம் மிகப் பயனுள்ளது.

கபீன், மது, நிக்கோட்டின், கொண்ட பானங்களையோ அல்லது போதை தரும் பொருள்களையோ பாவிக்கும்போது எம்மால் சிறிது நேரத்தில் நிறைய வேலை செய்யக்கூடியதாய் இருக்கும் என்ற கருத்து எமது சமுதாயத்தில் ஆழப் பரப்பப்பட்டுள்ளது. அதுவும் உண்மையில்லை. இவற்றைத் தொடர்ந்து பாவிப்பதால் குறுகிய காலத்திலோ அல்லது நீண்ட காலத்திலோ உடல் உள நிலைகள் மோசமாகும் என்பதே நிதர்சனம்.

எப்போதும் பரபரப்பாக ஓடித்திருந்து இயங்குபவர் நேரத்தை நல்ல முறையில் செலவு செய்பவர் என்றும் பொதுவாக நாம் நினைப்பதுண்டு. அதுவும் கட்டாயம் உண்மையாக இருக்கவேண்டுமென்பதில்லை. முற்றிலும் முக்கியமற்ற விடயங்களுக்காகவும், சமூகத்துக்கும் தனக்கும் தீமை தரும் விடயங்களுக்காகவும் கூட ஒருவர் பரபரப்பாக ஓடித்திரியலாம்.

"எனக்குச் செய்யவேண்டியதைச் செய்யவே நேரம் இல்லை .வேலை கூடிப் போச்சு. செய்யேலாது." என்று பலர் பேச நாம் கேட்டிருப்போம்.வேலை அதிகம் என்றால் அதைக் குறைத்துக்கொள்வது அவரவர் பொறுப்புத்தான். மற்றவர்கள் அவ்விடயத்தில் சொல்ல ஒன்றுமில்லை.

"நிறையக் காலம் இருக்குத்தானே!ஆறுதலாகச் செய்யலாம்." என்பதும் சிலசமயங்களில் தவறான கருத்துநிலை. செய்யவேண்டியதை, அது முக்கியமானது என்றால் இன்றே செய்துவிடுவதே சிறப்பு.!

"கடந்து வந்த பின்பே கண்டு உணர்கிறேன்.
என்னைக் கலங்கடித்த காலம் எல்லாம்
கடுமையான காலம் அல்ல,
என்வாழ்வை,
வடிவமைத்த காலம் என்று" என எழுதினான் ஒரு புதுக் கவிஞன்.

ஆகவே நேரத்தை முகாமை செய்து இலக்கை நோக்கி நடக்காது விடடால்,

ஊர்வலம் வருகின்ற நாள் வந்துவிடும் .ஓட முடியாமல் தேர் நின்றுவிடும்.

ஆம். நீங்கள் அவசரப்படாமல், நிதானமாய்ச் செயற்படுபவராக இருந்தால் வாழ்வில் எல்லா விடயங்களுக்கும் உங்களிடம் நேரம் இருக்கும். முடிவுகளையும் தீர்மானங்களையும் எடுப்பதும் சுலபமாகும்.

காலம் கருதி இருப்பவர் கலங்காது
ஞாலம் கருதுபவர்

(தொடருவோம்)

வ.ந.கிரிதரன்




# குடிவரவாளன்

**அத்தியாயம் பதினேழு:**
**ஹரிபாபுவின் நடைபாதை வியாபாரம்!**

அன்றிரவு முழுவதும் இளங்கோவுக்கு மறுநாள் சந்திக்கவுள்ள ஹரிபாபு பற்றியும் அவனது தொழில் என்னவாகவிருக்கக் கூடுமென்பது பற்றியுமே சிந்தனையாகவிருந்தது. அவனது விளம்பரத்தைப் போல் அவனும் புதிரானவனாகயிருப்பானோ என்றொரு எண்ணமும் அவ்வப்போது எழுந்தோடியது. எது எப்படியோ இந்த வேலை மட்டும் கிடைத்து விட்டால் அதுவும் நிலையானதாகவிருந்து விட்டால் நல்லதென்று பட்டது. தாயாரின் கடிதம் கூட அவனுக்கு உடனடியாக வேலையொன்றினை எடுப்பதன் அவசியத்தை வலியுறுத்தியது. அவனுக்கு அப்பொழுது ஆச்சி அடிக்கடி கூறுமொரு பொன்மொழி ஞாபகத்துக்கு வந்தது. “பாவி போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்” என்பதுதானது. அந்தப் பழமொழி அவனுக்காகவே உருவானதுபோல் பட்டது. ஆச்சியைப் பற்றி நினைத்ததும் அவனுக்கு எப்பொழுதுமே பெரும் பிரமிப்புத்தான் ஏற்படுவது வழக்கம். ஆச்சி அன்றைய காலத்து மனுசி. ஏட்டுக் கல்வியைவிட அதிகளவு அனுபவ அறிவு மிக்கவளவள். எந்த நேரமும் சிரித்த முகமும், மகிழ்ச்சியுமாகவும் காணப்படுவாள். ஒருநாளாவது ஆச்சி கோபப்பட்டு அவன் பார்த்ததே கிடையாது. “மகா ராசனாய்ப் போயிட்டு வா” வென்று அவள் அடிக்கடி வாழ்த்தி அனுப்பும்போது ஒவ்வொரு முறையும் அவனும் அவனது நண்பர்களும் உற்சாகத்துடன் கூடிய மகிழ்ச்சியினையே அடைவது வழக்கம். ஆச்சியின் சமையல் மாதிரி இதுவரையில் வேறெங்கும் அவன் கண்டதில்லை. அவளது மூளைக்கீரையும், குழம்பும், தயிரும் எத்தனை தடவைகள் உண்டாலும் அலுக்காதவை. உடல், உள்ளமிரண்டிலும் உறுதி மிக்கவளவள். ஆச்சியின் இன்னுமொரு விஷேசம் அவள் வாயிலிருந்து அவ்வப்போது உதிரும் வார்த்தைகள். சொற்களை வைத்து ஜாலம் காட்டுவதில் வல்லவளவள். எழுபதுகளில் அவன் “பெல்பாட்டமும்” நீண்ட தலைமுடியுமாய்த் திரிந்து கொள்ளும்போது காணுகையில் “வாடா பீத்தல் பறங்கி” என்று வரவேற்பாள். அடிக்கடி சைக்கிள் செயினில் சிக்கிக் கொழுப்புப் படிந்து கிடக்கும் பெல்பாட்டத்துடன் பீத்தல் பறங்கியாக நுழையுமவன் அசடு வழியச் சிரிப்பான்.

அன்றிரவு கோஷிடமும் அடுத்த நாள் ஹரிபாபுவைச் சந்திப்பது பற்றி இளங்கோ குறிப்பிட்டான். கோஷ்க்கும் சிறிது ஆச்சரியமாகவிருந்தது. ”ஹரிபாபு ஆச்சரியமான பேர் வழியாக இருக்கிறானே!” என்று சிறிதளவு வியந்தானவன். அத்துடன் கூறினான்: ”பெயரினைப் பார்த்தால் மராத்திக்காரன் போலிருக்கிறான். எதற்கும் நாளைக் காலை அவனைச் சென்று பார்த்துவிட்டு வந்து எங்களுக்குக் கதையினைக் கூறு. கேட்பதற்கு ஆவலாகவிருக்கிறோம்.”

“கோஷ். அதெப்படி அவ்வளவு தீர்மானமாகக் கூறுகிறாய் அவன் மராத்திக்காரனென்று..”

இதற்கு கோஷ் ஒருமுறை இலேசாகச் சிரித்தான். “ஹரிபாபு நாராயனண் என்றொரு பிரபலமான மாரத்திக்காரனின் “நான்” என்றொரு நாவலை, இந்திய சாகித்திய அக்கடமியால் பதிப்பிக்கப்பட்டது. வாசித்திருக்கின்றேன். நல்லதொரு நாவல். தகழியின் “ஏணிப்படிகள்”, வாசுதேவ நாயரின் “காலம்” போன்று நல்லதொரு நாவலது. அதனால் தான் நீ ஹரிபாபுவென்றதும் மராத்திக்கரனாகவிருப்பானோ என்று சந்தேகப்பட்டேன். எதற்கும் அவனைப் போய் நேரிலேயே பார். அப்பொழுதுதான் சரியான நிலை புரியும்”

இளங்கோவுக்கும் அவன் கூறுவதே சரியாகப் பட்டது. “இந்த வேலை மட்டும் கிடைத்து விட்டால் திருமதி பத்மா அஜித்துக்குத்தான் நன்று கூறவேண்டும்.”

இதற்குக் கோஷ் சிரித்தான்: ”இளங்கோ, அளவுக்கதிகமாக அவளைப் புகழாதே. எல்லாம் காரியத்துடன்தான். நீ வேலை செய்தால்தானே ஒழுங்காக அவளுக்கு வாடகை கிடைக்கும். அந்தக் கரிசனைதான் காரணம். வேறொன்றுமல்ல”

“எனக்கென்றால் அவளை அவ்வளவு குறைத்து மதிப்பிடுவது சரியாகப்படவில்லை. இருந்தாலும் உனது பேச்சுரிமையினை மதிக்கிறேன்” என்றான் இளங்கோ. அருள் ராசாவுக்கு இளங்கோ கூறுவதே சரியாகப் பட்டது.

அன்றிரவும் ஒருவாறு கழிந்து மீண்டுமொருமுறை பொழுது புலர்ந்தது. இளங்கோவினதும், அருள்ராசாவினதும் வேலை தேடும் ப்டலம் ஆரம்பமாகியது. அதற்கு முதற்படியாகக் ஹரிபாபுவைச் சந்திப்பதற்காக “நான்காம் தெரு மேற்கு” நோக்கிய பயணத்தை ஆரம்பித்தார்கள். அவன் விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்த சந்திக்குச் சென்றபொழுது காலை பத்துமணியினைத் தாண்டி விட்டிருந்தது. நான்காவது வீதி மேற்கும், ஆறாவது அவென்யுவும் சந்திக்குமிடத்தில், வடமேற்குப் புறத்தில் அவன் கண்டது ஓர் இந்தியத் தம்பதியினரின் நடைபாதை வியாபாரத்தினைத்தான். ஆணுக்குச் சிறிது வயதாகியிருந்தது. ஆனால் அந்த இந்தியப் பெண்மணியோ வயதில் மிகவும் இளமையுடன் காணப்பட்டாள். பார்ப்பதற்குச் சங்கராபரணத்தில் நடித்த மஞ்சு பார்கவி போலிருந்தாள். உண்மையைச் சொல்லப்போனால் அவன் கூட அத்திரைப்படத்தில் நடித்த சங்கீத வித்வானைப் போல் முதுமையான தோற்றத்துடனிருந்தாலும், உடலமைப்பைப் பொறுத்தவரையில் திடகாத்திரமாகக் காணப்பட்டான். அவர்களுடன் இன்னுமொரு

வெள்ளையினத்து யுவதியும் "ஜீன்ஸூம், டீசேர்ட்டுமாகஂக் காணப்பட்டாள்.

அத்தம்பதியினரை அண்மித்த இளங்கோ "என் பெயர் இளங்கோ.." என்று வார்த்தைகளை முடிக்கவில்லை அவர்களில் அந்த ஆண் "அது நீதானா? நல்லதாகப் போய் விட்டது. நான்தான் விளம்பரம் கொடுத்திருந்த ஹரிபாபு. நீ சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறாய்" இவ்விதம் இளங்கோவையும் அருள்ராசாவையும் பார்த்துக் கூறிய ஹரிபாபு அந்தப் பெண்மணிபக்கம் திரும்பி "இந்திரா! நான் இவர்களுடன் சிறிது கதைத்து விட்டு வருகிறேன். அதுவரை வியாபாரத்தைச் சிறிது கவனித்துக் கொள்" என்றான். அத்துடன் அந்த வெள்ளையினத்து யுவதியினைப் பார்த்து "இங்கிரிட், இந்திராவுடன் துணையாகச் சிறிது நேரம் இருந்து கொள். உடனேயே வந்து விடுகிறேன்" என்றான்.

பதிலுக்கு இந்திரா என்னும் அந்தப் பெண்மணிக்கு வணக்கம் கூறிவிட்டு இளங்கோவும், அருள்ராசாவும் ஹரிபாபுவைத் தொடர்ந்து சென்றனர். ஹரிபாபு அவர்களை அருகிலிருந்த தேநீர்க்கடையொன்றுக்கு அழைத்துச் சென்றான். "நீங்கள் இருவரும் என்னை வந்து சந்தித்ததற்கு மகிழ்ச்சி. ஆறுதலாகத் தேநீர் அருந்தியபடி எல்லாவற்றையும் விபரமாகக் கூறுகிறேன். உங்களுக்கும் பிடித்திருந்தால், எனக்கும் உங்களைப் பிடித்திருந்தால் நாம் இணைந்து பணியாற்றலாம்." என்று செல்லும் வழியில் ஹரிபாபு கூறினான். அவன் தொடர்ந்தும் விபரிக்கப் போகும் வேலைவாய்ப்பு பற்றிய விபரங்கள் எததகையதாகவிருக்கக் கூடுமென்று எண்ணிய படியே அவன் கூறுவதையும் செவிமடுத்தபடி அவனைத் தொடர்ந்தனர் அவர்கள். அவனுடன் அவ்விதம் செல்கையிலேயே அவனுடன் இணைந்து பணியாற்றுவதில் எந்தவித ஆட்சேபனையுமேற்படப் போவதில்லையென்று பட்டது.

அத்தேநீர்க்கடையின் ஒரு மூலையில் சென்றமர்ந்தனர். ஹரிபாபுவே அனைவருக்கும் தேநீர் வாங்கி வந்தான். தேநீரைச் சிறிது சுவைத்தபடி "இப்பொழுது ஓரளவுக்குப் புரிந்திருக்குமே" என்றான். இதற்கு இளங்கோவே முதலில் பதிலிறுத்தான்: "நடைமுறையினைப் பார்க்கும்பொழுது ஓரளவு ஊகிக்க முடிகிறது. பத்திரிகையில் விற்பனையாளர்கள் தேவையென்று விளம்பரம் செய்திருந்தீர்கள். ஆக, உங்களுக்குத் துணையாக நாங்கள் விற்பதற்கு உதவப் போகின்றோமென்று படுகிறது.."

இப்பொழுது ஹரிபாபு இடைமறித்துப் பின்வருமாறு கூறினான்: "சரியாகக் கூறினாய். நீ கெட்டிக்காரன். நான் உடனடியாக விஷயத்திற்கே வருகிறேன். விசயம் இதுதான். இப்பொழுது நாங்கள் அதுதான் நானும் என் மனைவியும் அந்த வெள்ளைக்காரியும் நடைபாதையில் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறோம். இன்னுமொருவன் ஹென்றி, அவனொரு எஸ்கிமோ இனத்தைச் சேர்ந்தவன் , எங்களுக்காக அடுத்த சந்தியிலிருந்து விற்றுக் கோண்டிருக்கிறான். எங்கள் வியாபாரத்தை இன்னுமொரு சந்திக்கு விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது வியாபாரம் சுறுசுறுப்பாகவிருக்கிறது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டியது தானே. அதுதான் எங்களது திட்டம். அதற்காகத்தான் விளம்பரம் செய்திருந்தோம். உங்களுக்குப் பிடித்திருந்தால் ஹென்றியைப் போல் நீங்களிருவரும் அந்த விற்பனையினைக் கவனித்துக் கொள்ளலாம். என்ன நினைக்கிறீர்கள்? பிடித்திருக்கிறதா? உங்களால் சமாளிக்க முடியுமென்று நினைக்கிறீர்களா?"

இப்பொழுது அருள்ராசா வினாத் தொடுத்தான்: "அது சரி, எவற்றையெல்லாம் நாம் விற்க வேண்டும்?"

இதற்குக் ஹரிபாபு இவ்விதம் பதிலளித்தான்: "சரியான கேள்வி. பிரதானமாக என் ஸ்டோரில் ஏராளமாகவிருக்கும் செப்புச் சிலைகள் போன்ற பல இந்தியப் பொருட்களை நீங்கள் நடைபாதையில் வைத்து விற்கவேண்டும். அத்துடன்..."

"அத்துடன்..." இவ்விதமிழுத்தது இளங்கோ.

"அத்துடன் காலநிலைக்கேற்ற ஆடை வகைகள், ஆபரண வகைகள் போன்றவையும் என்னிடம் நிறையவுள்ளன. அவற்றையும் விற்கவேண்டும். நீங்களிருவரும் ஒன்றாக நின்று ஒருவருக்கொருவர் உதவியாகவிருக்கலாம்."

"எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டும்? எத்தனை மணிக்கு ஆரம்பிக்க வேண்டும்? எத்தனை மணிக்கு முடிக்க வேண்டும்? எவ்வளவு எங்களுக்கு ஊதியமாகக் கிடைக்கும்?"

இவ்விதம் இளங்கோ படபடவென்று கேள்விகளைத் தொடுக்கவே ஹரிபாபு இலேசாகச் சிரித்தான். அத்துடன் கூறினான்: "காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஐந்து மணிவரை வேலை செய்தால் போதுமானது. வியாபாரம் மிகவும் "பிசி"யாகக் காணப்பட்டால் நீங்களிருவரும் மேலதிகமாக வேலை செய்ய விரும்பும் பட்சத்தில் வேலை செய்யலாம். அன்றாடம் உங்களது ஊதியம் வழங்கப்படும். என்ன நினைக்கிறீர்கள்? அட மறந்து விட்டேனே.. விளம்பரத்தில் கூறிருந்தபடியே மணித்தியாலத்திற்கு நான்கு டாலர்கள் ஊதியமாக வழங்கப்படும். என்ன சொல்லுகிறீர்கள்?"

இளங்கோவுக்கும், அருள்ராசாவுக்கும் அப்போதிருந்த பொருளியற் சூழலின் விளைவாக எந்தவொரு வேலையினையும் நிராகரிக்கும் மனநிலை இருக்கவில்லை. வலிய வந்த சீதேவியினை யாராவது எட்டி உதைவார்களா? எனவே ஒருமித்த குரலில் கூறினார்கள்: "எங்களுக்குப் பூரண சம்மதமே.."

அவர்களது அந்தவிதப் பதில் அவனை மகிழ்வித்திருக்க வேண்டும்.

"நல்லது. உங்களிருவரையும் எனக்கும் மிகவும் பிடித்துப் போயுள்ளது. அதற்குமுதல் உங்களிருவரையும் ஹென்றிக்கும் ஒருமுறை அறிமுகம் செய்து வைக்க வேண்டும். உங்களுக்கும் மிகவும் பயனுள்ளதாகவிருக்கும். தேநீர் அருந்தி முடித்ததும் நாம் அனைவரும் ஒருமுறை ஹென்றியைச் சென்று சந்திப்போம். அவனுக்கும் மகிழ்ச்சியினை அளிப்பதாவிருக்கும். சிறிது நேரம் அவனுடன் நீங்களிருவரும் நின்று வியாபாரத்தை நடத்தும் வழிமுறைகள் பற்றி மேலதிகமான தகவல்களையும் பெறமுடியுமல்லவா?"

இவ்விதமாக அவர்களுக்கிடையில் தொடர்ந்த உரையாடல் தொடர்ந்தது. அனைவரும் தேநீர் அருந்தி முடித்ததும் ஹரிபாபு அவர்களிருவரையும் அழைத்துக் கொண்டு ஹென்றியின் இருப்பிடத்தை நோக்கி நடையைக் கட்டினான். அவர்களும் அவனைத் தொடர்ந்தனர்.

### அத்தியாயம் பதினெட்டு:
### ஹென்றியின் சாமர்த்திய(ம். / மா? )

நான்காவது வீதி மேற்கு, ஏழாவது அவென்யு, கிறிஸ்டோபர் வீதி ஆகிய வீதிகள் சந்திக்கும் சந்திப்பிலுள்ள நடைபாதையொன்றில் நடைபாதை வியாபாரம் செய்து கொண்டிருந்த ஹென்றியை முதலில் ஹரிபாபுதான் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான்: "இவன்தான் நான் கூறிய ஹென்றி. எஸ்கிமோ ஹென்றி." அவ்விதம் கூறியபொழுது ஹரிபாபுவின் வதனத்தில் இலேசானதொரு பெருமிதம் கலந்த முறுவலொன்று ஓடி மறைந்ததுபோல் இளங்கோவுக்குப் பட்டது. அந்தப் பெருமிதம் அவனது குரலிலும்

தொனித்ததாகவும் பட்டது. ஒருவேளை "பார்த்தாயா என் சாமர்த்தியத்தை, மராத்தியனான நான் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து வந்து, இங்கு இந்த நாட்டின் ஆதிக் குடிகளிலொருவனைக் கட்டி வைத்து வேலை வாங்கு கின்றேனே! என்ன நினைத்துக் கொண்டாய் என்னைப் பற்றியென்று அவன் கருவத்துடன் உள்ளூர நினைத்துக் கொண்டிருக்கலாமோவென்று இளங்கோ தனக்குள்ளே எண்ணிக் கொண்டான். அதே சமயம் குள்ளமாகவும், குட்டை யான கால்களுடனும் அந்த எஸ்கிமோ இருந்தான். இளங் கோவுக்கு அவனை அங்கு பார்த்ததும் ஆச்சரியமாகவிருந்தது. அந்த ஆச்சரியம் தனது குரலில் தொனிக்க வேடிக்கையாக, "எஸ்கிமோவான உனக்கு இங்கென்ன வேலை. துருவத்தை விட்டு நீயும் புலம்பெயர்ந்து விட்டாயா? உன்னையும் நாகரிக மோகம் பற்றிக் கொண்டு விட்டதாயென்ன?" என்றான். அதைக் கேட்டதும் எஸ்கிமோ ஹென்றியும் இலேசாகச் சிரித்துக் கொண்டான்: "எத்தனை நாள்தான் துருவத்திலேயே சஞ்சரிப்பது. குளிர் அலுத்து விட்டது. துருவம் விட்டுத் துருவமாகப் பறவைகளே வருடா வருடம் இடம்மாறும்போது மனிதனான நான் மாறுவதிலென்ன தப்பு? ஒரு மாறுதலுக்காக இந்த மாநகருக்கு வந்தவனை இந்த ஹரிபாபு இவ்விதம் வளைத்துப் பிடித்துக் கொண்டான்" என்றும் சிறிது மேலதிகமாகத் தகவல்களைப் பகிரிந்தும் கொண்டான்.

இளங்கோ: "என்ன எஸ்கிமோவுக்குக் குளிர் அலுத்து விட்டதா? ஆச்சரியமாகவிருக்கிறதே.."

"இதிலென்ன ஆச்சரியம். என்னைப்போலிங்கு இந்த மாநகரை நோக்கிப் பல எஸ்கிமோக்கள் படையெடுத் திருக்கின்றார்கள்" என்ற எஸ்கிமோ ஹென்றியைப் பார்த்து இப்பொழுது அருள்ராசா இடைமறித்திவ்விதம் கேட்டான்: "நானறிந்தவரையில் எஸ்கிமோக்களால் குளிர்பிரதேசங்களைக் கடந்து வேறிடங்களுக்குச் சென்று வாழ அவர்களது உடலமைப்பு இடம் கொடுக்காதென்றல்லவா இதுவரையில் எண்ணியிருந்தேன். உன்னைப் பார்த்தால் அவ்விதம் தெரியவில்லையே"

இதற்கு ஹென்றியின் பதில் அறிவுபூர்வமானதாகவும், தர்க்கச் சிறப்பு மிக்கதாகவுமிருந்தது: "வெப்பமான கால நிலையில் சஞ்சரித்த உன்னால் இந்தக் குளிர்பிரதேசத்திற்கு வந்து வாழ முடியுமென்றால் இந்தக் கண்டத்திலேயே பிறந்து வளர்ந்த எனக்கு இதே கண்டத்தின் இன்னுமொரு பகுதியில் வசிப்பதிலென்ன கஷ்டமிருக்க முடியுமென்று நீ நினைக் கின்றாய்?"

இப்பொழுது ஹரிபாபு இடைமறித்து உரையாட லினைத் தொடர்ந்தான்: "ஹென்றி நல்ல சுறுசுறுப்பான கடுமையான உழைப்பாளி. இவனுடன் ஒரு சில மணித்தி யாலங்கள் வரையில் நீங்களிருவரும் இருந்து இவனை எவ்விதம் வியாபாரத்தினை நடத்துகின்றானென்று பார்த்துவிட்டு வாருங்கள். அதன் பின்னர் உங்களுக்கும் இந்த வியாபாரத்தை இவனைப் போல் தனியாக இன்னுமொரு நடைபாதையில் நடத்தலாமென்று நம்பிக்கையேற்பட்டால் உங்களுக்கும் நாளை முதல் இவனைப் போல் இன்னுமொரு இடத்தை ஏற்பாடு செய்துவிடுகின்றேன்."

இதன்பின்னர் ஹென்றி பக்கம் திரும்பிய ஹரிபாபு இவ்விதமாகக் கட்டளையிட்டான்: "ஹென்றி, இவர்களிரு வருக்கும் நமது வியாபாரத்தைச் சிறிது விளக்கி விடு. நடைபாதையிலிருந்து எல்லோராலும் வியாபாரம் செய்து விட முடியாதல்லவா" . அதன்பின்னர் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு ஹரிபாபு தன்னிருப்பிடத்துக்குச் சென்று விட்டான். இப்பொழுது இளங்கோவும், அருள்ராசாவும் ஹென்றியுடன் தனித்து விடப்பட்டனர்.

ஹென்றி முக்கியமாக விறபனைக்கு வைத்திருந்த பொருட்களாகப் பித்தளையினாலான பல்வகைச் சிற்பங்கள், பூஜை வழிபாடுகளுக்குரிய குத்து விளக்கு போன்ற உபகரணங் கள், தேநீர் அருந்துவதற்குரிய கிண்ணங்கள் போன்ற பல் வகைச் சமையற் பாத்திரங்கள், இன்னும் பல பித்தளைப் பொருட்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அது தவிர பல் வேறு வகைகளிலான குளிர்காலத்துக்குரிய ஆடை வகைகள், மேலும் ஊரில் குறவர்/குறத்தி விற்பார்களே அத்தகைய பாசிமணி , ஊசிமணிமாலை போன்ற ஆபரண வகைகளெனப் பலவகைப் பொருட்கள் அவனிடம் விற்பனைக்கிருந்தன. நடைவாசிகள் பலர் அவ்வப்போது அவன் விரித்திருந்த கடையை ஆவலுடன் பார்த்தார்கள். சிலர் பேரம்பேசி சில பொருட்களை வாங்கியும் சென்றார்கள். ஒரு பருத்த வெள்ளைக்காரப் பெண்மணி தன் காதலனான ஒரு கறுப்பினத்து வாலிபனுக்கு நல்லாயிருக்குமென ஊசிமணி மாலையொன்றை வாங்கிப் பரிசளித்தாள். அவனும் பல சிணுங்கல்களுக்குப் பின்னர் அவளை முத்தமிட்டுத் தன் நன்றி யினைத் தெரிவித்துக் கொண்டு அந்த மாலையினை வாங்கி யணிந்து கொண்டான். இவ்விதமாகத் தன வியாபாரத்திலும் கவனமாகவிருந்து கொண்டு அவ்வப்போது இவர்களுடனும் உரையாடலினைத் தொடர்ந்து கொண்டிருந்தான் ஹென்றி. இளங்கோ ஹென்றியின் வியாபார திறமைகளையும் அவதானித்தான். அவன் தன் பொருட்களை வாடிக்கையாளர் களுக்கு விறபதற்குக் கையாளும் உரையாடற் தந்திரங்களையும் அவதானித்தான்.

இதே சமயம் அருள்ராசாவும் இளங்கோவும் அவ்வப் போது தமக்குள்ளும் தமிழில் உரையாடினார்கள். அருள் ராசாவுக்கோர் ஐயமேற்பட்டது. "இளங்கோ, உன்னாலை இப்படி விற்க முடியுமென்று நினைக்கிறியா?"

இதற்கு இளங்கோ "விற்கிறதுக்குக்கென்ன. அவ்வளவு கஷ்ட்டமாகத் தெரியேலையே. எனக்கென்றால் செய்யலாம் போலைத்தான் கிடக்கு. நீ என்ன நினைக்கிறாய்?" என்று எதிர்க் கேள்வி கேட்கவும் அருள்ராசா "செய்து பார்க்கிறதிலை பிரச்சினையொன்றுமில்லையென்றுதான் படுகுது. செய்து பார்ப்பம். எதுக்கும் முதலிலை இவனிட்டையும் ஏதாவது விசயத்தைக் கறக்கலாமாவென்று பார்ப்போம்" என்றான்.

இவர்கள் தங்களுக்குள் அடிக்கடி பேசிக் கொள்வதை அவ்வப்போது அவதானித்த எஸ்கிமோ ஹென்றி "என்ன இவ்விதம் விற்பதற்குப் பயமாகவிருக்கிறதா? " என்று கேட் டான். இதற்கு "அப்படியொன்றுமில்லை" என்று பதிலளித்த இளங்கோ" அது சரி. நீ எவ்விதம் ஹரிபாபுவைக் கண்டு பிடித் தாயா?" என்று கேள்வியொன்றினையும் கேட்டு வைத்தான்.

அதற்குச் சிரித்தபடியே ஹென்றி கீழுள்ளவாறு நீண்ட தொரு பதிலினையளித்தான்:

"இந்த "கிறீன்விச் கிராமம்" கலைஞர்களுக்கும், உல்லாசப்பிரயாணிகளுக்கும் பெயர் போனது. மேலும் நியூ யார்க் மாகாணப் பல்கலைக்கழகமும் இங்குதானுள்ளது. மாலையென்றால் வாசிங்டன் சதுக்கத்துப் பூங்காவுக்கு அண்மையிலுள்ள நடைபாதைகளில் கோடைகளில் ஓவியர் கள் நடைபாதைவாசிகளை அப்படியே வரைந்து சம்பாதித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். நானும் இந்நகருக்கு

வந்ததும் இவ்விதமாக உடனடியாகவே எனது நடை பாதை வியாபாரத்தை ஆரம்பித்து விட்டேன். வாசிங்டன் சதுக்கப் பூங்காவுக்கண்மையிலுள்ள "மக்டூகல்" வீதி

நடைபாதையில் தான் ஆடைவகைகளை வைத்து விற்றுக் கொண்டிருந்தேன். அப்போழுதுதான் ஒருநாள் இந்தக் ஹரிபாபுவைக் கண்டேன். இவன் அப்பொழுதுதான் தனது நடைபாதை வியாபாரத்தை ஆரம்பித்திருந்தான். ஒருநாள் இந்தப் பகுதியைச் சுற்றி யார் யாரெல்லாரும் இத்தகைய நடை பாதை வியாபாரங்களையெல்லாம் இங்கே செய்து கொண்டி ருக்கிறார்களோவென்பதை அறிவதற்காக வந்து கொண்டிருந்த வன் பார்வையில் நான் தட்டுப்பட்டேன். என்னைக் கண்டதுமே அவனுக்கு என்னைப் பிடித்துப் போய் விட்டது. மேலும் இந்தப் பகுதியில் அவனுக்குப் போட்டியாக நானொரு வன் மட்டும்தான் இவ்விதம் அவன் விற்கும் பொருட்களி லொன்றான ஆடைவகைகளை விற்றுக் கொண்டிருந்தேன். எனவே என் பொருட்களை மொத்தமாக விலைபேசி வாங்கி என்னைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டால் நல்ல வேலை யாள் கிடைத்ததாகவும் அதே சமயம் வியாபாரத்தில் எதிரி யொருவனை ஒழித்ததாகவும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் களை அடிக்கலாமென்பது அவனது கணக்கு. அவ்விதம் அவனடித்த கல்லில் அகப்பட்டவன்தான்இந்த எஸ்கிமோ ஹென்றி. எனக்கென்ன வேலைக்கு வேலையாகவும் ஆயிற்று. என்னிடமிருந்த பொருட்களை விற்றதாகவும் ஆயிற்று"

"ஆனால் ஹென்றி. சொந்தமாகத் தொழில் செய்யும் பொழுது நீ இன்னும் அதிகமாகச் சம்பாதிக்கலாமல்லவா?. அதையிட்டு நீ கவலைப்படுவதில்லையா?"

இதற்குச் சிறிது நேரம் அமைதியாகவிருந்த எஸ்கிமோ ஹென்றி மெதுவான குரலில் அவர்களைப் பார்த்துக் கூறினான்: "நீங்களிருவரும் யாரிடமும் கூறுவதில்லையென்று, குறிப்பாகக் ஹரிபாபுவிடம் கூறுவதில்லையென்று எனக்குச் சத்தியம் செய்தால் நானொரு உண்மை சொல்வேன்".

அவன் இவ்விதம் புதிராகக் கூறவும் இளங்கோவுக்கும், அருள்ராசாவுக்கும் அவனிடமிருந்து அந்த இரக்சியத்தை எப்படியாவது அறிந்து விட வேண்டுமென்று ஆவல் பொங்கி யது. அந்த ஆவல் குரலிலும் தொனிக்க, இருவரும் ஒரே சமயத்தில் "நிச்சயமாக ஒருத்தரிடமும் சொல்ல மாட்டோம். சொல்" என்றார்கள்.

அதற்கு எஸ்கிமோ ஹென்றி கூறினான்: "நீங்கள் கேட்டீர்கள் சொந்தத் தொழிலைக் கைவிட்டது கவலையைத் தரவில்லையாவென்று. யார் சொன்னது நான் என் சொந்தத் தொழிலைக் கை விட்டேனென்று."

இளங்கோ: "கை விடாமலென்ன.. இப்பொழுது நீ ஒருவருக்குக் கீழ்தானே வேலை செய்கிறாய்?"

ஹென்றி: "பார்வைக்கு அவ்விதம் தென்பட்டாலும் நான் இன்னும் என் சொந்தத் தொழிலையும் கவனித்துக் கொண்டுதானிருக்கிறேன். அதோ பார் அந்த எனது தோற் பையில் கொண்டு வரும் எனது பொருட்களையும் அவ்வப் போது இங்கு வரும் வாடிக்கையாளர்களுக்கும் விற்று விடு கின்றேன். பார்த்தாயா என் சாமர்த்தியத்தை"

சிறிது நேரத்துக்கு முன்தான் "பார்த்தாயா என் சாமர்த்தியத்தை" யென்று இவனை வேலைக்கு வைத்தவன் பார்வையாலேயே வெளிப்படுத்திச் சென்றதாக எண்ணிக் கொண்டிருந்த இளங்கோவுக்கு குள்ளத்தோற்றத்துடனும் குள்ளக் கால்களுடமிருந்த இந்த எஸ்கிமோவின் இந்த நேரிடை யான பதில் சிறியதொரு அதிர்ச்சியினையும் மேற்படுத்தியது. எவ்வளவு இயல்பாக இவனால் இன்னொருவனின் முதுகில் குத்துவதை வெளிப்படையாகக் கூற முடிகிறது

இவனது அதிர்ச்சியினைப் பார்த்த ஹென்றி கேட்டான்: "என்ன பயந்து விட்டாயா?"

இளங்கோ: "இல்லை. இவ்விதன் வெளிப்படையா கவே கூறுகின்றாயே. அதுதான் சிறிது அதிர்ச்சி. எல்லோரும் இவ்விதமான விடயங்களைக் களவாகச் செய்வார்கள். நீயோ எம்மில் இவ்வளவு நம்பிக்கை வைத்து வெளிப்படையாகக் கூறுகிறாயே."

ஹென்றி: "அதிகமாகப் பாவம் புண்ணியத்தை இங்கு பார்த்து விடாதே. அவ்விதம் பார்ப்பவனானால் உன்னால் இந்த நகரில் எதுவுமே செய்ய முடியாது. நண்பனே! இது நாய் நாயைத் தின்னும் உலகம். மறந்து விடாதே!"

அச்சமயம் மேலும் சில பாவனையாளர்கள் வந்து விடவே ஹென்றி அவர்களைக் கவனிக்கச் சென்று விட்டான். அச்சமயம் பார்த்து அருள்ராசா இளங்கோவிடம் கூறினான்: "காய் பொல்லாத காய்தான் எமனையே பச்சடி போட்டு விடுவான் போலை".

### அத்தியாயம் பத்தொன்பது:
### கோஷின் காதல்!

அன்றைய தினம் மாலை இளங்கோவும் அருள்ராசா வும் வீடு திரும்பியபோது அவர்களது சிந்தனையெல்லாம் அடுத்தநாள் அவர்கள் ஹரிபாபுவுக்காக ஆரம்பிக்கவிருக்கும் நடைபாதை வியாபாரத்தின் மீதிலேயேயிருந்தது. அன்று சில மணித்தியாலங்கள் ஹென்றியுடன் பொழுதினைக் கழித்ததன் மூலம் ஓரளவுக்கு அவர்களுக்கு ஹரிபாபுவின் நடைபாதை வியாபாரம் பற்றிய புரிதலேற்பட்டுவிட்டிருந்தது. சிறிது முயன்றால் விற்பனையை மேலும் அதிகரிக்கலாம் போலவும் அவர்கள் எண்ணினார்கள். இதே சமயம் இளங்கோ தடுப்பு முகாமிலிருந்து வெளிவந்த நாளிலிருந்து அன்றுவரையிலான அவர்களது வாழ்வின் நிக்ழ்வுகளை ஒருகணம் எண்ணிப் பார்த்தான். இதுவரையில் புதுப்புது அனுபவங்களுக்குமேல் அனுபவங்களாக பொழுதுகள் விடிந்து கொண்டிருந்தனவே யல்லாமல் ஓர் உறுதியான அடித்தளத்தைப் பொருளியல் ரீதியிலிட்டு எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் வகையில் எந்த விதமான சம்பவங்களுமே நிகழவில்லையே என்ற உண்மை உறைத்தது. அந்த நினைப்புடன் அவன் அருள்ராசாவிடம் கூறினான்: "அருள்! இதுவரையிலை ஒன்றுமே எங்கடை எதிர் கால வாழ்க்கையை உறுதியாகக் கட்டுகிறமாதிரி அமை யேலை. பார்ப்பம். இந்தத் தடவியாவது அமையுதாவென்று.."

அதற்கு அருள்ராசாவின் பதிலிவ்விதம் அமைந்தது: "என்னடா இளங்கோ. எப்பவுமே "பாசிடிவ் திங்கிங்" அது இதென்று கதைத்துத் திரியிற நீயே இப்பிடிக் கதைக்கிறதை நினைச்சால் நானென்னத்தைச் சொல்ல. நீ அடிக்கடி சொல்லுற மாதிரி எல்லாஅனுபவங்களையுமே எதிர்கால வெற்றிக்கான படிக்கட்டுக்களாக எடுக்க வேண்டியதுதானே. அதை விட்டிட்டு இப்பிடி நெகட்டிவ்வாகக் கதைக்கிறதாலை என்ன லாபம்?"

இளங்கோவுக்கு அருளின் கூற்று மனநிறைவினைத் தந்தது. அதே சமயம் தன் சொற்களையே வைத்து நண்பன் தன்னை மடக்கியதை நினைத்து உள்ளூர ஒருவித பெருமை யும் கொண்டான். சோர்ந்திருந்த அவனது மனம் வழக்கம்போல் மீண்டும் துள்ளியெழுந்து விட்டது. அத்துடன் "அருள்! நீ சொல்லுறதும் ஒரு விதத்திலை சரிதான். எங்களுக்குக் ஹரிபாபுவிடம் கிடைச்சிருக்கிற சந்தர்ப்பம் ஒருவிதத்திலை

நல்ல சந்தர்ப்பமாகத்தான் படுகுது. விற்பனைக் கலையை எங்கடை வாழ்க்கையிலைப் பிரயோகித்துப் பார்க் கிறதுக்கு இது நல்லதொரு சந்தர்ப்பம் என்று கருத வேண்டி யதுதான். அதுதான் உண்மையும் கூட. எங்களாலை முடிந்த

அளவுக்கு ஹரிபாபுவிடமாவது நிலைச்சு நிற்க முடியுதா வென்று பார்ப்பம்" என்றும் கூறினான்.

ஹரிபாபுவுடனான வேலை பற்றிய சிந்தனை களுடனும், எதிர்காலக் கனவுகளுடனும் தம்மிடம் திரும்பியவர்களை கோஷ் வரவேற்றான்: "நண்பர்களே! இன்று போன விடயம் என்னவாயிற்று? காயா? பழமா?"

அதற்கு இளங்கோவே முதலில் பதிலிறுத்தான்: "பழம்தான். நாளையே அவனுக்கு வேலையை ஆரம்பிக்கப் போகின்றோம். இன்று அவனது விற்பனையாளனான எஸ்கிமோ ஹென்றியுடனிருந்து வியாபாரத்தின் நுணுக்கங் களைக் கவனித்துக் கொண்டோம்"

இச்சமயம் இடைமறித்த கோஷ் "என்ன மராத்திய முதலாளி எஸ்கிமோவிடமும் வேலை வாங்குகின்றானா? ஆள் ஊரையே தின்ற கள்ளனாகவிருப்பான் போல் தெரிகிறதே!" என்று வியந்தான்.

இதற்கு அருள்ராசா பின்வருமாறு பதிலளித்தான்: "ஒரு விதத்தில் நீ சொல்லுவதுபோல் ஊரைத்தின்று ஏப்ப மிட்டவன் போல்தான் தெரிகிறான். இன்னும் அவனுடன் பழகி அவனைப் பற்றிய போதிய தகவல்கள் பெற்றுக் கொண்ட தன் பின்னர்தான் அவனைப் பற்றிய எந்தவொரு முடிவுக்கும் வரமுடியும். எதற்கும் அவனுடனும் வேலை செய்து பார்ப்போம். முயன்று பார்ப்பதில்தான் தவறொன்று மில்லையே."

இவ்விதம் அருள்ராசா கூறவும் இளங்கோ கூறினான்: "அருள்! சரியாய்ச் சொன்னாய். அவசரப்பட்டு முடிவுகளை எடுத்து விட்டுப் பிறகு கஷ்ட்டப்படுகிறதிலும்பார்க்க ஆறுத லாக முடிவுகளை எடுக்கப் பழக வேண்டும் அதுக்கு நல்ல தொரு சந்தர்ப்பம் வந்து வாய்ச்சிருக்கு"

இச்சமயம் மீண்டும் அவர்களது உரையாடலில் தன்னையும் பிணைத்துக் கொண்ட கோஷ் "நண்பர்களே! இந்த விடயத்தில் எனக்கு உங்களை நிரம்பவும் பிடித்திருக்கிறது. எத்தனை தடவைகள் முயற்சி பிழைத்தாலும், எதிர்பார்த்த விளைவினை ஏற்படுத்தாது போனாலும் தளர்ந்து விடாமல் மீண்டும் மீண்டும் முயற்சி செய்கிறீர்களே! அது எனக்கு நன்கு பிடித்துள்ளது. நீங்கள் பிழைத்துக் கொள்வீர்கள். ஒருவேளை இம்முறையும்..."

"அருள்ராசாவும் இளங்கோவும் ஏககாலத்தில் கேட்டார்கள்" ஒருவேளை இம்முறையும்... என்ன பிழைத்துக் கொண்டால் என்றுதானேகூற வருகிறாய்?"

அதற்கு கோஷ் "ஒருவேளை இம்முறையும் உங்களது இந்த முயற்சி பிழைத்து விட்டால் கவலைப் படாதீர்களென்று கூற வந்தேன். நான் என் தொழிற்சாலையில் கதைத்து நிச்சயம் உங்களுக்கொரு வேலை எடுத்துத் தர முயல்கின்றேன் என்ன கூறுகிறீர்கள்?"

இதற்கு இளங்கோ "கோஷ். நல்ல சமயத்தில் நல்ல வார்த்தைகள் பேசி நெஞ்சில் பாலை வார்த்தாய். உன்னை மறக்கவே மாட்டோம். நீ இவ்விதம் கூறியது எமக்கு இந்த வேலையினைச் சிறப்பாகச் செய்வதற்குரிய மன வலிமையினை அளித்து விட்டது. இந்த வேலை போனால் எப்படியாவது நீ எங்களுக்கொரு வேலை எடுத்துத் தருவாயென்ற நம்பிக்கை யொன்று முகிழ்த்துள்ளது. அந்த நம்பிக்கை எங்களுக்கு இந்த வேலையினை உற்சாகத்துடன், நம்பிக்கையுடன் செய்வதற் குரிய ஆற்றலினை அளித்து விடுமென்ற நம்பிக்கை நிறையவே ஏற்பட்டுவிட்டது." என்றான்.

கோஷ்: "நல்லது. அதுதான் தேவை. இதில் மட்டும் நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்களென்றால் உங்களைப் பிறகு பிடிக்க முடியாது. அதற்குப் பிறகும் இந்த அப்பாவி கோஷை நீங்கள் உங்கள் அடிமனதில் வைத்திருப்பீர்களா? வைத் திருப்பீர்களென்று நினைக்கிறேன்."

நண்பர்களிருவரும் ஒரே சமயத்தில்: "நிச்சயமாக. கோஷை நினைக்காமல் யாரை நினைப்பதாம்?"

கோஷ் உள்ளூர மகிழ்வுடன்: "பிறகென்ன! புது வேலை கிடைத்ததற்கொரு "பார்ட்டி" போட வேண்டியது தானே?"

இளங்கோ: "அதற்கென்ன, போட்டால் போயிற்று"

பிறகென்ன அன்றிரவுப் பொழுதும் குடியும் கும்மாளமுமாகக் கழிந்தது. ஆனந்தமாகப் பொழுதினைக் கழித்தனர். பல்வேறு விடயங்களைப் பற்றியும் தமக்குள் பல்வேறு எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர். நனவிடை தோய்ந்தனர். அவ்விதமான நனவிடை தோய்தலில் உரை யாடல் காதலில் வந்து நின்றது. கோஷ்தான் இந்த விடயத் தைப் பற்றி உரையாடலினை முதலில் ஆரம்பித்தவன்: "இளங்கோ. அடிக்கடி உனக்கு ஊரிலிருந்து ஒரு நாளைக்கு பத்து இருபதென்று கடிதங்கள் வருகிறதே. எல்லாமே காதற் கடிதங்களா?"

அதற்கு அருள்ராசா இவ்விதம் சிறிது கேலியாகக் கூறினான்: "அதையேன் கேட்கிறாய். ஐயா மேல் பழகாமலே வந்த காதலின் விளைவு அது."

இதற்கு கோஷ் சிறிது வியப்புடன் "என்ன பழகாமலே வந்த காதலா? அப்படியும் காதல் வருமா என்ன? "என்றான்.

அதற்கு அருள்ராசா "வருமாவா. ஐயாமேலை வந்திருக்கிறதே" என்றான்.

இச்சமயம் உரையாடலில் குறுக்கிட்ட இளங்கோ "இதுவொரு பெரிய கதை. பிறகொரு சமயம் கூறுகிறேனே. இப்பொழுது இதெல்லாவற்றையும் கொஞ்ச நேரமாவது மறந்து விட்டு உற்சாகமாகப் பொழுதினைக் கழிப்போமே"

இச்சமயம் கோஷின் முகம் சிறிது வாட்டமடைந்தது. "இளங்கோ நீ கொடுத்து வைத்தவன். என் நிலையைப் பார். ஒரு சமயம் ஒருத்தியை நீண்ட காலமாக ஒரு தலைக்காதலாக விரும்பினேன். அவளோ அதை எள்ளி நகையாடிவிட்டு இப்பொழுது இன்னுமொருத்தனுடன் கூடி வாழ்கிறாள். அதையே மறக்க முடியாமல் இன்னும் கிடந்து மனது வாடிக் கொண்டுதான் இருக்குது."

இளங்கோவுக்கும், அருள்ராசாவுக்கும் கோஷின் காதற் கதை சிரிப்பையும், வியப்பையும் கூடவே தந்தது.

"என்ன ஒருதலைக் காதலியை நினைத்து இன்னும் வாடிக்கொண்டிருக்கிறாயா. இருதலைக்காதலென்றாலும் பரவாயில்லை. அதுவும் ஒருதலைக் காதல். அதற்காக யாரா வது இவ்விதம் மனதைப் போட்டு வருத்திக் கொண்டிருப்பார் களா?"

இவ்விதம் இளங்கோவும், அருள்ராசாவும் கூறவும் கோஷிற்குச் சிறிது சினமேற்பட்டது. எவ்வளவு எளிதாக அவனது அந்தக் காதலை அவர்கள் எடைபோட்டு விட்டார் கள். பதினைந்து வருடங்களாக அவன் மனதுக்குள் உருகி உருகி வளர்த்த காதல் உணர்வுகளை எவ்விதம் எளிதாகக் கருதி விட்டார்கள். சுமித்திராவின் ஞாபகம் நெஞ்சில் தலை காட்டியது. சுமித்திரா அவனது நெஞ்சில் காதற்பயிரை வளர்த்துவிட்டுப் பின்பு காட்டுப் பன்றியாகச் சீர்குலைத்தவள். அது அவள் தவறா?

சுமித்திராவின் நினைவுகள் தந்த கனத்தினைத் தாளமுடியாதவனாக இன்னுமொரு மிடறு "ஜானிவாக்கரை" உள்ளே தள்ளினான் கோஷ். அவனது கண்கள் மது

மயக்கத்தால் மேலும் சிவந்தன. இளங்கோவுக்கும், அருள் ராசாவுக்கும் அவனது காதற்கதையைக் கேட்பதிலொரு சுவாரசியமேற்பட்டது. இச்சமயம் வீட்டுச் சொந்தக்காரர் அஜித்தும் வந்து அவர்களுடன் இணைந்து கொண்டார். வரும்போதே இலேசாக அவர்களது உரையாடலைச் செவி மடுத்துக் கொண்டு வந்தவர் "என்ன காதல் அது இதுவென்று அடிபடுகிறதே. என்ன விசயம்?" என்றார். அவர் இவ்விதம் கேட்கவும் அருள்ராசா கூறினான்: "அங்கிள். நீங்களே சொல்லுங்கள் யாராவது ஒருதலைக்காதலுக்காக இவனைப் போல் இவ்விதம் வாழ்க்கையை வீணாக்குவார்களா?"

இவ்விதம் அருள்ராசா கேலியாகக் கூறவும் கோஷின் சினம் மீண்டுமேறியது. "இங்குபார். இவ்விதம் மீண்டும் மீண்டும் நீ என்னை அவமதித்தால் நான் இப்பொழுதே இந்தப் பார்ட்டியி லிருந்து விலகிவிடுவேன்".

விளையாட்டு வினையாவதை உணர்ந்த இளங்கோ "கோஷ். அவன் கிடக்கிறான் விடு. நாங்கள் உன் காதலை நம்புகிறோம் இல்லையா அங்கிள்" என்றான். அதற்கு "அங்கிள்" அஜித்தும் ஒத்துப்பாடினார்: "காதல் உணர்வுகள் ஒருதலையோ இருதலையோ புனிதமானவை என்பது என் கருத்து. காதலுக்காக ஒருவர் தன்னையே இழக்கச் சித்தமாக விருக்கிறாரே. ஒருதலையோ இருதலையோ அந்த உறுதி உண்மையானதுதானே. எனக்குத் தெரிந்து ஒரு பெண்மணி ஒருத்தர்மேல் ஒருதலையாகக் காதல் கொண்டார். ஆனால் அவர் காதலித்தவரோ இதுபற்றி ஒன்றுமே அறியாமல் அந்தப் பெண்மணியின் உயிர்த்தோழி ஒருவரைக் காதலித்து மணந்து கொண்டார். அந்தப் பெண்மணியோ அதற்குப் பின் யாரையும் திருமணமே செய்யவில்லை. வாழ்க்கை முழுவதுமே தான் காதலித்தவரின் நினைவுடனேயே வாழ்ந்து கொண்டிருக் கிறார். இதைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்"

இப்பொழுது அருள்ராசா மீண்டும் உரையாடலினுள் தன்னை நுழைத்துக் கொண்டான்: "கோஷ். என்னை மன்னித்துக் கொள். நான் உன் மனதைப் புண்படுத்துவதற்காக எதனையும் கூறவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இந்தக் காதல் கீதல் உருகலெல்லாம் தேவையில்லாதவை. பருவக் கோளாறுகள். அதனால்தான் அவ்விதம் கூறினேன். ஆனாலும் இவ்விதம் காதல்வயப்பட்டு வாழும் மனிதர்களைக் கண்டு ஒவ்வொருமுறையும் நான் வியப்பதுண்டு. ஒருவேளை அவ் வுணர்வுகளை அறிந்து கொள்ளும் பக்குவமெனக்கில்லையோ தெரியவில்லை"

இப்பொழுது கோஷ் கூறினான்: "நண்பனே! பரவா யில்லை. நானும் சிறிது மிகையாக என் உணர்வுகளைக் கொட்டி விட்டேன். அவற்றை நீயும் மறந்துவிடு. ஒருவேளை நீ சொல்லுவதும் சரியாக இருக்கலாம். நான்தான் தேவை யில்லாமல் என் வாழ்க்கையை இந்த உணர்வுகளுக்காக வீணடித்துக் கொண்டிருக்கிறேனோ தெரியவில்லை"

இளங்கோ: "கோஷ். நீண்டகாலமாக ஒருத்தியை விரும்பியதாகக் கூறினாய். எவ்வளவு காலமாக?"

கோஷ்: "பதினைந்து வருடங்களாக அவளை, சுமித்திராவை, நான் எனக்குள்ளேயே விரும்பியிருக்கிறேன். அவளிடம் இதுபற்றி எதுவுமே கூறாமலேயே எனக்குள்ளேயே பதினைந்து வருடங்களாக நான் அவளை விரும்பியிருக் கிறேன்."

அனைவரும் வியப்புடன்: "என்ன பதினைந்து வருடங் களாகவா... இவ்வளவு வருடங்களாக ஒருமுறையாவது உன் காதலை நீ அவளுக்கு வெளிப்படுத்தவில்லையா! என்ன ஆச்சரி யமிது. இந்தக் காலத்தில் இப்படியெல்லாம் கூட நடக்குமா!"

கோஷ்: "அதுதான் எனக்கும் புரியவில்லை. நானேன் அவ்வளவு காலம் அவ்விதம் ஓட்டினுள் தலையை நுழைத்து விட்ட ஆமையாக இருந்திருந்தேனோ? எனக்கும் புரிய வில்லை. ஆனாலொன்று.. அந்தப் பதினைந்து வருடங்களில் ஒவ்வொரு நாளும் நான் சுமித்திராவை நினைக்காத நாளில்லை. ஒவ்வொரு நாளும் அவளை நிணைத்திருக் கின்றேன். அவளைப் பற்றிய கனவுகளைக் கண்டிருக்கிறேன். அவளைப் பற்றி ஒவ்வொரு கணம் நான் நினைக்கும் போதும் என் நெஞ்சம் விரகத்தால் உருகி வழியும். என் ஆழ்மனது முழுவதும் அவளே நிறைந்திருப்பதால்தான் நான் அவ்விதம் நினைப்பதாகக் கருதினேன். அவ்விதம் ஒருவரை ஆழ்மன தொன்ற ஆழமாக நினைப்போமானால் அந்த நினைவுக்குரிய வரும் காலப்போக்கில் அவ்விதமே நினைப்பாரென்றொரு ஆழமானதொரு நம்பிக்கை உளவியல்ரீதியில் எனக்கிருந்தது. அதனால் நான் அவளைப்பற்றி ஆழமாக உருகிக் காதலிப்பதைப்போல் அவளும் என்னைக் காதலிப்பாளென் றொரு ஆழமான நம்பிக்கையுடன் வாழ்ந்திருந்தேன். பதினைந்து வருடங்களாக அவ்விதமே காலத்தைக் கழித்து விட்டேன். அதன்பிறகே அவளிடம் சொல்லுவதற்குரிய துணிவும் ஏற்பட்டது. ஆனால் அந்தச்சமயம் அவள் இன்னொருத்தனுக்குச் சொந்தமாகிவிட்டாள். இருந்தும் சந்தர்ப்பமேற்பட்டபோது அவளிடமே கூறினேன். அவ்விதம் கூறாவிட்டால் என் தலையே உடைந்து சுக்கு நூறாகி விடும் போலிருந்ததால் என் மனப் பாரத்தை இறக்கி வைப்பதற்காக அவளிடமே அவ்விதம் சந்தர்ப்பமேற்பட்டபோது அவ்விதம் கூறினேன். அவ்விதம் கூறியதன் மூலம் என் காதல் வெற்றியடையாததாகவிருந்தா லும் ஒருவிதத்தில் அவளும் அறியும் சந்தர்ப்பமேற்பட்டதன் மூலம் இருதலைக் காதலாகி விட்டதல்லவா. அதன்பின்தான் என் மனப்பாரம் சிறிது குறைந்தது."

"அங்கிள்" அஜித்: "கோஷ். நீ அவ்விதம் அவளிடம் உன் காதலைத் தெரியப்படுத்திய சமயம் அவள் என்ன கூறினாள்? ஆத்திரப்பட்டாளா? அனுதாபப்பட்டாளா?"

கோஷ்: "முதலில் நானும் அவ்விதமானதொரு பதில் தாக்கத்தைத்தான் அவளிடமிருந்து எதிர்பார்த்தேன். ஆனால் அவளோ மிகவும் இயல்பாக அதனை எடுத்துக் கொண்டாள். அவளிடம் நான் கேட்டேன் "இவ்விதம் கூறியதற்காக ஆத்திரப்படுகிறீர்களா"வென்று. "என்னைப் பற்றித் தவறாக நினைக்கிறீர்களாவென்று". ஆனால். அவளோ மிகவும் இயல்பாக என்னில் மிகவும் மதிப்பு வைத்திருப்பதாகக் கூறி அந்தச் சூழலையே மாற்றி வைத்து விட்டாள். அந்தக் கணத்திலிலிருந்து நான் அவள் பற்றிய நினைவுகளை மனதின் மூலையில் மூட்டை கட்டி வைத்து விட்டேன். இருந்தாலும் அந்தப் பதினைந்து வருடத் தாக்கம் அவ்வளவு எளிதில் போய் விடுமாயென்ன? நிறைவேறாக் காதல் உணர்வுகள் தொல்லை தருவதைப் போல் வேறெந்த உணர்வுகளும் தொல்லை தருவ தில்லை"

இவ்விதமாகக் கோஷ் தன் காதற் கதையினை அவர் களுடன் பகிர்ந்து கொண்டதைத்தொடர்ந்து மற்றவர்களும் தங்கள் காதல் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்கள். முதலில் "அங்கிள்" அஜித்தே தன் காதற் கதையைச் சுருக்கமாகப் பகிர்ந்து கொண்டார்: "என் காதல் கதையைக் கேட்டால் உங்களுக்குச் சிரிப்பாகவிருக்கும். நானும் ஒருத்தியைக் காதலித்தேன். நான் யார் மூலம் அவளுக்குக் காதற்கடிதங்களை அனுப்பினேனே அவள்தான் இன்று எனக்கு மனைவியாக இருக்கிறாள். அக்கடிதங்களை

அன்று ஆசையோடு வாங்கியவள் தன் வீட்டாரின் சொல்லுக் கடங்கி என்னைவிடப் படித்த பணக்கார மாப்பிள்ளையாகப் பார்த்துப் பிடித்துக் கொண்டாள். அன்று நான் பட்ட வேதனையைக் கண்டு பரிதாப்பட்டு பத்மா என்னைத் தன் கணவனாக ஏற்றுக் கொண்டாள். இன்று பத்மா இல்லாமல் ஒரு வாழ்வையே என்னால் கற்பனை செய்து பார்க்க முடியாது. வாழ்க்கையென்றால் எப்பொழுதுமே இப்படித்தான். நினைப்பதொன்று நடப்பதொன்று. சூழலுக்கேற்ப வாழப் பழகிக் கொள்ள வேண்டும்"

இச்சமயம் இளங்கோவுக்கும் தன் முதற்காதல் அனுபவங்கள் ஞாபகத்துக்கு வந்தன. கூடவே சிரிப்பும் வந்தது. அவன் தன் வாழ்க்கையில் ஒருமுறைதான் காதற் கடித மென்று எழுதியிருக்கிறான். பதினாறு வயதுக் காதல். அவளது சுருண்ட கூந்தலும், நிலம் நோக்கிய பார்வையும், கூரிய கண் களும் அவனைப் பாடாய்ப்படுத்தி விட்டதன் விளைவாக ஒரு கடிதமொன்றினை எழுதி அவளிடம் நேரிலேயேதுணிவாகக் கொடுத்து விட்டான். அதில் அவள் அவனை விரும்பும் பட்சத்தில் வரும்போது தலையில் மல்லிகைப் பூ வைத்து வரும் படி கூறியிருந்தான். அவ்விதம் விரும்பாவிட்டால் அந்தக் கடிதத்தைக் கெட்ட கனவாக மறந்து விடும்படியும், யாரிடமும் அது பற்றிக் கூற வேண்டாமெனவும் கூறியிருந் தான். அவளோ.. அவன் என்ன செய்ய வேண்டுமென எதிர் பார்த்தானோ அதனைச் செய்யாமல், எவையெல்லாவற்றை யெல்லாம் செய்யக் கூடாதென்று எழுதியிருந்தானோ அவற்றையெல்லாம் செய்தாள். அதன்பிறகு அவளது தோழி மாரெல்லாரும் வழியில் அவனைக் கண்டால் அந்தக் கடிதத் தைப் பற்றிக் கூறி எள்ளி நகையாடத் தொடங்கி விட்டார்கள். அவனோ.. அத்துடன் அந்தக் காதற்கதைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு அவள் கொடுத்து வைத்தது அவ்வளவுதா னென்று தன் வாழ்வின் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து விட்டான். அதன்பிறகு அவளை அவன் ஒருமுறை கூடச் சந்திக்கவேயில்லை. அதெல்லாம் அந்த வயதுக் கோளாறு. அத்தகைய கோளாறுகளால்தான் அந்தப் பருவமும் பூத்துக் குலுங்குகிறது. அந்த வயதில் விரும்பிய எத்தனைபேர் நிஜ வாழ்வில் இணைகிறார்கள்? இவ்விதமாக அன்றையை இரவுப் பொழுது உற்சாக பானமருந்தி காதல் பற்றிய நனவிடை தோயலுடன் கழிந்தது.

### அத்தியாயம் இருபது:
### இந்திராவின் சந்தேகம்!

அடுத்த மூன்று வாரங்களும் இளங்கோவுக்கும், அருள்ராசாவுக்கும் ஹரிபாபுவுடன் கழிந்தது. ஹரிபாபு கூறியபடியே அவர்களுக்குமொரு நடைபாதைக் கடையினை கிறிஸ்தோபர் வீதியும், நான்காம் வீதி மேற்கும் சந்திக்குமிடத் தில் போட்டுக் கொடுத்துவிட்டான். ஹரிபாபு, அவன் மனைவி மற்றும் ஹென்றி எல்லோரும் தமது பழைய இடங் களிலேயே தங்கள் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந் தார்கள். ஹரிபாபுவுக்கு நண்பர்களிருவரும் வேடிக்கையாக வைத்த பெயர் "நடுத்தெரு நாராயணன்". நடுத்தெரு நாரா யணன் கடையிலிருந்து நடைபாதைக்கு வந்தவன். அவனது கடையிலேயே அவனது விற்பனைப் பொருட்கள் யாவு மிருந்தன. நடுத்தெரு நாராயணன் நடைபாதை வியாபாரத்தின் பல்வேறு விதமான நெளிவு சுளிவுகளையும் கற்றுத்தேர்ந்த கில்லாடி. இந்த விடயத்தில் சில சமயங்களில் நியூயார்க் காவற்துறைக்குக் கண்களில் விரல்களை விட்டு ஆட்டிடும் வல்லமை பெற்றிருந்த அவனிடமிருந்து படிக்க வேண்டிய பாடங்கள் பல இருந்தன. அவ்விதம்தான் இளங்கோ அவனைப்பற்றி எண்ணிக் கொண்டான்.

சில சமயங்களில் வார இறுதி நாட்களில் நியூயார்க் நகரின் சில வீதிகளை மூடி விட்டு அங்கு நடைபாதை வியா பாரிகளைப் பொருட்கள் விற்பதற்கு அனுமதி வழங்குவார்கள். அத்தகைய சமயங்களில் அவ்விதம் மூடப்பட்ட வீதிகளில் வைத்து விற்பதற்கு அதிக அளவில் கட்டணத்தைச் மாநகர சபைக்குச் செலுத்த வேண்டும். இத்தகைய சமயங்களில் நடுத் தெரு நாராயணனான ஹரிபாபு வின் செயற்திட்டம் பின்வரு மாறிருக்கும்:

இளங்கோவுக்கோ சட்டவிரோதமாக நடை பாதை யில் அவ்விதம் பொருட்கள் விற்பதற்குச் சிறிது தயக்கமாக விருந்தது. அவனுக்கு இந்திராவைப் பார்த்தால்தான் சிறிது பாவமாகவிருந்தது. நடுத்தெருவில் அவளை அவ்விதம் விட்டுவிட்டுப் போய் விட்ட நடுத்தெரு நாராயணின்மேல் சிறிது கோபமாகவுமிருந்தது. இத்தகைய பாவ, கோப உணர்வு களுடன் அவன் அவளிடம் "இவ்விதம் நடுத்தெருவில் நின்று விற்பதற்குத் தயக்கமாகவோ அல்லது பயமாகவோ இல்லையா?" என்று கேட்டான். அதற்கு அவள் சிரித்தவாறு பதிலளித்தாள்:

"ஆரம்பத்தில் இவ்விதம்தான் பயமாகவிருந்தது. ஆனால் போகப் போகப் பயமெல்லாம் போயே போய் விட்டது. பழகப் பழக எல்லாமே பழகிவிடும் இல்லையா? அது போல்தான்."

"உண்மையாகத்தான் சொல்லுகிறீர்களா? இப் பொழுது இங்கே ஒரு காவற்துறை அதிகாரி வந்து நடை பாதையில் விற்பதற்குரிய பத்திரங்களெங்கேயென்று கேட்டால் என்ன செய்வீர்கள்?"

"அதற்கும் அவர் சுலபமானதொரு வழியைச் சொல்லித் தந்திருக்கிறாரே"

"என்ன வழி?"

"அப்படி யாராவது வந்து கேட்டால் எனக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை என்று கூறி விடுவேன்..."

"அதெப்படி.. நீங்கள் இங்கு நின்று கொண்டு அப்படியெப்படி இவ்விதம் கூறலாம்?"

"அதுவும் மிகவும் சுலபம். "நான் இங்கு பொருட்களை வாங்குவதற்காக வந்தவள். கடைக்காரரைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். இனி இது உங்கள் பொறுப்பு" என்று நழுவி விடுவேன்"

இளங்கோவுக்கு அவளது பதில் ஆச்சரியத்தைத் தந்தது.

"நீங்கள் உண்மையிலேயே மிகுந்த தைரியசாலிதான். என்னால் இவ்வளவு துணிந்து பொய் கூற முடியாது. அதுசரி அப்படி நீங்கள் கூறி நழுவி விட்டால் இங்குள்ள விற்பனைப் பொருட்களின் கதி?"

இதற்கு இந்திராவின் பதில் அவனுக்கு மேலும் வியப்பினைத் தந்தது. அவள் கூறினாள்: "அவர்கள எல்லா வற்றையும் அப்படியே அள்ளிப் போட்டுக் கொண்டு போய் விடுவார்கள். அவ்வளவுதான்."

சில சமயங்களில் மாலை நேரங்களில் "சைனா டவுனி"லுள்ள "கனால்" வீதியிலும் நடைபாதைகளில் நடுத் தெரு நாராயணன் இவ்விதம் தந்திரமாகப் பொருட்களை விற்ப துண்டு. அத்தகைய சமயங்களில் அவனது மூளை வேறு வித மாக வேலை செய்யும். உதாரணமாக அவ்வீதியிலுள்ள பிரபல மான வர்த்தக நிலையமொன்று மாலை ஆறு மணிக்கு மூடி விடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த வர்த்தக நிலையம்

இழுத்து இரும்பும் கம்பிகளுடன் கூடிய கதவுகளால் மூடப்பட்டபின்னர்தான் நடுத்தெரு நாராயணன் தன் கடையினை விரிப்பான். எப்படியென்றால்... அந்த வர்த்தக நிலையத்தின் படிக்கட்டுகளில் பொருட்களைப் பரப்பி வைத்து விற்பான். யாராவது கேட்டால் அந்த வர்த்தக நிலையத்துக்கும் தனக்கும் இவ்விதம் விற்பதற்குத் தனிப்பட்ட ரீதியிலான ஒப்பந்தமிருப்பதாகக் கூறிச் சமாளிப்பான். சில சமயங்களில் அவனது இந்தத் தந்திரம் வேலை செய்வதுமுண்டு. அவ்விதம் வேலை செய்யாமல் போய் விடும் சந்தர்ப்பங்களில் முதலை இழக்க வேண்டியதுதான்.

இளங்கோவுக்கு இவ்விதம் வியாபாரம் செய்து கொண்டு எவ்விதம் இலாபம் சம்பாதிக்கிறானிந்த நடுத்தெரு நாராயணன் என்றிருக்கும். அந்தச் சந்தேகம் குரலில் தொனிக்க அவளிடம் பின்வரும் கேள்வியினைக் கேட்டுவைத்தான் இளங்கோ:

"எப்படி இவரால் இவ்விதம் விற்பனையைச் செய்து கொண்டு, முதலையும் அவ்வப்போது இழந்து கொண்டு, தொடர்ந்தும் வியாபாரத்தைச் செய்ய முடிகிறது?"

"அதனால்தான் என்னை இந்தியாவிலிருந்து அழைத்து வந்தபோது கடையில் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்த மனுசன் இன்று நடைபாதையிலை வந்து செய்கிற அளவுக்கு மாறியிருக்கிறார்" இவ்விதம் கூறியபொழுது இந்திராவின் குரலில் ஒருவித சோகம் கலந்த தொனி பரவிக் கிடந்ததாகப் பட்டது.

"உங்களுக்கு இவரை முன்பே தெரியுமா?"

அன்று இந்திராவுடன் இளங்கோ அதிக அளவு நேரம் செலவழித்ததன் காரணமாக இருவருக்குமிடையில் சகஜமான உரையாடல் நடைபெறுமளவுக்குரிய சூழல் ஏற்பட்டிருந்தது. இவ்விதமாக அவனுடன் மனந்திறந்து உரையாடிக் கொண்டிருந்தபொழுது அவள் கூறினாள்: "உன்னை என் சகோதரனாகக் கருதி கூறுகிறேன். உண்மையில் உன்னுடன் இவ்விதம் கதைப்பது சரியில்லையென்றுதான் தோன்றுகிறது. ஆனால் கதைக்காமலும் இருக்க முடியவில்லை. இங்கு நான் தனித்துப் போனேன். எனக்கென்று கதைப்பதற்கு யாருமே இல்லை. உறவினரோ, நண்பர்களோ யாருமேயில்லை. அமெரிக்காவில் தானொரு பிசினஸ்காரனென்று ஊர்ப் பத்திரிகையில் இவரது மணமகளுக்கான விளம்பரத்தைப் பார்த்துவிட்டு வந்து அகப்பட்டு விட்டேன். என் ஆசைக்குக் கிடைத்த பரிசு. எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். வந்தபிறகுதானே எல்லாமே விளங்குது. எனக்கு உண்மையிலேயே ஒரு சந்தேகமும் இவர் விடயத்திலிருக்கு."

இளங்கோவுக்கு அவளது நிலை அனுதாபத்தைத் தந்தது. வியாபாரத்தில் நொடிந்துபோன நிலையிலிருந்த ஹரிபாபு உண்மையிலேயே மிகவும் வயதில் இளமையான இவளைச் சீதனத்திற்காகத் திட்டமிட்டே ஏமாற்றி விட்டானா அல்லது உண்மையிலேயே இவளை அழைத்து வந்ததன் பின்னர் அவனது வியாபாரம் எதிர்பாராத காரணிகளால் நொடிந்து போய் விட்டதா?

"என்ன சந்தேகமா.... பார்த்தால் அவர் சந்தேகபடக் கூடியவராகத் தெரியவில்லையே!"

இதற்குச் சிறிது நேரம் அமைதியாகச் சிந்தனையில் ஆழ்ந்தவள் பின் கூறினாள்: "சகோதரனே! நீ மட்டும் இதை யாரிடமும் கூற மாட்டேனென்று சத்தியம் செய்து தந்தாயானால் ஒரு சில விடயங்களை நான் உன்னிடம் கூறலாம். ஏனோ தெரியவில்லை. உன்னை நம்ப முடியுமென்று படுகிறது. உன்னுடன் சிறிது மனந்திறந்து கதைப்பதன் மூலம் என் மனப்பாரமாவது சிறிதளவு குறையலாம்போல் படுகிறது."

இதற்கு அவன் கூறினான்: "நீங்கள் நிச்சயம் என்னை நம்பலாம். என்னை நீங்கள் உங்களது உண்மையான சகோதரர்களிலொருவனாக எண்ணிக் கொள்ளலாம். அந்த நம்பிகையினை நான் நிச்சயம் காப்பாறுவேன்."

இதற்கும் சிறிது நேரம் அமைதியாக இருந்த இந்திரா "இவரது நடத்தையினைப் பார்க்கையில் எனக்கு உண்மையிலேயே இவரது மனம் சாதாரணமாகத்தானிருக்கிறதா என்ற சந்தேகம்தான் அதிகமாகிறது. இல்லாவிட்டால் எந்தவிதப் பொறுப்புமில்லாமல் எவ்விதம் இவரால் இவ்வளவு எளிதாகக் கள்ளத்தனமாக வேலைகளையெல்லாம் அநாயாசமாகச் செய்யமுடிகிறது? இவரது மனம் உண்மையிலேயே சரியாகத் தானிருக்கிறதா?" என்று அவனை அதிர்ச்சியடையக் கூடியதொரு குண்டினைத் தூக்கிப் போட்டபொழுது நடுத்தெரு நாராயணான ஹரிபாபு அன்றைய தன் சோலிகளை முடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தான். இந்திராவோ இளங்கோவை நோக்கி "என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே" எனறொரு பார்வையை வீசிவிட்டு இயல்பாக நிற்பதற்கு முயன்றுகொண்டிருந்தாள்.

(தொடரும்)

# ஆளுகைப் பிரகடனம்

சதா நிறைந்திருக்கின்றன
மூளையின் அம்பறாத்தூணி
இடுக்குகள் எங்கும்
எனக்கான உன்னையும்
உனக்கான என்னையும்
இலக்கு வைப்பதற்கான அம்புகள்...
வாழ்தலுக்கும்
நிலைத்திருத்தலுக்குமான
விருப்புகளால்
சாணைபிடிக்கப்பட்டு...

களைத்துப் போகிறேன்
எனக்கான உன்னை...
நீண்டதும் வளைந்ததுமான
கோடுகளால் வரைந்து
எனக்குப் பிடித்த தீந்தைகளால்
வண்ணம் தீட்டி வசியப்படுத்தவதில்
எனது பிரயத்தனங்களை

அறியாததுபோல
நீ...

தலைகுனிந்தவாறே
எனக்கான ஓட்டப்பந்தயச்
சுவடுகளை தெளிவாக
அளந்து வெட்டுகிறாய்.
நீ அறிவாயா? நான்...
சுவடுகளே வரையமுடியாத
வான வெளியில்
ரீங்கரிக்க விரும்புகிறேன்.

இப்போது...
அதிருப்தியில் அத்தனையையும்
கிளித்தெறிகிறாய் நீ...
எனது கோடுகளுக்குள்ளும்

தீந்தைக்குள்ளும்
சுயத்தைத் தொலைத்துவிட்டதாய்
நீ...
எனக்கான உனது சுவடுகளும்
அப்படியே...

எனது கோடுகளும் தீந்தைகளும்
உனது சுவடுகளும்...
ஏன் எமது அம்புகளுங்கூட...
எனக்கான உன்னையும்
உனக்கான என்னையும்
ஆளுகைப்படுத்தலுக்கும்
நிறுவுதலுக்குமான
பிரயத்தனங்களாக...
சதா இருவரிலும்...

- அ.பௌநந்தி

## காடுலாவு காதை பாகம் 2
## நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2




*13*

வேலன்குளம் புலவனாவூர், மடுக்குளம், அவற்றின் சூழலில் அமைந்த பெருங் காட்டின் தொடரறுத்து உருவான கிராமம் சிவபுரம். அந்த ஊரில் ஒரு குடும்பம் மாவீரர் குடும்பமாக இருந்தது. அதை தேடி வருவோராக போராளிகளின் நடமாட்டமும் இருந்தது.

லெச்சிமி ஏற்கெனவே புலிப் பெண்களுடன் தொடர்பிலிருந்தாள். என்றாலும் அவர்கள் பற்றிய அச்சமும் அவதானமும் அவளிடம் இருந்தது. என்னவோ கொலைகாரக் கும்பலிலிருந்து தப்பி இங்கே வந்துவிட்டதாக அவள் பெருமை கொண்டாலும், உண்மையில் அவள் இப்போதுதான் கொலைவலயத்தினுள் வந்திருக்கிறாள் என்பதை உணர, அவளுக்கு பல வருடங்களாயிற்று. அவர்களது கிராமத்தில் ஒரு சில்லறைக் கடை கூட கிடையாது. அங்கிருந்து இரண்டு மூன்று மைல்களுக்கப்பால் கோவில் புளியங்குளம் என்ற கிராமத்தில் ஒருவர் கடை வைத்திருந்தார். அவரும் அந்த ஊரவர் இல்லை. ஒருநாள் ஏதோ பொருள் வாங்கவென, லெச்சிமி தன் மிதிவண்டியை எடுத்துக் கொண்டு பூவரசன்குளத்தில் தொடங்கி பனங்காமம் ஊடாக துணுக்காய் வரை செல்லும் அந்த மாடுவண்டித் தடம் போல இருந்த நீண்ட வீதியில் தன் மிதிவண்டியை செலுத்தினாள்.

பூவரசன்குளம் தொடக்கம் இரணை இலுப்பைக்குளம் வரை முன்னர் ஒருகாலத்தில் பேருந்து சேவை நடந்ததாம். அதனால் அந்த வீதியில் எப்பவோ ஊற்றிய தார் இன்று வரை தனக்கு பிடித்தமான கற்களை தக்க வைத்துக் கொண்டு மீதியை தெருவெங்கும் உருட்டிவிட்டிருந்தது. அவற்றையும் பாதசாரிகளும் மிதிவண்டிக்காரர்களுமாக ஒதுக்கிவிட்டு ஒரு நடைபாதையை உருவாக்கி அதில் மிதிவண்டி ஓடவும், நடக்கவும் செய்தார்கள். ஏறக்குறை நான்குமைல் தொலைவில் அமைந்திருந்த இரணை இலுப்பைக்குளம் மேற்கே பெருவனத்தை கொண்டிருந்தது. எனினும் ஒரு சிறு வட்டத்தில் அங்கே பாரம்பரியமாக வாழ்ந்த குடும்பங்கள் இருந்தன. வானத்தை அளாவி நிற்கும் தென்னைகளும் காய்க்கும் மா பலா போன்ற பெரு மரங்களும் அந்த கிராமத்தின் வயதை பறை சாற்றின.

வவுனியா யாழ்ப்பாண வீதியில் தாண்டிக்குளத்திலிருந்து திரும்பும் பெருவீதி. மரக்காரம்பளை, சாத்திரி கூழாங்குளம் ஈச்சங்குளம், கல்மடு கொலனி கடந்து இரணை இலுப்பைக்குளத்தை தொடும். இங்கே ஒரு வைத்தியரும் தாதியும் வேலை செய்யும் ஆஸ்பத்திரி இருந்தது. நாலைந்து கடைகள் ஒரு மெக்கானிக் கடை, ஒரு சைக்கிள்கடை இவை நாம் ஆரம்பத்தில் பார்த்த அந்த நாற்சந்தியிலிருந்து உள்ளே அமைந்திருந்தன. ஒரு பஸ்தரிப்பு நிலையம் அங்கு இருந்ததற்கான தடயம் இருந்தது. இப்போது அது வருவதில்லை. அந்த வீதிகள் சந்திக்கும் நாற்சந்தியில் ஒரு பழங்கால சிவன் கோவில் இருந்தது. அங்கிருந்த சிவலிங்கத்தின் அளவே அந்தக் கோவில் எவ்வளவு பெரிதாக இருந்திருக்கும் என்பதை தெரிவித்தது.

ஆர்வம் காரணமாக நீண்ட வீதியில் இரணை இலுப்பைக்குளம் வரை வந்துவிட்ட லெச்சிமி, திரும்பவும் வீடு செல்லும் வழியில் திரும்பினாள். பிள்ளைகளை அறியாத ஊரில் சிவாவை நம்பி விட்டுவிட்டு வந்த கவலையில் அவள் வேகமாக சென்றாள். கோவில் புளியங்குளம் கடந்தபோது, அவளைப் பெயர் சொல்லி யாரோ அழைப்பது கேட்டது. யாரும் வம்பனாக இருக்கலாம். இது வனம் ஊர்மனைக்குள் போகும்வரை திரும்ப வேண்டாம் என நினைத்து, வேகமாக சைக்கிளை மிதித்தாள்.

கோவில்புளியங்குளம் பாடசாலையை அண்மித்ததும் மிதிவண்டியை நிறுத்தினாள். அதே வேகத்தில் அவளை விரட்டிக் கொண்டு வந்த நளாயினியும் செண்பகாவும் வந்து அருகில் நின்றனர்.

“என்னக்கா இவ்வளவு வேகமா ஓடுறீங்க,. எனக்கு மூச்சு வாங்குது.” என்றாள் நளாயினி. இவள் பின்னாளில் லெப்ரினன் கேணலாக கடற்படையின் கப்பலை தகர்த்து அதன் கப்டனை கைது செய்யும் சாதனைக்கு வித்திடப் போகிறாள் என்பது யாருக்கும் என்ன அவளுக்கே தெரியாது.

லெச்சிமிக்கு தனது பயம் வெட்கத்தை கொடுத்தது. ஆனாலும் அவள் ஒருபோதும் தன் தோல்வியை ஒப்புக் கொள்வதில்லையே.

“ கூப்பிட்ட சத்தங் கேட்டது… காட்டுக்குள் ஏதும் பேயாக்கும் எண்டு நெனச்சிட்டன்.”என்றாள்.

“ஏங்க இந்தப்பக்கம்? நான் எதிர்பாக்கவேயில்லை”

“ நாங்கள் உங்க சிவபுரத்துக்கை குடி வந்திட்டம். அங்க தான் போகவிடாம பண்ணிட்டீங்களே” என்ற லெச்சிமியை வியப்போடு பார்த்தாள்.நளாயினி “என்ன? …பண்ணிட்டிங்களா…”

“பின்ன என்னங்க உங்கட மாதர் மாநாட்டுக்கு கூட்டிற்றுப் போனீங்க, பிறகு நகரசபையில பேசச்

சொன்னீங்க நாங்களும் உங்களை மறுத்து பேச முடியாம சொன்னதெல்லாஞ் செய்தம் இப்ப அவங்கள் வந்து (புளொட்) பூந்திட்டாங்கள். வந்த உடனை கொலைமிரட்டல்தான் பிள்ளையளையாவது காப்பாத்த வேணுமே. எல்லாத்தையும் போட்டிட்டு வந்திட்டம்." கவலையோடு சொன்னாள் லெச்சிமி. பேசிக் கொண்டே அவளுடைய வீட்டருகே வந்துவிட்டதால்.

"உதுதான் வீடு" வாங்க ஒரு தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம் என்று கேட்க ஆசைதான் அவர்கள் வவுனியாவில் உள்ள தனது வீட்டுக்கு வந்த போது தேநீர் குடிக்க மறுத்ததை நினைவில் கொண்டு, அவள் கேட்கவில்லை. ஆனால் செண்பகா "அக்கா அங்க போய் தண்ணி குடிச்சிட்டுப் போவமா?" என்றாள். "சரி வாங்க" என்றபடி லெச்சிமி முன்னே நடந்தாள். வீட்டில் அவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது மகளும் மருமகனும் வந்திருந்தார்கள்.

"பிள்ளையள, இஞ்ச விட்டிட்டு அங்க நிக்க மலர் கவலைப்படுறாள் அதுதான் மலரையும் கூட்டிக் கொண்டு வந்தன்" என்றான் மருமகன். அதற்குள் மலர் எல்லாருக்குமாக தேசிக்காய் கரைத்து எடுத்து வந்தாள். நளாயினியும் செண்பகாவும் வெளியே வாழைமர நிழலில் இருந்தார்கள். நளாயினியின் காற்சட்டை முழங்காலுக்கு சற்று கீழே கிழிந்திருந்தது.. லெச்சிமிக்கு பாவமாக இருந்தது பிள்ள என்ர நைட்டியப் போட்டுக் கொண்டு உதை கழட்டித்தா நான் இழைப்பிடிச்சுத் தாறன்" என்றாள்.. நளாயினி ஒப்புக் கொண்டு அதை கழற்றி கொடுத்துவிட்டு வீட்டுக்குள்ளேயே நின்றாள் லெச்சிமி விரைவாக அதை தைத்து முடித்து அவளிடம் கொடுத்தாள்.

"வரக்க திடீரெண்டு ஹெலி வந்திட்டுது பாஞ்சு பத்தைக்க போக முள்ளு கிழிச்சிட்டுது" என்றாள் நளாயினி. அதைப் போட்டுக் கொண்டு, அப்ப நாங்க போயிற்று வாறம் என்றபடி அவர்கள் புறப்பட்டார்கள்.

"வரக்க கொஞ்சம் தேசிக்காய் கொண்டு போங்க" என்றாள் லெச்சிமி. அவர்கள் சென்றுவிட்டார்கள். மலர் வீட்டிற்கு வந்தது ஆறுதலாக இருந்தது. வீட்டு வேலை களுடன் பிள்ளைகளையும் அவளேபார்த்துக்கொண்டாள்.

எனவே வெளியே திரிந்து கறிக்கு ஏதாவது தேடுவதும் வீட்டுக்கு தேவையான பால் தயிர் முதலிய வற்றை வாங்கவும் லெச்சிமியால் முடிந்தது. இந்தப் பொருட்களில் எந்தவொன்றுக்கும் பணம் தேவைப்பட வில்லை. அத்தனையும் இனாமாகவே கிடைத்தது. பண்டைக்கால வழக்கப்படி பால் விற்பது குற்றம் என்றார்கள். மாடு இல்லாதவர்கள் பெரும் பட்டிகளுக்கு பால்கறக்கப்போவார்கள். கறக்கும் பாலில் பாதி இவர் களுக்கு மாட்டுக்காரருக்கு பாதி. ஆக, அந்தளவு பெருக்கமான மாட்டுப்பட்டிகள் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் பால்தயிர் நெய் என கிடைத்ததை விட தேனும் அவ்வளவு புழக்கத்தில் இருந்தது. காட்டுக்கறிகளாக வேட்டைப்பொருட்கள். கானக் கொச்சிக்காய் வட்டுக் காய் குருவித்தலைபாகற்காய், என விளைந்து கிடந்தது காடு. குடிபெயர்ந்த மக்கள் கைவிட்ட எலுமிச்சை கொய்யா மரமுந்திரிகை என்பன வனத்துள் கிடந்து பழுத்து சொரிந்தன. லெச்சிமிக்கு தனது சின்ன வயது திரும்ப வந்தது போல ஒரு குதூகலம். ஆனாலும் தனது பிள்ளைகளின் படிப்பு அவளை பெரிதாக வாட்டியது.

படிப்பை விட்டுவிட அவளுக்கு மனம் ஒப்ப வில்லை பூவரசன்குளம் பாடசாலை கிடைத்ததையிட்டு அவள் மிக மகிழ்ந்தாள். அன்று ஒரு திங்கட்கிழமை பாடசாலைக்குப்புறப்பட்ட சுதனும் சிவாவும் இப்போது அபிராமியும் பூவரசன்குளத்துக்கு மாற்றப்பட்டிருந்தாள். எனவே அவளை அழைத்து செல்ல காத்திருக்க திடீரென வான்பரப்பிற்குள் விமானங்கள் வட்டமிட்டன. எல்லோரும் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க விமானத்திலிருந்து ஒரு சின்ன மில்க்மெய்ட் பால்ரின்" கீழே வந்தது. அது சுழன்று நெஸ்டோமோல்ட் பேணியளவாகி கீழே இறங்க காடு மறைத்தது. சத்தம் பூமியை அதிர வைத்தது. மயில்கள் அவலமாக குரலெழுப்பின. அங்குமிங்கும் பறந்தன. மந்திகள் ஆர்ப்பரித்தன. யானைகளின் சீறல் துல்லிமாக கேட்டது.

"பூவரசங்குளம் பள்ளிக்கூடத்தடியிலதான் பெரல் தள்ளிவிட்டிட்டாங்கள் என்றபடி தம்பிராசா ஓடிவந்தான்"

*14*

அத்தடிப்பட்டு ஓடிவந்த தம்பிராசா கடைத் தெருவுக்கு போவதற்காகத்தான் போனவன். திரும்பி வந்துவிட்டான். அவனுடைய அன்றைய பிழைப்பில் தடைவந்தது. அன்றாடம் வவுனியா நகருக்குள் செல்ல முடியாததால் சில்லறை சந்தையாக பூந்தோட்டத்தில் தற்காலிகமாக உருவான தெருச்சந்தையில் பொருட் களை வாங்கி வந்து, உள்ளூரில் விற்பனை செய்யும் தமது தேவைகளுக்கு பயன்படுத்தியும் வாழும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களில் அவனது குடும்பமும் ஒன்று.

இன்னமும் வவுனியாவில் தங்கி அன்றாடம் வீட்டுப் பொருட்களை பூந்தோட்டம் சந்தைக்கு கட்டி வரும் கரனிடம் லெச்சிமி போய் பொருட்களை கைமாறி தனது மிதிவண்டியில் கட்டி வருவாள். இதற்காக அதிகாலையில் மலர் எழுந்து கணவனுக்கு மத்தியான உணவையும் காலை உணவையும் சமைத்து கட்டிக் கொடுப்பாள். அதை கரனிடம் கொடுத்துவிட்டு பொருட் களுடன் திரும்புவாள் லெச்சிமி. இதற்காக தினசரி சிவ புரத்திலிருந்து பூவரசன்குளம் மூன்று மைல் பூவரசன் குளத்திலிருந்து வவுனியா எட்டுமைல் அதுவும் மொத்த மாக நேர்வழியில் சென்றால்தான் இவர்களது பாதை வேறு நெழுக்குளம் மன்னார்வீதியில் வவுனியாவி லிருந்து இரண்டாவது மைலிலும், பூவரசன்குளத்தி லிருந்து ஆறாவது மைலிலும் வரும். அங்கிருந்து நகருக்கு போக முடியாது எனவே நெழுக்குளம் குழு மாட்டுச்சந்தியில் திரும்பி மரக்காரம்பளை வரை சென்று, அங்கு சேனைப்பிலவுகளின் ஊடாக தாண்டிக்குளம் சென்று தாண்டிக்குளம் தனியார் காணிகளினூடாக பயணித்து சிறு தெருவை அடைந்து அங்கிருந்து சாந்த சோலை வழியாக பூந்தோட்டத்தை அடைய வேண்டும் கிலோ மீட்டரில் சொல்வதானால் பதினாறு கிலோ மீட்டருக்கும் கொஞ்சம் அதிகமாகத்தான் வரும். போக வர இந்த முப்பத்திரண்டு கிலோமீட்டர் தொலைவு அவளுக்கு சலிப்பதில்லை. காலை ஏழுமணிக்கு வீட்டி லிருந்து மிதிவண்டியில் புறப்பட்டால் மாலை மூன்று நான்குமணிக்கு வீட்டுக்கு வந்துவிடுவாள்.

திடீரென ஒருநாள் குழுமாட்டுச்சந்தி இராணு வத்தினரின் உலங்கு வானூர்தியின் தாக்குதலுக்கு உட்பட்டது. அதில் மூவர் கொல்லப்பட்டிருந்தனர். அதனால் அந்தப்பாதை கைவிடப்பட்டது. நேரடியாக இரணை இலுப்பைக்குளம் வந்து கல்மடு ஈச்சங்குளம்

வழியாக புதுக்குளம், அப்படியே காடுமலை கடந்து பரண் நட்டகல் வழியாக ஏ9 வீதியை எட்டி திரும்பி சாந்த சோலை வழியாக மக்கள் பயணித்தனர். கரன் பொருட்களை கொண்டுவரும் போது தனது மிதி வண்டியை ஒரு வீட்டில் விட்டுவிட்டு வருவான். பொருட் களை தலையில் சுமந்துதான் சந்தைக்கு கொண்டு வருவான். இப்போது புளொட் இயக்கத்தினர் அந்த சைக்கிளைப்பற்றி விசாரிக்க அந்த வீட்டிற்கு சென்றனர். “யாருடைய சைக்கிள்? ஏன் இதில நிக்கிது? ஆள்வந்தா எங்களை சந்திக்க சொல்லுங்க” என்று கூறிவிட்டு போயிருந்தனர். கரன் வந்தபோது அந்த வீட்டுக்காரர் அவனிடம் விபரத்தை சொல்லி “தம்பி நீ மாறு வீட்டுச்சாமான்கள் இன்னும் கிடக்கோ என்று கேட்க, “இல்லை அது “வாட்டர்ப்பம்” இதோட சரி” என்றவன் அதை இறக்காமல் அப்படியே கொண்டு வந்தான். லெச்சிமியிடமும் சில வாங்கவேண்டிய பொருட்களை வாங்கி கொடுத்தவன் அவளுடன் சிவபுரத்துக்கே வந்தான். இனி அவர்களுடைய வீட்டிற்கு திரும்ப வரு வானா மாட்டானா? காலம் என்ன விதித்திருக்கிறது.?

கரன் வந்த சில நாட்களிலேயே அங்கே தோட்டம் செய்வதற்கான முயற்சிகளை செய்தான். சுதன் சிவா இருவருக்கும் பாடசாலை மறுபடி ஆரம்பித்திருந்தது. அபிராமியும் அவர்களுடன் சென்று வந்தாள்.. சுதனும் லெச்சிமியும் சிவாவும் தனியாக சடையலை வைத்துக் கொள்ளவில்லை. பொருட்களை ஒன்றாகவே வைத்திருந்தனர் அத்துடன் வீட்டுப் பொருட்களை விட உழைப்பிலும் அவர்களே அதிகமாக இருந்தனர். ஆனாலும் என்னவோ லெச்சிமி தமக்கு முன்னே இருந்த இரண்டு ஏக்கர் அளவான காணியை மந்து கொத்தி துப்பரவாக்கி பயிரிடலாம் என முடிவெடுத்தாள். அதை மகன்களுடன் சேர்ந்து புழுதிபட மந்து கொத்திப ண்படுத்தி அதில் எள் விதைத்தாள் எள்ளை விதைத்து விட்டு மாடுகளை அதன்மீது ஓடவிட்டால் எள் புழுதியில் மறைந்து விடும் மழை வரும் போது வேலியை அடைத்து விட்டால் எள் முளைத்து வரும் அந்த முறைப்படி எள்ளை விதைத்தாயிற்று இனி மழை வரட்டும் அதற்குள் நான் சரணடைவித்த மகனை தேடிப்போகலாம் என நினைத்தாள்.

இதற்குள் அவளால விடுதலைப்புலிகளிடம் சரணடைய வைக்கப்பட்டிருந்த சந்துருவைப்பற்றி எதுவும் தெரியவில்லை எனவே அவள் இரணை இலுப்பைக்குளத்திலிருந்த புலிகளின் அரசியற்றுறை முகாமுக்குச் சென்று விசாரித்தாள். இது ஆயிரத்து ஓராவது முறை என் சொல்லலாம். அவ்வளவு பதற்றத் திற்குள்ளும் அவள் ஒவ்வொரு முகாமிலும் சென்று விசாரிப்பது வழக்கமாகவே இருந்தது. அவனைப்பற்றிய தகவலை யாரும் தரவில்லை.. “ச்சை மடத்தனமான காரியஞ் செய்திட்டன் நான் வீட்டிலயே வச்சிருந் திருந்தா அவயள கேட்டநேரம் சுதனோடயே விட்டு எடுத்திருக்கலாம்” அவனை நினைத்து அவள் உருகாத நாளில்லை கொண்டு போனாங்களே இன்னுமா விசாரிக்கிறாங்கள். நாசமாப்போவார்“ எவ்வளவுதான் சோதனை வரும் உயிரோட பிள்ளைய கொடுத்த வேதனையை அவளால் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை. அவளைப் போலவே ஏராளமான பெற்றோர் பிள்ளைகளை தேடி அலைந்து கொண்டிருந்தனர். பொதுமன்னிப்பு வழங்குவோம் என வாக்களித்தவர்கள். அந்தப்பிள்ளைகள் பலவந்தமாக பிடித்து செல்லப் பட்டவர்கள் என்று தெரிந்தும். இப்படி மாதக்கணக்கில் அந்தப் பிள்ளைகளை வைத்திருக்கிறார்களே யாரிடம் முறையிட முடியும். தெய்வமும் கண்களை மூடிக் கொண்டிருந்தது.

இரணை இலுப்பைக்குளத்தில் இருந்த பொறுப்பாளர், அன்பாக பேசினான் “அம்மா அநேகமா எல்லாரையும் யாழ்ப்பாணத்திலதான் வச்சிருக்கினம். ஏங்களுக்கும் அவைக்கு பிரிவு வேற, நாங்கள் ஒரு கடிதம் தாறம் எடுத்துக் கொண்டு போய் அங்க கேட்டுப்பாருங்க“ என்றவன் போக வேண்டிய இடத்தின் முகவரியையும் சொன்னான். “எப்ப போறீங்க” என்றான்.

“ நாளைக்கு காலமை வெளிக்கிடுறன்” என்றாள்.

“ஓ… அப்ப இதாலதானே போகவேணும் போகேக்க கடிதத்தை வாங்கிக்கொண்டு போங்க” என்றான். அவள் சோர்வோடு வீடு திரும்பினாள்.

“நாளைக்கு யாழ்ப்பாணம் போறன் சந்துருவத்தேடி” என்றாள்.

கரன், “அப்படியே” என்றவன். அவளுடைய மிதிவண்டியை எடுத்து அதன் ரயர்களைப் பார்த்தான். அவள் ஒரு கோல்மன்ஸ் பக்கட், ஒரு பிஸ்கட்பக்கட். தண்ணீருக்கு ஒரு போத்தல் என்பவற்றையும் குடிக்கிற ரம்ளரும், சின்ன யொக்கும், எடுத்தாள். ஒரு சொலிஷன் டப்பா, காற்றடிக்கும் பம்பி ஒன்று, பழைய ரியூப் துண்டு கள், கொம்பவுண்ட ஒரு துண்டு, சில்லு கழற்றக்கூடிய லிவர் இரண்டு, என்பவற்றையும் அதே பையில் போட்டு சைக்கிளின் கான்டிலில் கொழுவினாள். மலர் அதி காலையிலேயே எழுந்து மத்தியான உணவு வேறாகவும் காலை உணவு வேறாகவும் கட்டிக் கொடுத்தாள். சுதன் காசு நூற்றைம்பது ரூபா கொடுத்தான். காணுமா அம்மா?” என்றும் கேட்டான். என்னடா எல்லாம் கையில இருக்கு மிஞ்சி மிஞ்சிப் போனா ஒரு வேளை சாப்பாட்டுக்கு காசு தேவைப்படும். என்று சொல்ல மலர் ஒரு ஐம்பது ரூபாவைக் கொடுத்தாள். அதையும் வாங்கி பக்குவமாக சேலைத்தலைப்பில் முடிந்து கொண்டாள். இப்போது சிவா ஓடிவந்து “அம்மா நானும் வரட்டா” என்று கேட்டான்.

“எங்கடா போறவழி எனக்கே புதுசு. இதில உன்னையும் டபுள் போட்டுக்கொண்டு எப்பிடிப்போறது. பள்ளிக்கூடமிருக்கெல்லே போ இன்னுமொருக்கா போனா கூட்டிக் கொண்டு போறன்.” அவன் முகம் கோணிக்கொண்டது. சிணுங்கியவாறே அகல, “டேய் ஒரு நல்ல காரியமா போகேக்க மூஞ்சய ஈத்திறா ஙா… நல்ல பழக்கம்” என்று மலர் கண்டித்தாள்.

காலையில் அவள் தியானம் முடித்து எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள். ஏழேகால் மணிக்கெல்லாம் இரணை இலுப்பைக்குளம் முகாமில் நின்றாள். அவர்களும் தாமதிக்காமல் கடிதத்தை எழுதி ஒரு கவரில் போட்டு கொடுத்தனர் அதை பத்திரமாக எடுத்து வைத்துச் கொண்டாள். அவளது மிதிவண்டி யாழ்ப்பாணம் செல்வதற்கான பழைய கால மன்னர்கள் பயன்படுத்திய குதிரைப் பாதையில் இறங்கியது.

“அடர்வனம் கவனம் தொலைவக் கவனிச்சுப் போங்க எங்கட சனம் உள்ளுக்க சிரமதானம் செய்யுதுகள். பயமில்ல” என்றான் சென்றியில் நின்ற சின்னவன்.

(தொடரும்)